திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மே 2021..... விலை ரூ.5/-



திருப்பதி

ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

2021, மே 18 முதல் 26 வரை

திருமலை திருப்பதி தேவஸ்தானம்



# திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

**2021 மே 18 முதல் 26 வரை**

**18-05-2021 செவ்வாய்க் கிழமை**

பகல் : துவஜாரோஹணம் -- இரவு : பெரிய சேஷ வாகனம்.

**19-05-2021 புதன் கிழமை**

பகல் : சிறிய சேஷ வாகனம் -- இரவு : ஹம்ச வாகனம்.

**20-05-2021 வியாழக்கிழமை**

பகல் : சிம்ம வாகனம் -- இரவு : முத்துப்பந்தல் வாகனம்.

**21-05-2021 வெள்ளிக்கிழமை**

பகல் : கல்பவிருக்ஷ வாகனம் -- இரவு : சர்வபூபால வாகனம்.

**22-05-2021 சனிக்கிழமை**

பகல் : பல்லக்கில் மோகினி அவதாரோத்ஸவம் -- இரவு : கருட வாகனம்.

**23-05-2021 ஞாயிற்றுக்கிழமை**

பகல் : அனுமத்வாகனம் -- இரவு : யானை வாகனம்.

**24-05-2021 திங்கட்கிழமை**

பகல் : சூரியப்பிரபை வாகனம் -- இரவு : சந்திரப்பிரபை வாகனம்.

**25-05-2021 செவ்வாய்க்கிழமை**

பகல் : திருத்தேர் -- இரவு : குதிரை வாகனம்.

**26-05-2021 புதன் கிழமை**

பகல் : சக்கரஸ்நானம் -- இரவு : துவஜாவரோஹணம்.



*ப்ரத்யாதிஷ்ட புராதந ப்ரஹரண*
*க்ராம: க்ஷணம் பாணிஜை:*
*அவ்யாத் த்ரீணி ஜகந்த் யகுண்ட்ட மஹிமா*
*வைகுண்ட்ட கண்ட்டீரவ: ।*
*யத் ப்ராதுர்ப்பவ நா தவந்த்ய ஜடரா*
*யாத்ருச்சிகாத் வேதஸாம்*
*யா காசித் ஸஹஸா மஹாஸுரக்ருஹ*
*ஸ்த்தூணா பிதாமஹ் யபூத்॥*

**கணப்பொழுது நகங்களால் மறுக்கப்பட்ட பழமையான ஆயுதக் கூட்டத்தை யுடையவனாய், வீணாகாத சக்தியுடையவனாயுள்ள நரசிங்க வடிவு கொண்ட எம்பெருமான் மூன்று உலகங்களையும் காத்தருள வேண்டும். எதிர்ப்பாராது உண்டான எவனுடைய அவதாரத்தால் எதோ ஒரு பெரிய அசுரனுடைய வீட்டுத் தூண் மலட்டுத் தன்மை நீங்கியதாய் விரைவில் பிரமதேவர்களுக்கு தந்தையைப் பெற்ற பாட்டியாக ஆயிற்றோ.**

*- ஸ்ரீதசாவதார ஸ்தோத்ரம்*



*யாவதே$_3$தாந்நிரீக்ஷேஹம்*
*யோத்$_3$து$_4$காமாநவஸ்தி$_2$தாந் |*
*கைர்மயா ஸஹ யோத்$_3$த$_4$வ்யம்*
*அஸ்மிந்ரணஸமுத்$_3$யமே ||*

**இந்தப் போர் முயற்சியில் என்னால் எவரெவருடன் போரிட நேருமோ, யுத்தம் செய்யும் ஆசையுடன் அணிவகுத்து நிற்கும் இந்த எதிரிப்படை வீரர்களை எவ்வளவு நேரம் நான் பார்ப்பேனோ, அவ்வளவு நேரம் ரதத்தை நிறுத்தி வையுங்கள்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–22*



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை"

*"மானிட சேவையே மாதவன் சேவை" எனும் பெரும் நோக்கத்துடன் தி.தி.தேவஸ்தானம் பல்வேறு சமூக நலச் செயல்களை நிர்வகிக்கின்றது. இதில் ஒரு பகுதியாக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கத்துடன் 1943–ஆம் ஆண்டு ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் (திருப்பதி) அறக்கட்டளையை தி.தி.தே. நிறுவியது. இந்த ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் அறக்கட்டளையோடு ஸ்ரீவேங்கடேஸ்வரா ஜலநிதி திட்டம், கல்யாண மஸ்து திட்டம், ஸ்ரீவேங்கடேஸ்வரா தகவல் தொழில் நுட்ப அறக்கட்டளை போன்றவற்றை இணைத்து "ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை" யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.*

**திட்டத்தின் நோக்கங்கள் :**

1) ஆதரவற்ற சிறார்கள், முதியோர், ஆதரவற்றோர் பாக்கியமற்றோர், ஏழ்மையில் வாடும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் போன்றோரின் வளர்ச்சி, பாதுகாப்பு நலனுக்காக தர்மசாலைகள், தங்கும் வசதி, இல்லங்கள் ஏற்படுத்துதல். பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு பண உதவி அளித்தல்.

2) மாற்றுத் திறனாளிகளுக்கும், மனவளம் குன்றிய நோயாளிகளுக்கும் தகுந்த மருத்துவ உதவிகள் உண்டு பண்ணி அவர்களின் வாழ்வினை மேம்படுத்துவது, குலம், மதம், ஜாதி, வர்க்கம், வர் ணம் போன்ற வேறுபாடுகள் கடைப்பிடிக்காமல் அனைவரையும் சமமாகப் பார்ப்பது.

3) வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங்களின் போதும், தீப்பிடித்தல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போதும் விரைவான உதவிகளை மேற்கொள்ளுதல்.

4) காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்கும் மேற்படி குறைபாடுகளோடு பிறக்கும் சிசுக்களுக்கும் மறுவாழ்வு மையங்களை ஏற்பாடு செய்தல்.

5) மேற்குறிப்பிட்ட குறைபாடுகளோடு கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான கருவிகளை அளித்தலோடு, அவர்களுக்குக் கல்வி போதித்தல்.

6) மக்களுக்கு மிகவும் தேவையான குடிநீர் வசதியை ஏற்படுத்தித்தருதல், திருமலை பஞ்சா யத்து, திருப்பதி மாநகராட்சிக்குத் தேவையான நீர் வள ஏற்பாட்டிற்காக தடுப்பணைகளை ஏற்பாடு செய்வது, நீர் சேகரிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7) புத்தகங்களுடன் இணைய தளம் முதலான அதிநவீன தொழில் நுட்ப உதவிகளோடு நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டு கலாச்சார பாரம்பரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு அளிப்பது.

8) சமுதாய ஒழுக்கம், அற நெறிமுறைகளை வளர்த்து இளைஞர்களிடையே ஆன்ம நேய நம்பிக்கையை உண்டு பண்ணுதல்.

9) உதவிகரமான திருமண நிகழ்வுகள் மூலம் மண மக்களை கௌரவ அபிமானத்துடன், உயர் குடும்ப வாழ்க்கையை வாழும்படி செய்தல்.

10) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஊக்கமளித்திட தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி அளிப்பது.

11) மேலே விவரித்த இலட்சிய சாதனங்களில் இலாபம் ஈட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் பார்ப்பது.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை நன்கொடையாளர்களுக்கு :**

1) இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.1,000/-

2) ரூ.1,000/-க்கு குறைவாக நன்கொடையளித்தால் எவ்விதத் தகவலும் இன்றி ஸ்ரீவாரி உண்டிக்கணக்கில் செலுத்தப்படும். பெறப்படும் நன்கொடைகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை இத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நன்கொடையை வழங்குபவர்கள் - "செயலாட்சித் தலைவர், ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி" எனும் பெயரில் காசோலை / வங்கி கேட்பு வரைவோலையை "பிரதான கணக்காளர், தி.தி.தேவஸ்தானம், திருப்பதி - 517 507" எனும் முகவரிக்கு அனுப்பவும்.



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி


சமய மாத இதழ்

மே 2021

மலர் 51
இதழ் 12



*சிறப்பு ஆசிரியர் :*
Dr. K.S. **ஜவஹர் ரெட்டி,** ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
*பிரதான ஆசிரியர் :*
**பேராசிரியர் K. ராஜகோபாலன்,** பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு. பி.ராமராஜு,** எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்),
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
*புகைப்படங்கள் :*
**திரு. P.N. சேகர்**
**திரு. B. வெங்கடரமணா**



***பிரதிகளுக்கு:***
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
**0877- 2264543, 2264359**
**ஆசிரியர் : 2264360**



நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org



| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை

பக்கம்


**பக்தவாத்ஸல்யன்** - திரு. எஸ். சுதர்சனம், நங்கைநல்லூர். 7
**திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம்: பொருள் தேடி புறப்பட்டான்** 11
- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.
**மட்டபல்லி ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி ஆலயம்** 13
- திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி.
**ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்: வீர்யவான்** 16
- திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.
**மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்...** 17
- ஸ்ரீ. உ.வே.அ. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவரங்கம்.
**தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்** 20
- திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி.
**மணவாள மாமுனிகள் காட்டும் சீர்மாறன்** - வளவ.துறையன், கடலூர். 22
**ஆதிசங்கரர் அருளிய அருள் நெறிகள்** 25
- முனைவர். ச. செந்திலாண்டவன், சென்னை.
**திருவேங்கடவன் திருலீலைகள்: திருவேங்கடவனின் திருவருள்** 31
- திரு. பி.முத்துகுமார், சிவகாசி.
**யோகமும் ஆன்மீகமும்** 32
- டாக்டர் கி.ஜ. நிகிலாவெங்கட், கோயம்பத்தூர்.
**பூர்வாசார்ய ஸ்தோத்ரங்கள்: ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரம்** 35
-உ.வே. டாக்டர். அனந்தபத்மநாபாசாரியார் ஸ்வாமி, சென்னை.
**108 திவ்வியதேச வைபவம் – திருத்தண்கால்** 39
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.
**அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** 42
- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.
**ஆயுர்வேதம் : கொரோனாவை அழிக்கும் அருமருந்து ஆயுர்வேதம்** 44
- திருமதி உஷா, திருப்பதி.
**ஸ்ரீமத் பகவத்கீதை** - டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். 46
**அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : யுதிஷ்டிரர்** - திரு. சத்யதாரா, சென்னை. 48
**நீதிக்கதைகள் : கு(ரு)ட்டு நம்பிக்கை** 51
- திரு. டி.ரங்காசாரி, திருவரங்கம்.
**சித்திரக்கதை: வாழ்வு வளம் பெற!** 52


### அட்டைப்பட விளக்கம்

**முன்னட்டை :** ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி (உற்சவர்), திருப்பதி.

**பின்னட்டை :** திருவேங்கடவனை போற்றும் அன்னமய்யா



உங்களுடன்...

# நலம் தரும் நரசிம்மர்

எப்பொழுதெல்லாம் அதர்மம் ஓங்கி உலகம் சீர்குலைகிறதோ அப்பொழுதெல்லாம் சாதுக்களை காத்து, தீயவர்களை அழித்து அறத்தை நிலை நிறுத்த நான் அவதரிப்பேன் என்கிறார் பகவத்கீதையில் பரம் பொருளான கண்ணபிரான். நாரதர் பகவானிடம் மகா பிரளயம் ஏற்படும் போது தங்களை எந்த வடிவில் வழிபடுவது என்று கேடக, பகவான் தன்னுடைய அவதார தத்துவங்களை விளக்க. *''அஜோபி ஸந்நவ்ய யாத்மா பூதாந''*. அதாவது "நான் பிறப்பில்லாதவனாகவும், பரிணாமமில்லாதவனாகவும், சகல பூதங்களுக்கும் ஈச்வரனாகவும் இருந்தும் என்னுடைய ஈச்வர சுபாவத்தை விடாமல் சங்கல்ப ரூப ஞானத்தால் ஜனித்துக் கொண்டிருக்கிறேன்" என்கிறார். இதனையே நம்மாழ்வாரும் "இணைவன் ஆம் எப்பொருட்கும் வீடு முதலாம் புணைவன் பிறவிக்கடல் நீந்துவார்க்கே" அதாவது சகல பூதங்களுக்கும் ஈச்வரன் என்பதை காட்டுகிறார்.

மத்ஸ்யமாகவும், கூர்மமாகவும், வராகமாகவும் அவதரித்த பரம்பொருளான மகாவிஷ்னு பிரகலாதனை காக்க நரசிம்மனாக அவதரித்தார். நரசிம்ம அவதாரம் என்பது "இறைவன் எங்கும் வியாபித்துள்ளான்" என்பதை உணர்த்துவதாகும். மகாவிஷ்னுவின் அவதாரங்களிலேயே திடீரென தோன்றிய அவதாரம் நரசிம்மாவதாரமாகும். அசுர சம்பத்துக்கும் தெய்வீக சம்பத்துக்கும் கொடுமையான போர் ஆனது தினம் நடந்து கொண்டிருக்கிறது. இறுதியில் தெய்வீக சம்பத்தே வெற்றி பெறுகிறது. இதில் பிரகலாதன் வெற்றி பெறுகிறான். பகவான் பக்தனுக்கு உதவி செய்ய காத்துக் கொண்டிருக்கிறார் என்பதை உணர்த்துவதே நரசிம்மாவதாரமாகும். பரிக்ஷித் மன்னனுக்கு விஷ்னு எடுத்த அவதாரங்களைப் பற்றி சுகமகரிஷி கூறும் போது, சினம் கொண்டு சிங்க முகத்துடன் தோன்றி, கதையால் தன்னைத் தூளாக்க வந்த இரண்யனைக் கொன்று பிரகலாதனை ஆசீர்வதித்தது நரசிம்மாவதாரமாகும் என்கிறார்.

பக்தனான பிரகலாதனை இரண்யகசிபுவின் கொடுமைகளிலிருந்து காக்கவே இந்த அவதாரமாகும். இந்தத் தூணில் இருக்கின்றானா? என்று ஆணவத்துடன் கேட்ட இரண்யனிடம் *''சாணினும் உளன் மாமேருக் குன்றினும் உளன், நின்ற தூணிலும் உளன்''* என்று பிரகலாதன் அளித்த பதிலை மெய்ப்பிக்க தாமதிக்காமல் தூணைப் பிளந்து வந்து இரண்யனை அழித்த அவதாரமாகும். இறைவன் தன் விஷயத்தில் தீமை செய்தாலும் பொறுத்துக் கொள்வான். ஆனால் தன்னிடம் பக்தியுடன் இருக்கும் அடியவர்களுக்குத் தீங்கு செய்தால் அதை ஒருபோதும் பொறுத்துக் கொள்ளமாட்டான் என்ற உட்பொருளை இந்த அவதாரத்தில் திருமங்கையாழ்வார் காட்டுகிறார். இதனையே நம்மாழ்வாரும் பிரகலாதனுக்கு அருள் புரிய நரசிம்மனாகத் தோன்றிய பெருமான் தனக்கு உதவ வரவில்லையே என்று ஏங்கி பாசுரமிடுகிறார்.

வேதாந்த தேசிகரும் தசாவதார ஸ்தோத்திரத்தில் இந்த அவதாரம் பற்றி குறிப்பிடும் போது "திடீரென்று பகவான் தோன்ற வேண்டிய அவசியம் நேர்ந்ததால் அவன் வீட்டுத் தூண் இறைவனையே பிரசவிக்கும் பாக்கியம் பெற்று விட்டது. இரண்யகசிபுவிற்கு ஏற்பட்ட பாக்கியமே பாக்கியம்" என்கிறார். நரசிம்ம அவதாரம் பற்றி முதன் முதலில் முழுமையாக கம்பர் தான் இயற்றிய இராமகாதையில் (இராமாயணத்தில்) கூறுகிறார். கம்பர் இராமாயணத்தை திருவரங்கத்தில் மேட்டழகிய சிங்கர் சன்னதிக்கு அருகில் உள்ள மண்டபத்தில் அரங்கேற்றம் செய்த போது நரசிம்மரே இசைவு தந்தாராம்.

ஆதிசங்கரர் அகோபிலத்தில் தன்னை காத்தருளிய நரசிம்மரைப் போற்றி ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம கராவலம்ப ஸ்தோத்திரம் அருளினார். இந்த ஸ்தோத்திரத்தை தினமும் பாராயணம் செய்து வந்தால் எதிர்காலம் சிறப்பாக அமைவதோடு எதிரிகளின் தொல்லைகள் நீங்குமாம். திருமங்கையாழ்வார் "அக்காரக்கனி" என்று நரசிம்ம மூர்த்தியை போற்றி பாடியுள்ளார். சுவை மிகுந்த கனி போன்றவராம் நரசிம்மர். ஆபத்தில் நமக்கு உதவுபவர்கள் அழகாக நம் கண்களுக்குத் தெரிவர். பிரகலாதன் ஆபத்தில் தவிக்கும் போது உடனே ஓடி வந்து காத்து நின்றார். எனவே அவர் தான் அழகர் பிரான் என்பர் பெரியோர். ஆதலால் தான் அழகிய சிங்கர் என்றும் அழைக்கப்படுகிறார்.

இன்று, இவ்வுலகம் கொரோனா வைரஸ் எனும் பெரும் தொற்று நோயினால் பீடிக்கப்பட்டுள்ளது. இந்த வைரஸ் அலை அலையாக வந்து ஆட்களை அள்ளி செல்கிறது. இந்த தொற்றில் இருந்து நம்மையும் நம்மைச் சுற்றி இருப்பவரையும் பாதுகாப்பது நமது கடமை. இந்த இக்கட்டான நேரத்தில், கூடுமானவரை வீட்டிலேயே பாதுகாப்பாக இருந்து, பிரகலாதன் நரசிம்மப் பெருமானிடம் கொண்ட பக்திப் போல் நாமும் பெருமாளிடம் பக்தி கொண்டு, அனுதினமும் ஸ்தோத்திரங்களைத் துதித்து வழிபட்டு வந்தால், நாமும் நம்மை சுற்றி இருப்பவரும் இன்னல்களிலிருந்து மீண்டு, இப்பூவுலகில் சுகமாக வழலாம்.

*''சர்வேஜனா: சுகினோ பவந்து''*

# பக்தவாத்ஸல்யன்



ஒரு தாய்ப்பசு தான் ஈன்றெடுத்த கன்றினிடம் காட்டும் அன்பு. அன்று ஈன்றெடுத்த அக்கன்றின் மேல் உள்ள அழுக்கை அன்புடன் தனது நாக்கால் நக்கி விலக்குவது போன்று, பகவானும் பக்தர்களின் தோஷங்களைப் பாராமல், அத்தோஷங்களையே போக்யமாகக் கொண்டு, குன்றனைய குற்றம் செய்யினும் குணம் கொண்டு, பக்தர்களைக் காப்பாற்றுவான் என்பதால் "பக்தவாத்ஸல்யன்" என்று போற்றப்படுகிறான். தனக்கு பக்தர்கள் கிடைத்த பரபரப்பில், மகிழ்ச்சி பரவசத்தில் எல்லாவற்றையும் மறந்து அவர்களைக் காப்பாற்றுவதிலேயே குறிப்பாக உள்ளவன் பகவான் ஸ்ரீமந் நாராயணன் என்பதால் "பக்தவாத்ஸல்யன்" என்று போற்றப்படுகிறான்.

*"ஊரிலேன் காணியில்லை*
*உறவு மற்றொருவரில்லை*
*பாரில் நின் பாதமூலம்*
*பற்றிலேன் பரம மூர்த்தி!*
*காரொளி வண்ணனே!*
*கண்ணனே! கதறுகின்றேன்*
*ஆருளர்களைகண்? அம்மா!*
*அரங்காமா நகருளானே"*

– திருமாலை 29

என்று பகவான் முன் சரணடைந்தால், உண்மையான பக்தியோடு வணங்கினால், பக்த வாத்ஸல்யனான பகவான் நம்மைக் கைவிடான் என்பது திண்ணம்.

*"பள்ளியில் ஓதி வந்த தன் சிறுவன் வாயில் ஓர் ஆயிர நாமம்"* (பெரிய திருமொழி 2.3.8) இது கேட்டுக் கோபமுற்று வெருண்டெழுந்தான் பிரகலாதனின் தந்தை இரண்யகசிபு. இரண்யன் ஓர் ஏகச் சக்ரவர்த்தி. பராக்ரமசாலி. கம்பீரமான தோற்றமுடையவன். கடலையும் கடந்து செல்லும் ஆற்றலுடையவன். கடலில் நீராடி, பாதாளத்தில் உணவு உட்கொண்டு, இந்திரனின் கற்பகச் சோலையில் இளைப்பாறி, இரவைப் பிரம்மலோகத்தில் கழிப்பானாம். தான் சொல்வது தான் வேத வாக்கு என்பான். புரம்பாகப் பேசினால் தண்டனை சித்தரவதைதான். தாக்ஷின்யமற்ற நிர்வாகம். கொடுங்கோல் ஆட்சி. "ஹிரண்யாய நமஹ" என்று எல்லோரும் அவன் பெயரையே பூஜிக்க வேண்டும். அவனுக்குப் பிறந்த மகன் பிரகலாதன் இக்கட்டளையை ஏற்க மறுத்தான். பாலகன் ஆனாலும் சிறந்த புத்திமான். தூய உள்ளம் கொண்டவன். வேதம் அறிந்தவன். தெய்வப்பிறவி.

திரு. எஸ். சுதர்சனம், நங்கை நல்லூர்,
99627 88065

*"அன்று கருவரங்கத்துள் கிடந்து கை தொழுதேன் கண்டேன்"* (முதல் திருவந்தாதி 6), *"அன்று கருக்கோட்டியுள் கிடந்து கை தொழுதேன் கண்டேன்"* (இரண்டாம் திருவந்தாதி 87) என்பதுபோல் கருவிலேயே திருவுடைய குழந்தை பிரகலாதன். பக்த வாத்ஸல்யனான பகவான் ஸ்ரீமந்நாராயணன் காட்டிய கருணை.

வரங்களைப் பெற கடும் தபஸ் செய்ய இரண்யகசிபு மந்திர மலைக்குச் சென்றான். அப்போது இரண்ய கசிபுவின் மனைவி கருவுற்றிருந்தாள். இந்திரனும் மற்ற தேவர்களும் இரண்யனின் மனைவியைக் கொன்று, கருவிலிருந்த குழந்தையை அழிக்க நினைத்தனர். நாரதர் தடுத்து இரண்யனின் மனைவியைத் தன்னுடன் அழைத்துச் சென்று, தர்மத்தின் ஸ்வரூபம், பரிசுத்தமான ஞானம், ஸ்ரீமந்நாராயணனே முழுமுதற்கடவுள், பரம் பொருள், உயர்வற உயர் நலம் உடையவன் என உபதேசித்தார்.

கருவிலிருந்த பிரகலாதன் இவ்வுபதேசங்களையெல்லாம் கேட்டு, பூரணம் பெற்று கருவிலே திருஉடையவனானான். அதன் விளைவுதான், குழந்தை பிரகலாதன் தன் தகப்பனார் முன் ஸஹஸ்ர நாமத்தின் பெருமையையும் மூல மந்திரம் மற்றும் எட்டெழுத்து மந்திரத்தின் மகிமையையும் பயப்படாமல் சொல்லும் திறமை பெற்றிருந்தான்.

தன் தந்தை சாகாவரம் பெற்றவன் என்று அறிவான். திக் விஜயம் செய்து இந்திரனையும் தேவர்களையும் வென்று தனக்கு அடிமையாக்கியவன் என்றும் அறிவான். ஆனாலும் பயப்படாமல் உண்மைப் பொருளின் தத்துவத்தைக் கூறினான். இரண்யனோ வெகுண்டான்.

***''நற்பொருள் காண்மின் பாடி நீர் உய்மின் நாராயணா என்னும் நாமம்''*** என்று நாராயண நாமம் செய்து நற்கதியடைய குழந்தை பிரகலாதன் தன் தந்தையையும் அழைத்தான். அவ்வளவு முழு நம்பிக்கை. மஹா விச்வாசம். ஆனால் இரண்யனோ கோபத்துடன் பொங்கி எழுந்தான். ஆணைப் பிறப்பித்தான். தான் பெற்ற பிள்ளையென்றும் பாராது ஆணவத்தோடு ஆணையிட்டான். சேவகர்களே! எனக்குப் பகைவனான நாராயணனை, பரம் பொருள் என்று சொல்லி, நாராயணனிற்கு நாம் அடிமை என்று மாறி மாறிச் சொல்லும் என் மகனைக் கொன்று விடுங்கள். ஆணையை நிறைவேற்ற சேவகர்கள் ஆயத்தமானார்கள்.



ஒரு யானைக்குட்டியை பல ஆண் சிங்கங்கள் சூழ்ந்தது போல், இரண்யகசிபுவின் சேவகர்கள் பிரகலாதனை சூழ்ந்து கொண்டு அரண்மனை வாயிலுக்கு இழுத்துச் சென்றனர். அவனைப் பல ஆயுதங்களால் தாக்கினார்கள். சிறுவனோ கண்களை மூடிக் கொண்டு பகவந்நாம சங்கீர்த்தனம் செய்ய ஆயத்தமானான். ***''ஓம் அச்யுதாய நமஹ, ஓம் அனந்தாய நமஹ, ஓம் மாதவாய நமஹ, ஓம் கோவிந்தாய நமஹ, ஓம் விஷ்ணவே நமஹ, ஓம் மதுசூதனாய நமஹ''*** என்று தொடர்ந்து பகவந் நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டிருந்தான். அழியப் போகும் உடம்பைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. அழிவேயில்லாத ஆத்மாவை பரமனிடம் சேர்ப்பது எப்படி என்பதையே தியானித்திருந்தான். அவனிடமிருந்த ஆயுதங்கள் பகவந்

நாமாக்களே. என்ன ஆச்சரியம்? பிரகலாதனைக் கொல்லும் முயற்சிகள் முறியடிக்கப்பட்டன.

பக்தவாத்ஸல்யனான பகவான் ஸ்ரீமந்நாராயணனே குழந்தையைக் காப்பாற்றினான். பிரகலாதன் உயிருக்கு ஒரு ஆபத்தும் நேரவில்லை என்றறிந்த இரண்யன் பாலகனை தீயிலிட்டு அழிக்க உத்தரவிட்டான். குழந்தை தீயில் எறியப்பட்டான். சிறுவனோ "ஹரிர் ஹரிஹி", "ஹரிர் ஹரிஹி" என்று பாபங்களை அபகரிக்கும் ஹரி நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டிருந்தான். ஆபத்து காலத்தில் பக்தர்களை நழுவ விடாத அச்சுதனை தியானம் செய்து கொண்டிருந்தான். *''போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும் செப்பு''* என்று பாட ஆண்டாள் இங்கிருந்துதான் கற்றுக் கொண்டாளோ?

வானத்திலிருந்து தேவர்கள் பூமாரி பொழிந்தனர். சிறுவனுக்குத் தீயும் குளிர்ந்ததாம். பக்தவாத்ஸல்யனான பகவான் குழந்தையைக் காப்பாற்றுகிறான். இரண்யன் திகைத்தான். ஏதோ ஒரு அபூர்வ சக்தி பாலகனைக் காப்பாற்றுகிறது என்று உணர்ந்தும் அந்த சக்தியிடம் சரணடைய முயல வில்லை.

சிறுவனை அஷ்ட சர்ப்பங்கள் உறையும் குழியில் தள்ளிவிட்டு அழிக்க ஆணையிட்டு, சிறுவனும் குழியில் தள்ளப்பட்டான். சிறுவனோ



ஆதிசேஷனையும் வேத ஸ்ரூபியான கருடனையும் தியானம் செய்தான். *''சென்றால் குடையாம், இருந்தால் சிங்காசனமாம், நின்றால் மரவடியாம்''* என்று பகவானுக்குக் கைங்கர்யம் செய்யும் உத்தமமான இரு பாகவத உத்தமர்களைத் தியானம் செய்து கொண்டே, தனக்கும் ஒழிவில் காலமெல்லாம் வழுவிலா அடிமை செய்யும் கைங்கர்யப் பிராப்தி வேண்டினான். என்ன ஆச்சரியம்! விஷப்பாம்புகள் மடமட என்று ஒடிந்தனவாம். விஷம் ஒழுகவில்லை. அம்ருதம் ஒழுகிற்றாம்.

ஐராவதம் என்னும் மதம் பிடித்த யானையை வரவழைத்தான் இரண்யன். அஷ்டதிக்கு கஜங்களும் வந்து சேர்ந்தன. பிரகலாதன் கயிற்றால் கட்டப்பட்டான். யானைகளின் எதிரில் போடப்பட்டான். யானைகள் கம்பீரமாக பிளிறிக் கொண்டு ஓடி வந்தன. பிரகலாதனுக்கு கஜேந்திரன் நினைவு வந்தது. *''அழுங்கிய ஆனையின் அரும் துயர் கெடுத்த''* பகவானை *''கைம்மா துன்பம் கடித்த பிரானை''* நினைத்து "ஆதி மூலமே" என்று கதறினான். யானைகள் பிரகலாதனை பக்தியுடன் வணங்கி விலகிப் போயிற்று. ஐம்புலன்களை வென்று எல்லா இந்திரியங்களும் பகவானுக்குக் கைங்கர்யம் செய்யவே என்று உணர்ந்தால் நாமும் காப்பாற்றப்படுவோம் என்பது உபதேசம். நான், எனது என்னும் அகங்காரம் மமகாரம்

இன்னும் இரண்யனிடம் குடி கொண்டிருந்தது.

சிறுவனைப் பாறையுடன் இறுகக்கட்டி கடலில் தள்ளினார்கள். ஆனால் குழந்தை கடலில் மிதந்தானாம். பாறை மரப்பலகை எடை தான் இருந்ததாம். கடலில் மிதந்து கொண்டே திருப்பாற்கடலில் திருப்பள்ளி கொண்டிருக்கும் பரவாசு தேவனையே நினைத்தான் குழந்தை. பக்த வாத்ஸல்யனான பகவான் பிரகலாதனை மீண்டும் காப்பாற்றினான்.

விஷம் கொடுத்து கொல்ல முயற்சியும் வீணாகியது. விஷம் அம்ருதமாயிற்று.

கோபம் குடி கொண்ட இரண்யன் கேட்கிறான். உன் கடவுள் எங்கேயிருக்கிறான்?

“எங்கும் உளன்” என்றான் பாலகன். அருகில் உள்ள தூணைப் பார்த்துக் கேட்கிறான். இத்தூணில் உன் பகவான் இருக்கிறானா? **“சாணினும் உளன், ஓர் தன்மை அனுவினைச் சத கூறிட்ட கோணினும் உளன், மாமேரு குன்றிலும் உளன், இந் நின்ற தூணிலும் உளன்”** என்று பிரகலாதன் சொன்னது தான் தாமதம். இரண்யன் அருகிலுள்ள தூணைத் தன் கையால் ஓங்கி அடித்தான். கம்பம் பிளந்தது. சிங்க முகத்துடன் மனித உடலுடன் லக்ஷ்மீ நரசிம்மர் தூணிலிருந்து தோன்றினார்.

எல்லா அசுரர்களும் அழிக்கப்பட்டார்கள். எஞ்சி நின்றான் இரண்யன். இப்போது கூட பிரகலாதன்



தந்தைக்கு சரணாகதி செய்யும்படி உபதேசிக்கிறான். இரண்யன் வணங்காமுடி மன்னன். ஆணவம் பிடித்தவன். இரண்யனை மடியிலிட்டு தன் கூரிய நகங்களால் அசுரனின் குடலைக் கிழித்து இரண்யனைக் கொன்று தர்மத்தை நிலை நாட்டினான் பகவான்.

பகவானின் திருமார்பை இருப்பிடமாகக் கொண்டு வாழும் மஹாலக்ஷ்மித் தாயார் அவ்விடம் வந்து நரசிம்மனுக்கு அருகே அமர்ந்தாள். உக்ர நரசிம்மர் லக்ஷ்மி நரசிம்மரானார். திவ்ய தம்பதிகள் பிரகலாதனை ஆசீர்வதித்தனர்.

சிஷ்ட பரிபாலனம் நடந்தது. அன்பு பொக்கிஷத்தை பிரகலாதன் வரமாகப் பெற்றான். சிரஞ்சீவியாக எல்லோர் மனத்திலும் வாழ பிரகலாதன் வரம் பெற்றான். பிரம்மதேவர் ஹோமம் வளர்க்க, தேவேந்திரன் வேதம் ஓத, தேவர்கள் புனித நீராட்ட லக்ஷ்மீ நரசிம்மரின் திருவருளால் பிரகலாத பட்டாபிஷேகம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. பக்த வாத்ஸல்யன் பகவான் என்பது நிரூபிக்கப்பட்டது.

**“ஜ்வாலா அஹோபில**
**மாலோல க்ரோட காரஞ்ச பார்கவ**
**யோக நந்த சத்ரவட பாவந**
**நவமூர்த்தய:”**

பிரகலாதனை போன்று நாமும் லக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமியை வணங்கி வாழ்வில் நோய் நொடியின்றி சகல வளமும் பெற்று வெற்றி பெறுவோம்.

# பொருள் தேடிப் புறப்பட்டான்



## திங்கள்தோறும் ஒரு திருவேங்கடப்பாசுரம் – 2

பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

சுவாமி நம்மாழ்வாரின் முதல் பிரபந்தம் திருவிருத்தம். ரிக்வேத சாரமான திருவிருத்தத்தில் திருமலையைப் பற்றிய ஒரு பாசுரம்.

இந்தப் பாசுரம் அகத் துறையைச் சார்ந்தது. பாண் குன்ற நாடார் என்று வருவதால் இது குறிஞ்சி நிலத்து தலைவனைக் குறித்த பாசுரம். நம்மாழ்வாரின் அகத்துறைப் பாசுரங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1)தாய்ப்பேச்சு, 2)தோழிப்பேச்சு, 3) தலைவிப்பேச்சு. இந்தப் பாசுரம் தலைவிப் பேச்சாக வருகின்றது.

தலைவன் பொருள் சம்பாதிப்பதற்காகத் தலைவியைப் பிரிதலைக் குறிப்பாலறிந்து தலைவி தன் தோழிக்குக் கூறும் அமைப்பில் உள்ள பாசுரம் இது. பொருள் சம்பாதிப்பதற்காக நாயகியைப் பிரிந்து வெளியூர் செல்லுதல் பொருள்வயிற் பிரிவாம் (பொருள் வயின் – பொருள் நிமித்தமான என்றபடி). முதலில் பாசுரத்தைப் பார்த்து விடுவோம்.

*“காண்கின்றனகளும் கேட்கின்றனகளும் காணில், இந்நாள்*
*பாண் குன்ற நாடர் பயில்கின்றன இது எல்லாம் அறிந்தோம்*
*மாண் குன்றம் ஏந்தி தண் மா மலை வேங்கடத்து உம்பர் நம்பும்*
*சேண் குன்றம் சென்று பொருள்படைப்பான் கற்ற திண்ணனவே.”*

தலைவி தோழியிடம் பேசுகின்ற அழகான உரையாடல்தான் முதல் இரண்டு வரிகளுக்கான விளக்கம். இனி அந்த உரையாடல். தலைவி தோழியிடம் கேட்கிறாள். “அடியே! என் தலைவனைப் பார்த்தாயா?”. “ஏன், நன்றாகத் தானே இருக்கிறான். அதுவும் சமீப காலமாக உன்னிடம் அவன் காட்டும் அன்பும் பேச்சும்...”

“அது தான் நானும் சொல்ல வந்தேன். ஆடவர்கள் திடீர் என்று அன்பு செலுத்தினால், அவர்கள் ஏதோ ஒரு துன்பமான விசயத்துக்கு நம்மைத் தயார் படுத்துகிறார்கள் என்று பொருள்”.

“அப்படியானால் அவன் உன்னிடம் செலுத்தும் அன்பு...?”. “பாசாங்கு. இயல்புக்கு மாறான பேச்சும் செயலும் நீ கவனிக்க வில்லையா (காண்கின்றனகளும், கேட்கின்றனகளும்).“கவனித்தேன். ஆனால் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. உற்று

கவனித்தால் தான் விளங்கும். அவனுடைய நட வடிக்கைகள் வித்தியாசமாக இருக்கின்றன. ஏதோ ஒரு வகையில் அவன் செய்யப் போகின்ற ஒரு காரி யத்தால் நான் துன்பப்படுவேன். அதற்கு என்னை இந்த போலி உபசாரத்தால் தயார் செய்கிறான்.

என்னைச் சமாதானம் செய்ய வேண்டும் என்ப தற்காக அவன் பார்க்கின்ற பார்வையும், செய்கின்ற செய்கைகளும், பேசுகின்ற பேச்சும், இவற்றி லெல்லாம் ஒரு பொய்மையும் .... போலித்தனமும் தெரிகிறது கவனித்தாயா?"

"அப்படி என்ன செய்யப்போகிறான் என்பது ஊகித்தாயா?" "...ம் நிச்சயமாக... அவன் செய்யப் போகின்ற காரியம் எனக்கு நன்றாகவே விளங்கு கிறது." "என்ன காரியம் அது?"

"வேறு ஒன்றும் இல்லை. அவன் நான்கு காசு சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக வெளியூர் செல்லப்போகின்றான். அந்தப் பிரிவு என்னைத் துன்பப்படுத்தும் என்பதற்காக, அவன் என்னை தயார் செய்யும் விதமாக அந்த விஷயத்தை மறைத்து நடித்துக் கொண்டிருக்கிறான். "அப்படி எங்கே செல்லப் போகிறான்.

இதைக் கேட்டதும் தலைவியின் முகத்தில் ஒரு பிரகாசம். அது தான் பாசுரத்தில் திருமலையின் சிறப்பு குறித்த இடம். ***''மாண் குன்றம் ஏந்தி தண் மா மலை வேங்கடத்து உம்மர் நம்பும் சேண் குன்றம் சென்று''*** என்று திருமலையின் சிறப்பை வெகு அழகாகச் சொல்கிறாள்.

1) திருமலை எப்படிப்பட்ட இடம் தெரியுமா? திருப் பாணாழ்வார் சொன்னது போல ***''மந்தி பாய் வட வேங்கட மா மலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான்''*** என்னும்படியே நித்ய சூரிகள் சமாராதானம் பண்ணுகின்ற இடம் என்பது திருமலைக்குப் பெருமை. சேண் குன்றம் என்றதால் உயர்த்தியான சிகரங்கள் உள்ள மலை.

2) நித்ய சூரிகள் கூட இங்கே நிற்கின்ற அந்த பெருமாளைத் தான் நம்புகின்றனர். ***''ஒக்கச் சந்திப்பர் வேங்கடத் தத்தனை''*** என்னும்படி நித்ய சூரிகள் விரும்பும் படி தாங்கள் அனுசந்தித்த மேன்மை அன்றிக்கே நீர்மை மிக்க இடமா னவாறே விரும்புமவர்கள் என்பதால் நீர்மைக் குணத்துக்கு தோதான இடம் திருமலை (உம்பர் நம்பும்).

3. அந்த நம்பிக்கை தான் கலி காலத்தில் கூட ஒரு நாளுக்கு லட்சக்கணக்கான பக்தர்களைக் கொண்டு வந்து திருமலையில் சேர்க்கிறது.

4. குளிர்ச்சியான மலை (தண்) மாமலை.

5. பெருமைக்குரிய மலை ? என்ன பெருமை என்று சொன்னால் எல்லாவற்றையும் தாங்குகின்ற எம்பெருமானைத் தாங்கி நிற்கக் கூடிய பெருமை என்பதால் மாமலை.

6. அகலகில்லேன் இறையுமென்று பிராட்டி மார்பில் எழுந்தருளியிருக்கும் பெருமாள் நின்ற மலை என்பதால் மாமலை.

7. அன்று ஏழு நாட்கள் ஒரு விரலால் குடை பிடித்துக் காத்தான். இன்று ஏழு மலை தன்னைத் தாங்கும்படி அதற்கொரு பெருமையைத் தந்து நிற்கின்றான்.

8. மாண் குன்றம் ஏந்தி–ஒன்றை ஆதாரமாகக் கொண்டும், ஒன்றை ஆதேயமாகக் கொண்டும் ரக்ஷித்தபடி. எல்லாம் சரி. எதற்குப் பிரியக் கூடாத தலைவியைப் பிரிந்து அவள் பிரிவையும் பொறுத்துக் கொண்டு திருமலைக்குப் போக வேண்டும்?

இந்த இடத்தில் தான் பாடலின் மொத்த சூட்சும மும் இருக்கிறது. ***''சேண் குன்றம் சென்று பொருள் படைப்பான்''*** . திருமலைக்குச் சென்று பொருள் சம்பாதித்து வர வேண்டும் என்பதற்காக என்னைப் பிரிவதற்கு என் தலைவன் தயங்கவில்லை.

செல்வத்திற்காகத் திருமலைக்குச் செல்லு கின்றான். வேறு மலைக்குச் செல்லக்கூடாதா? இது திருமலை. மற்றது வெறும் மலை. (திரு–மஹா லக்ஷ்மி) திரு–பொருள், திருமலையப்பன் தரும் பொருள் நீடித்தது, என்றும் நீங்காதது. இங்கே பொருள் என்பதற்கு அர்த்தம் எனக் கொண்டால், வாழ்வின் உன்னதப் பொருளே திருமலையை நாடிச் செல்வதுதான். அதைத்தான் திருவிருத்தத் தில் நம்மாழ்வார் காட்டும் தலைவன் செய்கிறான்.

பாசுரம் படிப்போம்...

# மட்டபல்லி ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி ஆலயம்

**திருமதி டி.கே.லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி,**
**திருப்பதி,**
**94401 20758**

மட்டபல்லி திருத்தலம் க்ருத யுகத்தில் "மதுபுரீ" என்றும், திரேதாயுகத்தில் "ரத்னபுரீ" என்றும், துவாபுர யுகத்தில் "அனந்தபுரீ" என்றும், இந்த கலியுகத்தில் "மட்டபல்லி" என்றும் அழைக்கப்படுகிறது. இந்த க்ஷேத்திரத்தில் நதியும், காடும், மலையும் ஒருங்கே அமைந்துள்ளது. எம்பெருமான் புஷ்கரத்தில் தீர்த்த ரூபியாகவும், திருமலையில் பர்வத ரூபியாகவும், நைமிசாரண்யத்தில் ஆரண்ய ரூபியாகவும் விளங்குகிறார். இந்த க்ஷேத்திரத்தில் மூன்றும் இருப்பதால் இது அந்த மூன்று தலங்களுக்கும் சமமாய் போற்றப்படுகிறது.

*"ஏகமேவ க்ஷேத்ரம் மட்டபல்லி க்ஷேத்ரம்*

*நாந்யத் க்ஷேத்ரம் மட்டபல்லி துல்யம்"*

என்று நாரத மகரிஷி இந்த க்ஷேத்திர மகிமையைப் போற்றியுள்ளார். வசிஷ்டர், அத்திரி, ப்ருகு மகரிஷிகள் இந்த மட்டபல்லி நரஹரியைத் தரிசித்து அருள் பெற்றிருந்தாலும் ஸ்ரீபரத்வாஜ மகரிஷி இந்த கிருஷ்ணா நதிக்கரையில் கடுந்தவமிருந்து இந்த யோகாநந்த நரசிம்மரின் பேரருளுக்குப் பாத்திரமானவர். இந்த எம்பெருமானின் தரிசனம் கிடைத்ததும் அவரைப் போற்றி முப்பத்திரெண்டாயிரம் சுலோகங்கள் அடங்கிய "ஸ்ரீபரத்வாஜ ஹ்ருதயம்" என்கிற ஸ்தோத்திரத்தை அருளியுள்ளார். "மலை முழைஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும் சீரிய சிங்கம்" இவனே என்பதை உலகோர் அறியும்படிச் செய்தார். மட்டபல்லி தனது உடல். அங்குள்ள குகையே தனது இருதயம். அதில் நித்ய வாசம் செய்பவர் "ஸ்ரீராஜ்ய லக்ஷ்மி நாதனான ஸ்ரீந்ருஸிம்ஹனே" என்று காட்டினார்.

இந்த திருத்தலத்தில் எம்பெருமான் நரசிங்கமாய், இப்பர்வத குகையில் தாயார் ராஜ்ய லக்ஷ்மியோடு நித்ய வாசம் செய்கிறார்.

இந்த மட்டபல்லியில் சுச்ரோணி என்கிற பெயருடைய ஒரு பெண் இருந்தாளாம். அவள் பிறந்தது தாழ்ந்த குலமாகயிருந்தாலும் அவளது இருதயத்தில் குடி கொண்டிருந்தது இந்த மட்டபல்லி ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மன் தான். அவள் இந்த காட்டில் இருந்து கொண்டு பரமபக்தியுடன் எம்பெருமான் சன்னிதியை மெழுகி, கோலமிட்டு, பூக்களைப் பறித்துக் கொண்டு வந்து மாலைகளாகத் தொடுத்து எம்பெருமானை அலங்கரிப்பாளாம். அவள் வாழ்ந்திருந்த காலம் வரை தினமும் எம்பெருமானுக்கு புஷ்பாலங்கார சேவை தான். அவளது அந்த பக்தியைக் கண்டு மனமுவந்து எம்பெருமான் அடுத்த பிறவியில் அவளுக்கு ராஜகுமாரியாகப் பிறக்கும் பாக்யத்தை தந்ததாக தலபுராணம் கூறுகிறது.

இனி இந்த அற்புதமான குகைக்கோயிலின் அழகைப் பார்க்கலாம். முதலில் இருப்பது நாற்கால் மண்டபம். இதுவே எம்பெருமானின் திருக்கல்யாண மண்டபம். வருடாவருடம் ஸ்ரீநரசிம்ம ஜயந்தி நன்னாளில் ஸ்ரீயோகாநந்த லக்ஷ்மி நரசிம்மருக்கும், ஸ்ரீராஜ்யலக்ஷ்மித் தாயாருக்கும் இந்த மண்டபத்தில் திருக்கல்யாண உற்சவம் நடைபெறும்.





யாக ஆழ்வார்களின் சன்னதிகள். அடுத்து கர்ப்பக்கிருகமான குகையில் அர்ச்சா ரூபியாய் ஸ்ரீராஜ்ய லக்ஷ்மி சமேதராய் தரிசனம் தருகிறார்.

குகையின் இரு புறங்களிலும் துவார பாலகர்கள். உள்ளே சென்றதும் எம்பெருமானுடைய திவ்யமான திருப்பாதுகைகள். அதை கண்களில் ஒற்றிக் கொண்டு உள்ளே சென்றால் கர்ப்ப கிருகத்தில் ஸ்ரீராஜ்ய லக்ஷ்மியைத் தொடையில் அமர்த்திக் கொண்டு ஸ்ரீயோகநந்த லக்ஷ்மீ நரசிம்மனாய் எம்பெருமான்.

லட்சக் கணக்கான பக்தர்கள் கூடி இந்த வைபவத்தைத் தரிசிப்பார்கள். மண்டபத்தைத் தாண்டியதும் கம்பீரமான ராஜ கோபுரம். இந்த கோபுரத்துக்கு "சந்தோமயம்" என்று பெயர். அடுத்து கோபுர வாசலை கடந்தால் முக மண்டபம். இதையடுத்து இருப்பது ஸ்ரீமட்ட பல்லி நாதனின் பிரம மானந்த நிலையம். இதன் விமானம் பிரம்மானந்த நிலைய விமானம். இதன் எதிரே நிற்பது பிரம்மாண்டமான த்வஜ ஸ்தம்பம்.

அடுத்தது பக்ஷிராஜனான கருடாழ்வாரின் திருச்சன்னதி. அந்த சன்னதிக்கு பக்கத்திலேயே குழலூதும் ஸ்ரீவேணு கோபாலன் சன்னதி. இந்த பக்கம் பார்த்தால் ஸ்ரீராம தூதனான ஆஞ்சனேயர் சன்னதி. உள்ளே இருப்பதோ ஸ்ரீயோகாநந்த லக்ஷ்மி நரசிம்மர் சன்னதி. ஆக க்ருதயுகம், துவாபர யுகம், கலியுகம் மூன்றும் ஒரே இடத்தில். அடுத்து வரிசை

நம் சரீரம் தான் ஸ்ரீமட்டபல்லி மஹா க்ஷேத்திரம். சரீரத்துக்குள் இருக்கும் இருதயம் மட்ட பல்லி குகை. அந்த இதயமாகிற குகையில் நித்ய வாசம் செய்பவர் ஸ்ரீராஜ்ய லக்ஷ்மி வல்லபனான ஸ்ரீயோகநந்த லக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி. அருகிலேயே ஸ்ரீசெஞ்சு லக்ஷ்மி. அஹோபில மஹா க்ஷேத்திரத்தில் வேடுவ குலத்தில் உதித்த ஸ்ரீமஹா லக்ஷ்மியின் அம்சமான செஞ்சு லக்ஷ்மியை ஸ்ரீநரசிம்ம ஸ்வாமி திருமணம் செய்து கொண்டது நமக்கெல்லாம் தெரிந்த விஷயமே. இந்த மட்ட பல்லி திவ்ய க்ஷேத்திரத்தில் ஸ்ரீசெஞ்சு லக்ஷ்மியையும், ஸ்ரீராஜ்ய லக்ஷ்மியையும் ஸ்ரீயோகநந்த லக்ஷ்மி நரசிம்மரோடு சேர்த்து சேவிக்க முடிகிறது.

## சாஸ்த்திர நீதிகள்–88

ந மந்தராயா ந ச மாதுரஸ்யா ந சாபி ராக்ஞோ ந ச ராகவஸ்ய |
வந ப்ரவேசே ரகு நந்தனஸ்யமத் பாபமே வாத்ர நிமித்த மாஸீத் ||

நாம் எதை நினைக்கிறோமோ (தன் வினை தன்னையே சுடும்) அது நமக்கே வந்து சேரும். நல்லதையே நினைத்து வாழ வேண்டுமாம்!

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.



# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 57

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | 2 | 3 | 4 |
| | | | | 5 | | | | ■ | | | |
| | | 6 | | | 7 | | | ■ | | | |
| | | | ■ | | 8 | | | ■ | | | |
| | | | | | | 9 | | 10 | | | |
| | | | | | | 11 | | | | | |
| | | | | | | | | | | | |
| | 12 | | | | | | 13 | | | | |
| | ■ | | | | 14 | | | | | | ■ |
| | ■ | | 15 | 16 | ■ | | ■ | | | | ■ |
| | ■ | 17 | | | | | ■ | | 18 | | ■ |
| 19 | | | | | | | | | | | 20 |

தொகுப்பு :
**திரு. எஸ். ராஜகுமார், சென்னை, 8124930259**

புதிருக்கு விடை அறிய 47ம் பக்கம் பார்க்கவும்...

### இடமிருந்து வலம்

1. திருநீர்மலையில்.....(6) அமர்ந்த (இருந்த) கோலத்தில் வீற்றிருக்கின்றார்.
14. திருச்சானூரில் இருக்கும்....(3) சேவித்த பின்னரே திருவேங்கடவனை சேவிக்க வேண்டும் என்பது ஐதீகம்.
17. விஷ்ணு சஹஸ்ரநாமத்தில் விஷ்ணு விற்கு ......(4) பெயர்கள் உள்ளன.
19. "என்னைப் பெற்ற தாயார்" என்ற திருநாமம் கொண்டு தாயார் சேவை சாதிக்கும் திவ்ய திருத்தலம்....(7)

### வலமிருந்து இடம்

2. மகாவிஷ்ணுவின் இடப்பாகத்தில் தோன்றியவர்.....(4)
5. அர்ஜுனனின் மகன்.....(5)
7. திருநீர்மலையில் சயன கோலத்தில் உள்ள பெருமாள்....(6)
20. ஸ்ரீநிவாசப் பெருமானின் அவதார நட்சத்திரம்....(5)

### மேலிருந்து கீழ்

03. மணவாள மாமுனிகள் பாடியருளியது...(11)
04. சிவபெருமானின் சாபத்தை திருமால் போக்கிய தலம்...(8)
05. நவக்கிரகங்களில் செவ்வாயை இப்படியும் கூறுவர்....(6)
06. நாலாயிர திவ்யபிரபந்தத்தை தொகுத்தவர்...(6)
08. பலராமனின் தந்தை....(5)
10. இராமபிரான் ஜடாயுவின் வேண்டுகோளின் படி சிதையடுக்கி அவனது உடலைத் தகனம் செய்த இடம்...(7)
11. "தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே தமர் உகந்தது எப்பேர் மற்றப் பேர்" எனப் பாடியவர்....(7)
15. விஷ்ணு பக்தனான மகாபலியின் முன்னோர்.....(6)
16. வாமன அவதாரத்தில் இரண்டாவது அடியாக அளந்தது....(4)
17. "மாயனுக்காக கனாக்கண்டேன் தோழி நான்" என்று சொன்னவர்....(4)
18. தர்மருக்கு பீஷ்மரால் உபதேசிக்கப்பட்டது....(10)
19. திருமங்கை ஆழ்வார் "அடியார்க்கு அடிமை" என்பதாக...(8) க்ஷேத்திரத்தில் பாடியிருக்கிறார்.

### கீழிருந்து மேல்

08. ஸ்ரீகிருஷ்ணன் ஸ்ரீநாராயண தீர்த்தருக்கு நடனமே ஆடி தரங்கிணிய ஏற்ற அற்புதம் நிகழ்த்திய திவ்ய தேசம்....(4)
9. ஆமையின் வடமொழிச் சொல்....(4)
12. பெரியாழ்வாரின் இயற்பெயர்...(7)
13. திருவேங்கடமுடையானுக்கு....(7) அன்று அபிஷேகம் நடைபெறும்.



# ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள்

## வீர்யவான்

*சிறிதும் அச்சமில்லாத வீரம் உடையவர், சிறிதும் மனத்தளர்ச்சி அற்றவர்.* 2

**திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி,**
**சென்னை.**

### பகைவரும் மதிக்கும் வீரம்

வால்மீகி *"சத்ரோ:ப்ரக்யாத வீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:"* (பகைவர்களையும் ஈர்க்கும் புகழ்பெற்ற வீரமும் பராக்ரமமும் கொண்டவன் ஸ்ரீராமன்) என்கிறார். ஸ்ரீராமனுக்கும் இராவணனுக்கும் கடும்போர் நடந்து வந்தது. ஒரு நாள், ஸ்ரீராமனின் பானங்களால் அடிபட்டு ஆயுதங்கள், கவசம், தேர் முதலிய அனைத்தையும் இழந்து இராவணன் நிற்க, அவன் செய்த குற்றங்களை எண்ணி உடனே அவனைக் கொல்ல வேண்டிய ஸ்ரீராமன், கடைசி முறையாக அவன் சரண் அடைய ஒரு வாய்ப்புக் கொடுப்போம் என்றெண்ணி "இன்று போய் நாளை தேறி வா" என்று அனுப்பி வைத்தார். இப்பண்பு, விவேகத்தோடு கூடிய நிகரற்ற வீரமா? ஜீவராசிகளிடம் கருணையா? குற்றங்களுக்கு மன்னிப்பா? எது என்று கூற முடியாத அளவு உன்னதமானது. வீரனான இராவணனை இக்குணம் வியக்கவும் புகழவும் வைத்தாலும், விவேகமில்லாதபடியால் திருந்த மறுத்து மாண்டான். வெட்டுவது மட்டும் வீரமல்ல. விட்டுக் கொடுப்பதும் வீரமே! பலரும் சாதுக்களாக இருப்பர். வீரம் இல்லாதபடியால்! ஆனால் தீயவர்களிடத்தில் வீரனாகவும், நல்லவர்களிடத்தில் சாதுவாகவும் இருக்க வேண்டும் இராமபிரானைப் போல்!

### இராமன் - வீராமன் :

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் *"ராம: வீராம:"* என்னும் இடத்தில் விராமம் என்றால் "ஓய்வு" என்று பொருள். அதாவது இராமன் போருக்கு வந்தால் மற்ற தெய்வங்களால் கொடுக்கப்பட்ட வரம் ஓய்வு பெற வேண்டியதுதான். இராவணன் பெற்ற இறவாமை வரம் இராமன் எதிரில் பயனற்றதாகி ஓய்வு பெற்றதாலேயே இராவணன் மாள நேரிட்டது! இராவணனின் பெரும் சேனையான மூல பலத்தை இராமன் அழித்த அன்று அவனது சொல்லொணா வீரம் வெளிப்பட்டது. ஒரு கவி பாடுகிறார்: "ஆனை ஆயிரம், தேர் பதினாயிரம், அடல் பரி ஒரு கோடி, சேனை காவலர் ஆயிரம்" என்று! இத்தனை வீரர்கள் அழிந்தால் என்ன நேரும்? போர்க் களத்தில் தலையிழந்த வீரரது உடல் அரை உயிருடன் எழுந்து ஆடும். அப்படி ஆயிரம் தலையற்ற உடல்கள் ஆடினால் இராமனின் வில்லில் கட்டப்பட்டிருக்கும் மணி "கனீல்" என ஒரு முறை விடாமல் ஒலித்ததாம்! கணக்குப் போட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்! **வளரும்...**



*சென்ற இதழின் தொடர்ச்சி...*

கிருஷ்ண தேவராயர் (1509–1529) காலத்திய கல்வெட்டுகள் :

விஜயநகர சாம்ராஜ்யத்தின் சக்தி வாய்ந்த மற்றும் மிகவும் புகழுடைய அரசர் கிருஷ்ண தேவ ராயர் ஆவார். அவர் இறைவனின் மீது கொண்ட பக்தி, அவர் செய் துள்ள யாத்திரைகளும், அந்த யாத்திரைகளில் பல்வேறு கோயில் களுக்கு அவர் சமர்ப்பித்துள்ள மானியங்கள், வரி விலக்குகள், திருவாபரணங்கள் மற்றும் தங்க காசுகள் ஆகியவற்றிலிருந்து நாம் அறியலாம். பல்வேறு கோயில்க ளுக்கு அவர் திருப்பணிகள் செய்திருந்தாலும், அவர் தன்னு டைய குலதெய்வமாக திருவேங்கட வனையே கருதினார். அதனா லேயே தன்னுடைய “ஆமுக்த மால் யதா” என்னும் தெலுங்கு பிரபந் தத்தை திருவேங்கடவனுக்கே சமர்ப்பித்தார். அவர் தன்னுடைய காலத்தில் பல அலுவல்கள், போர்கள் இவற்றிற்கு நடுவே திருமலைக்கு ஏழு முறை சென்று வந்துள்ளார். சில முறை தம் இரு மனைவியரான திருமலா தேவி மற்றும் சின்னதேவி ஆகியோரையும் அழைத்துக் கொண்டு சென்றுள்ளார்.

கிருஷ்ண தேவராயர் ஆட்சிக்கு வந்த காலம், விஜய நகரப் பேரரசு தன்னுடைய வலுவையிழந்திருந்த காலமாகும். அதற்குக் காரணம், ஒரிசாவில் உள்ள கஜபதி மன்னர்கள் பாமினி சுல்தான் களுடன் உடன்படிக்கைச் செய்துக் கொண்டு, விஜய நகர சாம்ராஜ் யத்தின் கிழக்குப் பகுதியில் கிருஷ்ணா நதியிலிருந்து நெல்லூர் வரையிலும் கைப்பற்றினர். அதன் பிறகும் மைசூர் எல்லை மற்றும் மதுரை வரையிலும் கூட கைப்பற்றியிருந்தனர். இது கபிலேச்வர கஜ பதி (1435–1470) என்னும் மன்னருடைய வீரத்தாலே சாத்தியமா யிற்று. அக்காலத்தில், சாளுவ நரசிம்மன் தன்னுடைய தளபதியான துளுவ ஈச்வர நாயகனின் துணையுடன் கபிலேச்வர கஜபதியை தோற்கடித்து, அவரை கைது செய்தார். ஆனாலும் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகள் கஜபதியினர் வசமே இருந்து வந்தது. மைசூர் நாட்டில் உள்ள பெனுகொண்டாவை சிவசமுத்ரத்தை தலைநகராக உடைய உம்மத்தூர் தலைவர்கள் கைப்பற்றி, கிருஷ்ண தேவராய ரின் தமையனாரான வீரநரசிம்மரின் அதிகாரத்திற்கு உட்பட் டவை அல்ல என்று புறக்கணித்தனர். மேலும் இக்கேரி தலைவர்கள் ஸ்ரீரங்கப்பட்டணத்தை சுதந்திர நாடாக் கினர்.



# மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்...

**ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ**
**ஸ்ரீ.உ.வே.அ.கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவரங்கம்,**
**98842 89887.**

இவ்வாறு எல்லையிலும் நாட்டிற்குள்ளும் ஏற்பட்ட கலகங்கள் கிருஷ்ண தேவராயரை மிகவும் சலிப்படையச் செய்தன. ஜூலை மாதம் 1509 ஆம் ஆண்டு பட்டத்திற்கு வந்தவுடன் தன் அதிகாரத்திற்குட்படாத சிற்றரசர்களை அடக்குவதற்கு படை நடவடிக்கைகள் (பிரசாரங்கள்) மற்றும் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளை வசப்படுத்துவதற்காக ப்ரதாபருத்ர கஜபதி (கபிலேச்வர கஜபதியின் பேரன்)யுடன் போர் புரிவதற்கும் ஆயுத்தங்களை மேற்கொண்டார்.

1511 ஆம் ஆண்டின் முற்பகுதியில், ப்ரதாபருத்ர கஜபதியின் சிறிய தந்தையான பர்வத ரகுத்தரயா ஆண்டு வந்த கொங்கு மண்டலத்தை கைப்பற்றினால், அது கஜபதிகளை வலுவிழக்கச் செய்யும் என்று சமயோசிதமாக திட்டம் தீட்டி அதை செயல்படுத்தினார். பிறகு உள்நாட்டு சிற்றரசர்களை அடக்கிய பின், அவர் உம்மத்தூர் கங்கராஜாவை எதிர்த்து அவரை பணிய வைத்தார். செப்டம்பர் 22, 1512 ஆம் ஆண்டு ஸ்ரீரங்கப்பட்டணத்தை ஆண்டு வந்த இக்கேரி தலைவனான சங்குல நாயகன், ராயரிடம் அடிபணிந்து மன்னிப்பைப் பெற்றான்.

இவ்வாறு தெற்கு பகுதியில் வெற்றிகரமாகத் தன் திக் விஜயத்தை முடித்துக் கொண்டு வரும் வழியில் தான் முதன் முதலில், தன் இரு அரசிகளுடன் மலையப்பனை பிப்ரவரி – 10 ஆம் தேதி 1513 ஆம் ஆண்டு தரிசித்தார். அப்போது நவரத்ன கிரீடம், முத்து மாலை, ஐந்து விலையுயர்ந்த கற்கள் பதித்த பதக்கம் போன்ற பல ஆபரணங்கள், மங்கள ஆரத்தி காட்டுவதற்காக 25 வெள்ளி தாம்பாளங்கள், தன்னுடைய இளைய அரசியான சின்னாஜியம்மா வாயிலாகத் தங்கக் கோப்பையில் பால் மற்றும் வாசனைப் பொருட்கள் வைப்பதற்காக தங்கத் தட்டு ஆகியவை சமர்ப்பிக்கப்பட்டன (Ibid P.151, No.32 to 39, 40-49 and 50-59 Of Vol III). இதன் பிறகு மூன்று மாதங்கள் கழித்து மே–2, 1513 அன்று தான் மட்டும் மலையப்பனைத் தரிசித்து உற்சவருக்கு பல்வேறு ஆபரணங்கள் வைரம், கெம்பு மற்றும் பல அரிய கற்கள் பதித்த மூன்று சிறிய கிரீடங்களையும் சமர்ப்பித்தார் (Dev.Epi.Rep.p.151 and No.60-63 of Vol.III).

அடுத்து ஒன்றரை மாதத்திற்குள், ஜூன் 13ஆம் தேதி 1513 A.C. அன்று மூன்றாம் முறையாக வேங்கடவனை தரிசிக்கச் சென்றார். இம்முறை அவர் தன் தந்தை நரசநாயக உடையார் மற்றும் தாயார் நாகஜம்மா அவர்கள் பெயரில் நவரத்னங்களால் ஆன ஆபரணத் தொகுப்பு குங்குமப்பூ கோப்பை, 300 வெற்றிலைகள், 600 பாக்குகள், கோதாகர நாட்டில் உள்ள சத்ரவதி, துருரு மற்றும் கரிகாம்புடு ஆகிய கிராமங்களையும் சமர்ப்பித்தார்.

இக்கிராமங்களில் இருந்து வரும் வரி பணத்தைக் கொண்டு ஆண்டு தோறும் தை மாதத்தில் ஓர் பிரம்மோத்ஸவம் நடக்கும்படி ஏற்பாடு செய்தார் (No.s. 64 and 65 of Vol III). அதுவரை, வருடத்திற்கு ஏழு பிரம்மோத்ஸவங்களே நடைபெற்று வந்தன. கிருஷ்ண தேவராயரின் இந்த ஏற்பாட்டால் அவை எட்டாக அதிகரித்தன.

இந்த சமயங்களில் கிருஷ்ண தேவராயர் தன் நாட்டை மறுசீரமைத்து, உதயகிரி கோட்டையைக் கைப்பற்றுவதற்கான ஏற்பாட்டில் ஈடுபட்டிருந்தார். ஜூன் –9, 1514 அன்று உதயகிரி கோட்டையைக் கைப்பற்றி ப்ரதாபருத்ர கஜபதியை கொண்டவீடு வரை துரத்திக் கொண்டுச் சென்று விரட்டியடித்தார்.

உதயகிரி கோட்டையைக் கைப்பற்றிய ஒரு மாதத்திற்குள் 6–7–1514 அன்று மலையப்பனுக்கு 3000 வராகங்களைக் கொண்டு கனகாபிஷேகம் செய்தார். மேலும், முத்து, கெம்பு, நீல மாணிக்கம் ஆகியவை பதித்த மூன்று இழைகளைக் கொண்ட ஆபரணங்கள், ஒரு கடய ஜோடி, மேலும் போட்டபி நாட்டில் (தற்போதுள்ள கடப்பா மாவட்டம்) உள்ள தாளபாக்கம் என்னும் கிராமத்தையும் மற்றும் தினசரி பிரசாதங்களுக்கான ஏற்பாடு ஆகியவற்றை சமர்ப்பித்தார் (Dev. Epi Rep. 157-159, 66-69 Of Vol. III).

இம்முறை அவர் தன் இரு அரசிகளுடன் வந்திருந்தார். அதில் சின்னஜியம்மா எம்பெருமானுக்கு, முத்து, மரகதம், வைரம் இவற்றின் நடுவே கெம்பு பதித்த பதக்கத்துடன் கூடிய கந்தமாலையும், தொண்டை மண்டலத்தில் உள்ள முடியூர் என்னும் கிராமத்தில் இருந்து கிடைக்கும் வரிப்பணத்தில் பிரசாதங்கள் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாடு ஆகியவற்றை சமர்ப்பித்தார் (70-72 of Vol.III).

தொடரும்...




# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## सप्तमः पाठः பாடம்-7

| | | |
|---|---|---|
| ये = யார் (யாராவது) | अन्ये = மற்றவர் | स्यात् = இருப்பேன், வேண்டும், போதும். |
| अनेकत्र = பல இடங்களில் | किम् = என்ன? | स्याः = இருப்பாய், வேண்டும், போதும். |
| स्वे = தாங்கள் | अपि = மேலும் | स्याम् = இருத்தல் வேண்டும், போதும். |

### வினாக்கள்

१. अन्ये अपि तत्र न सन्ति।
२. ते तत्रासन् वा?
३. किं वा?
४. अद्य एकः अपि तत्र नास्ति।
५. अहम् अपि तत्र स्याम्।
६. त्वं श्वः अनेकत्र स्याः।
७. यूयं तत्र न आस्त किं वा?
८. ह्यः अत्र त्वम् अपि नासीः।
९. श्वः प्रभृति अहमपि तत्र स्याम्।
१०. ते स्वे तत्र तदा आसन्, इदानीं न सन्ति।

1. தாங்கள் அங்கு இல்லை.
2. நேற்று அங்கு யார் இருந்தார்களோ அவர்கள் தற்பொழுது இல்லை.
3. இவ்வேளை அவர்கள் அங்கு இல்லையோ?
4. விடியற்காலை முதற்கொண்டு நீ அங்கு இருத்தல் வேண்டும்.
5. நாங்கள் இவ்வேளை எங்கும் இருந்ததில்லை.
6. நீங்கள் இவ்வேளை இங்கு இருக்கிறீர்கள்.
7. அவர்கள் யாரோ?.
8. அங்கு மற்றவர்கள் பல பேர் இருந்தனர்.
9. ஏதோ நான் எங்கு இருத்தல் வேண்டுமோ?
10. அவர்களனைவரும் இங்கு இல்லை.

### விடைகள்


1. மற்றவர்கள் கூட அங்கு இல்லை.
2. அவர்கள் அங்கு உள்ளனரா?
3. எதாவது? (வேறு என்ன?)
4. இன்று ஒருவர் கூட அங்கு இல்லை.
5. நானும் அங்கு இருப்பேன்.
6. நீ நாளை பல இடங்களில் இருப்பாய்.
7. நீங்கள் அங்கு இல்லையா என்ன?
8. நேற்று இங்கே நீயும் இல்லை.
9. நானும் நாளை முதல் அங்கு இருப்பேன்.
10. அவர்களும், நானும் அப்போது அங்கு இருந்தோம், தற்பொழுது இல்லை.

१. ते स्वे अपि तत्र नासन्।
२. ह्यः तत्र ये आसन्, ते इदानीं न सन्ति।
३. अद्य सः तत्र नास्ति किम्?
४. प्रातः प्रभृति त्वं तत्र स्याः।
५. वयम् अद्य कुत्रापि न आस्म।
६.यूयम् अद्य अत्र न स्थ।
७. ते के!
८. तत्र अन्ये अपि बहवः आसन्।
९. किं वा अहं कुत्र स्याम्?
१०. ते सर्वे अत्र अद्य न सन्ति।

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி
தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா

தாஸ சாகித்யம்

# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்



தெலுங்கு மூலம்:
திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம்:
திரு. வி. வேங்கடரமணா

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

*"பிரம்மா சங்கராதி வந்த்ய எனகெ முக்தி கருணிசோ!*
*வேங்கடேச பேடி கொஞ்செ க்ருபய பாலிசோ"*

திருவேங்கடவா உம்மை வேண்டுகிறேன், என் மேல் கருணை காட்டய்யா, என்றும் சார்வ பௌமனான, ஈஸ்வரர் ஆன, உம்மால் கருணையுடன் வழங்கப்பட்ட மஹாபிரசாதமாக ஏற்றுக் கொள்கிறேன் என்றார்.

*"வேங்கடாசல நிலையம் வைகுண்ட புரவாசம்!! பங்கஜ நேத்ரம் பரம பவித்ரம், சங்கு சக்ரதர சின்மயரூபம்"* என்ற கீர்த்தனையை சிந்துபைரவி ராகத்தில் புரந்தரதாசர் அழகாகப் பாடியுள்ளார். இக்கீர்த்தனை மிகவும் புகழ் பெற்றது. சங்கீத வித்வான்கள் தம் கச்சேரியில் இப் பாடலைப் பாடாத இடம் இல்லை.

அதேபோல் *"வேங்கட ரமணனெ பாரோ "சேஷா சலவாசனே பாரோ", "வேணுநாத பாரோ வேங்கடரமணனே பாரோ"* என்ற பாடலையும் பஜனைக் குழுவினர் பாடி மகிழ்வர். கரஹர ப்ரியா ராகத்தில் திருப்பதி *"வேங்கட ரமண நினநேதகெ பாரது கருணா"* என்ற கீர்த்தனை 15 சரணங்களைக் கொண்டது. ஸ்ரீநிவாசனின் குணநலன் களை மட்டுமின்றி அந்த ஸ்வாமியை எவ்வாறு வழிபட வேண்டும் என்பதனைப் பற்றியும் இந்த பாடல்களில் அருமையாகக் கூறப்பட்டுள்ளது.

*"நோடு நோடு வேங்கடேச நோடு நோடவனு அவனு ஆடு வாடவ பேடிகாகி ஹொரட்டு பந்த"* இக்கீர்த்தனை வேங்கடேச புராணத்தில் ஸ்ரீநிவாசர் வில் அம்புடன் குதிரையின் மீது ஏறி வேட்டைக்குச் சென்றபோது, பத்மாவதியைப் பார்த்து வந்ததாக வர்ணிக்கப் பட்டுள்ளது.

ஆதித்யா, பவிஷ்யோத்தர, கருட புராணங்கள் முதலியவற்றில் "வேங்கடேசா" என்ற சொல்லின் பொருளைக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறே புரந்தர தாசரும் வேத சாஸ்த்திர புராணங்களில் பல விதமாக வர்ணித்து கூறியுள்ளார்.

*"வேங்கடேஷா நின்ன நாமக்கெ மொதலு*
*நாககூஷரகளு நோடோ!!*
*பிங்க வாதநால்கு வேத சாஸ்திர புராண களதரிந்த!!*

வேம் – என்ற எழுத்திற்கு மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரசிம்ம அவதாரங்களைப் பற்றி வருணித்துக் கூறியுள்ளார். க–என்ற எழுத்திற்கு வாமன, பரசுராம, ராமகிருஷ்ண அவதாரங்களையும், டே– என்ற எழுத்திற்கு

புத்தர், கல்கி ஆகிய அவதாரங்களையும் மற்றும் லக்ஷ்மி தேவி வக்ஷஸ்தலத்தில் எழுந்தருளியமையையும் வருணித்துள்ளார். ச – என்ற எழுத்திற்கு,

*“சாகத துதி யல்லி சாந்த பாண்டவரு திரௌபதிவாச*
*வாச ஸ்யாம சுந்தர சரணு சஜ்ஜன குருசந்த்ர பாச*
*சாம சஹித பஹுமுக்திய பொந்தித ருக்மாந்த போஷ*
*சாஸ்வத சலஹுவ புரந்தர விட்டல கலியுக வெங்கடேசா!”*

மஹாபாரதம், பாகவதம் ஆகிய இதிகாசங்களில் உள்ள பொருளையே கூறியுள்ளார். லட்சக்கணக்கான எண்ணிக்கையில் அடங்கா கீர்த்தனைகளால் ஸ்ரீநிவாசனை துதித்துப் பாடி மகிழ்ந்துள்ளார். அவை யாவும் நமக்குக் கிடைக்கவில்லை.

கிடைத்தவற்றை ஒருங்கு சேர்த்து நூலாக உருவாக்கப்பட்டது. இத்தகைய பெருமை பெற்ற புரந்தர தாசரின் பாடலைப் பாடி மகிழ்ந்து இன்புறுவோம்.

தொடரும்...

## ஸ்ரீநிவாசபத்மாவதி பரிணயோத்ஸவம்



**மணமகனான திருமலையப்ப ஸ்வாமி, முதல் நாள் கஜ (யானை) வாகனத்திலும், இரண்டாவது நாள் அஸ்வ (குதிரை) வாகனத்திலும், மூன்றாவது நாள் கருட வாகனத்திலும் திருமண மண்டபத்திற்குச் செல்ல, தேவியர் இருவரும் ஒரே பல்லக்கில் திருமலையப்ப ஸ்வாமியைத் தொடர்ந்து மண்டபத்திற்கு எழுந்தருளுகின்றனர். ஒவ்வொரு நாளும் திருமணச் சடங்குகளும் இதர வைபவங்களும் முடிவுற்ற பின்னர் திருமலையப்ப ஸ்வாமியும் தேவியரும் மீண்டும் ஆலயத்திற்குத் திரும்பி விடுகின்றனர்.**



**நாராயணகிரி உத்யானவனத்தை அடைந்ததும், திருமலையப்ப ஸ்வாமியும், தேவியரும் எழுந்தருளும் வாகனங்கள் எதிர் எதிரே நிறுத்தப்பட்டு திருமணச் சடங்குகள் தொடங்குகின்றன. மாலை மாற்றுதல், புத்தாடைகளை மணமக்களுக்கு வழங்குதல், பூப்பந்து எறிந்து விளையாடுதல், வெஞ்சேப்பு என்ற தம்பதியர் சேர்ந்து அமர்ந்து காட்சி தருதல் போன்ற பல்வேறு சடங்குகள் சாஸ்த்திரபடி வேத கோஷங்கள் முழங்க நடைபெறுகின்றன.**



**இந்த மூன்று நாட்களிலும் நான்கு வேதங்களிலிருந்தும் பொருள் பொதிந்த திவ்யமான மந்திரங்களை வேத விற்பன்னர்கள் முழங்குவதோடு, மங்கள வாத்யம், கர்நாடக சங்கீதம், வாத்யக் கச்சேரிகள், ஹரிகதை, நடனம் போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு நாளும் நடைபெறும் தெய்வீக தம்பதியரின் கொலுவும், ஊஞ்சல் சேவையும் கண்டு களிக்க வேண்டியவை.**

# மணவாள மாமுனிகள் காட்டும் சீர்மாறன்




– வளவ. துரையன்,கடலூர், 93676 31228.

திருவாய்மொழி நூற்றந்தாதி என்பது ஸ்ரீமத் மணவாள மாமுனிகள் அருளிச் செய்துள்ள பிரபந்தமாகும். அதில் 48–ஆம் பாடலை மிக முக்கியமானதாகக் கருதுவார்கள். அப்பாசுரம் இதுதான்.

*"ஆராவமுதாழ்வார் ஆதரித்த பேறுகளைத்*
*தாராமை யாலே தளர்ந்துமிக - தீராத*
*ஆசையுடன் ஆற்றாமை பேசி அலமந்தான்*
*மாசறு சீர்மாறெனம் மான்"*

இப்பாசுரத்தில் நம்மாழ்வாரை *"மாசறு சீர்மாறன்"* என்று மணவாள மாமுனிகள் குறிப்பிடுகிறார். மேலும் இப்பாசுரம் திருவாய்மொழி ஐந்தாம் பத்தின் எட்டாம் திருவாய்மொழிப் பாசுரங்களின் பொருள்களைச் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறது.

இப்பாசுரத்துக்கு பிள்ளைலோகம் ஜீயர் கூறியிருக்கும் வியாக்கியானம் மிகச்சிறப்பான ஒன்றாகும். நம்மாழ்வாரை ஏன் "மாசறு சீர் மாறன்" என்று காட்ட வேண்டும்? அவர் மாசு மறுவற்றவர் என்பது தெரிந்த விஷயம் தானே? இதனைப் பிள்ளைலோகம் ஜீயர்

*"இவ்வளவான தசையிலும்*
*உபாயாந்தரங்களில் கண் வைக்கையாகிற*
*மாசு இன்றிக்கே இருக்கிற"*

இப்பாசுரத்திற்கு முன்னால் அமைந்துள்ள ஏழாம் திருமொழிப் பாசுரங்களை ஒப்பு நோக்கினால் இதன் பொருள் நன்றாக விளங்கும். அவற்றில் நம்மாழ்வார் சிரீவர மங்கை வானமாமலைப் பெருமாளைப் பார்த்து அவர் அருளை வேண்டுகிறார். ஆனால் ஆழ்வாரின் விருப்பம் அங்கு நிறைவேறவில்லை. ஆதலால் ஆழ்வார் திருக்குடந்தை ஏகுகிறார். அங்கும் அவரது எண்ணம் ஈடேறவில்லை. இதனைச்,

"சிரீவர மங்கை வாணன் திருவடிகளிலே சரணம் புக்க இடத்திலும், தம் அபேட்சிதம் கிடையாமலே, அடியார்களைக் காப்பதையே தன் குறிக்கோளாகக் கொண்டுள்ள எம்பெருமான், தாம் விரும்பிய பேறுகளைக் கொடுக்காது இரான் என்றும், ஆனால் அப்பெருமான் எந்த இடத்தில் நமக்கு அருளலாம் என்று எண்ணியுள்ளானோ, அதை நாம் அறியாத காரணத்தால் திருக்குடந்தைக்குச் சென்றால் அங்கு நம் விருப்பம் நிறைவேறும்" என்று கருதிச் சென்றதாகக் கூறுகிறார் உரையாசிரியர்.

இவ்வாறு பெருமானிடம் தான் கேட்ட அருளைப் பெறமுடியாமல், அதனால் மனம் மற்றும் உடலெல்லாம் தளர்ந்த போதும், எம்பெருமானைத் தவிர வேறு எந்த உபாயத்தையும் பின்பற்றுதலாகிய மாசு இல்லாதவர் என்பதால் மாசறு சீர்மாறன் என்று மணவாள மாமுனிகள் கூறுவதாக உரையாசிரியர் காட்டுகிறார்.



## ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம் -25

*த்வயி மயி சான்யத்ரைகோவிஷ்ணு:*
*வ்யர்த்தம் குப்யஸி மய்யஸஹிஷ்ணு: ।*
*ஸர்வஸ்மின்நபி பஸ்யாத்மளானம்*
*ஸர்வத்ரோத்ஸ்ருஜ பேதஜ்ஞானம்॥*

**உன்னிடத்திலும், என்னிடத்திலும் மற்ற எல்லா இடத்திலும் சாக்ஷாத் "மஹாவிஷ்ணுதான்" நிறைந்து பரவி நிற்கிறார். என்னிடம் ஏன் பொறாமை கொள்கிறாய்? கோபம் கொள்கிறாய்? ("அஹம் ப்ரஹ்மாஸ்மி என்று) எல்லாவிடத்திலும் உன்னையே பார்! அப்போது நீ, நான் என்ற பேதத்தை தரும் உணர்வு முற்றிலும் மறைந்து விடும் (பேதமற்ற ஒற்றுமையான ஒருமை என்ற உணர்வு நிலை கொள்ளும்).**

**- திரு. சீதாராமன், சென்னை.**

திருக்குடந்தை சென்ற போதும் அங்கும் ஆழ்வாரின் விருப்பம் நிறைவேறவில்லை. இதை,

"எம்பெருமான் கிடந்த கோலத்தைக் கைவிட்டு எழுந்திருந்தால், இருந்தால், உலாவி அருளுதல், இன்சொல் கூறுதல், குளிர நோக்கி அணைத்தல் எல்லாம் செய்தருளக் காணாமையாலே" என்று கூறுவதிலிருந்து அறிய முடிகிறது. எனவே நம்மாழ்வார் மிகவும் மனவேதனைக்கு ஆளாகிறாராம். திருக்குடந்தைப் பெருமானும் அவர் விரும்பிய பேறுகளைத் தராததைத் தான்,

*"ஆராவமுதாழ்வார் ஆதரித்த*
*பேறுகளைத் தாராமையாலே"*

என்று மாமுனிகள் காட்டுகிறார். பெருமாளின் அருள் கிடைக்காததால் ஆழ்வாரின் மனம், உடல் வாடுவதைத்தான் தளர்ந்து எனும் சொல் காட்டும். இதை மிகத்தளர்ந்து என்று பொருள் கொள்ளல் சாலப் பொருத்தமாகும்.

நாம் எண்ணியது கிடைத்து விட்டால் மனத்தின் ஆசை தீர்ந்து விடும். இது உலக இயல்பு. அது கிடைக்காவிட்டால் அது தீராத ஆசையாக நீடித்திருக்கும். இங்கே பெருமாளின் பேறு பெறும் அனுபவம் கிடைக்காத காரணத்தால் ஆழ்வார் தீராத ஆசையுடன் இருந்ததைப் பாசுரம் காட்டுகிறது.

அவரின் ஆசை நிறைவேறாததால் அவர் ஆற்றாமை அதிகமாகிறது. அதனால்தான் *"என் நான் செய்கேன்"* என்றும், *"தரியேன் இனி"* என்றும், *"உனக்கு ஆட்படும் அடியேன்*


---

**திருப்பதி சுற்றுப்பகுதிகளில் உள்ள தி.தி.தே. ஆலய அமைவிடம் திருப்பதி ஆர்.டி.சி. பேருந்து நிலையத்திலிருந்து கி.மீ.களில்**

1) ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம், திருச்சானூர் ...05 கி.மீ.
2) ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், ஸ்ரீநிவாச மங்காபுரம்...12 கி.மீ.
3) ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம், திருப்பதி ...01 கி.மீ.
4) ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலயம், திருப்பதி...2.3 கி.மீ.
5) ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயம், திருப்பதி...03 கி.மீ.
6) ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், அப்பளாய குண்டா...18 கி.மீ.
7) ஸ்ரீவேதவல்லி சமேத ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயம், நாகுலாபுரம்...65 கி.மீ.
8) ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், நாராயண வனம்...37 கி.மீ.
9) ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி ஆலயம், கார்வேடி நகரம்...48 கி.மீ.
10) ஸ்ரீகோதண்டராமாலயம், ஒண்டிமிட்டா, கடப்பா மாவட்டம்...116 கி.மீ.

*"இன்னும் உழல் வேனோ"* என்றும் நம்மாழ்வார் மனம் வருந்திப் பேசிய பேச்சுகளைத்தான் *"ஆற்றாமை பேசி அலமந்தான்"* என்று மணவாள மாமுனிகள் காட்டுகிறார்.

ஆனாலும், ஆழ்வாரின் அத்தகைய பேச்சுகளுக்கிடையில் அவர், *"உனதாள் பிடித்தெ செலக் காணே"* என்றும், *"களைகண் மற்றிலேன்"* என்றும், அவரே அருளிச் செய்வதால் எந்த நிலையிலும் பெருமாளே தம்மைக் காக்க வல்லவர் என்ற திடமான உறுதியே, நம்பிக்கையே நம்மாழ்வாரின் மனத்தின் ஆழத்தில் குடிகொண்டிருந்ததாக பிள்ளைலோகம் ஜீயர் அருளிச் செய்கிறார்.



# அக்ஷய திருதியை










தசாவதாரத்தில் ஒருவரான பரசுராமர் அவதரித்த நாள். இக்ஷ்வாகு வம்சத்தில் தோன்றிய பகீரத மஹாராஜா, உலக நன்மைக்காக ஆகாய கங்கையை பூமிக்கு கொண்டு வந்த நாளாகும். அக்ஷயம் என்றால் குறையாதது. பாண்டவர்கள் காட்டில் வாழும்போது, உணவுக்காக சூரிய பகவான் "அக்ஷய பாத்திரம்" ஒன்றை கொடுத்தார். அந்த பாத்திரம் அள்ள அள்ள குறையாத உணவை அளிக்கும். அவ்வாறு பாண்டவர் தங்களுக்கு மட்டும் அல்லாமல் ரிஷி முனிவர்களுக்கும் விருந்தோம்பல் செய்தார்கள். கண்ணன் ஒரு பிடி அவலை குசேலரிடம் பெற்று அவருடைய தரித்திரத்தை விரட்டினார். அவ்வாறு குசேலருக்கு சுபிக்ஷம் கண்ட நாள். வேதவ்யாசர் கணபதிக்கு மஹாபாரதம் எழுதும் படி கூறிய நாள். காசியில் மஹா தேவர், காசி அன்னபூரணி தேவியிடம் பிக்ஷாண்டனார் கோலம் பூண்டு பிக்ஷை வாங்கிய நாள். அதனால்தான் இந்நாள் உணவு, செல்வம் என்று பல வளங்கள் கண்ட நாளாகும். குபேரன், மஹாலட்சுமியை பூஜித்து பல செல்வங்களைப் பெற்ற நாளாகும்.

மஹாவிஷ்ணுவிற்கு சந்தன அலங்காரம் செய்தால் வைகுண்ட ப்ராப்த்தி கிட்டும். சங்கீர்த்தனம், பூஜைகள் செய்து பகவானை தியானிக்க வேண்டும். வஸ்த்திர தானம், அன்னதானம் போன்ற எவ்வித தானங்கள் கொடுத்தாலும் அது பன்மடங்கு நன்மை அளிக்கும்.









# ஆதிசங்கரர் அருளிய அருள் நெறிகள்

முனைவர் ச. செந்திலாண்டவன்,
சென்னை, 94445 82856

**ஆதிசங்கரர் அருளிச்செய்த அருள் நூல்கள் :**

ஆதிசங்கரர் அருளிய நூல்களை பாஷ்யங்கள் என்ற விளக்கவுரைகளாகவும், பரக்கிரியாக்கள் எனப்படும் மூல நூல்கள், சுலோகங்கள், புஜங்கங்கள், ஸ்துதிகள், பஞ்சரத்னங்கள் என்றெல்லாம் அழைப்பர். இந்து மதத்தின் "ப்ரஸ்தான த்ரயம்" என்று போற்றப்படும், மூன்று நூல்கள் "ப்ரம்ம சூத்திரம்", "உபநிடதங்கள்", "கீதை" ஆகியவற்றிற்கு இவர் எழுதிய பாஷ்யங்கள் காலத்தை வென்ற நூல்களாக வெளிச்சம் காட்டுவன. மூலநூல்களில் விவேக சூடாமணியும், பஜகோவிந்தமும், சௌந்தர்ய லகரியும் மக்களின் நெஞ்சில் நிறைந்தவை. புஜங்கங்களில் "ஸ்ரீசுப்ரமணிய புஜங்கம்" எல்லார்க்கும் பலன் தருவது!

**ஆதிசங்கரர் கூறும் தத்துவ அறிவும் அருள் நெறியும் :**

சாசுவதமான நிலைக்கு வழிகாணும் ஞானிகளுக்குள்ளே ஆதிசங்கரர் முதன்மையர்!

அவர் தமது 32 வயதிற்குள் மக்கள் குலத்தை வீடு பேற்றுக்கான வழியில் செலுத்துவதிலேயே முன்னின்றார்!

நிலையற்ற வாழ்க்கையை விட்டு, நிலையான, நிறைவான வாழ்க்கையைப் பெற மக்களை அழைத்தார்.

பசியும், வேட்கையும், விருப்பும் வெறுப்புமே நோக்கமாக வாழ்கின்ற வரையில், மனித இயல்பிற்கும் விலங்கின் இயல்பிற்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்?

அகத்தில் உள்ள இறையை நாடாமல், புறத்தேயுள்ள மோகப்பொருள்களையும் போகப் பொருள்களையும் விரும்பிச் செல்லும் விலங்கியல் வாழ்வில் வேறு என்ன உள்ளது?

ஆனால் மனிதனுக்கென்று சில தனி இயல்புகள் உள்ளன. அவற்றை முறையாக வளர்த்துக் கொண்டால் மனிதன் தனிச் சிறப்பைப் பெறுவான்.

சங்கரர் மனிதனின் இச்சிறப்பியல்புகளை "கர்மம்" என்றும், "ஞானம்" என்றும் குறிப்பிட்டு, "கர்மம்" என்பது விரும்பி உணர்ந்து செய்யும் செயல் என்றும், சிந்தித்துப் பெறும் உணர்வே "ஞானம்" என்றும் கூறுகிறார்!

இதனை ஒரு வேத மேற்கோள் காட்டி விளக்குகிறார். "ஆத்மா" என்பது மனிதனிடம் மட்டுமே மிகவும் பரந்திருக்கிறது! அவனிடம் தான் பகுத்தறிவு இருக்கிறது. தான் அறிந்ததை வெளியிடும் இயல்பு இருக்கின்றது. நடந்தவற்றையும் நடக்கப்போவதையும் அறிந்திருப்பவன் அவன்.

அழிவனவற்றைக் கொண்டு அழியாதவனவற்றைப் புலப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் கொள்கிறான்! இவை மனிதனுக்கே உரிய சிறப்பு இயல்புகள்!

மற்ற விலங்கினங்களால் உண்ணவும், பருகவும், இனச்சேர்க்கை செய்யவும் மட்டுமே இயலும்.


பொருள்களைப் பகுத்தறியவும் உண்மையை உய்த்து உணரவும் ஆற்றல் பெற்றவனாக இருப்பதால்தான் மனிதன் அழியா நிலை பெற ஆசைப்பட்டு வெற்றியும் பெறுகிறான்.

இப்படிப்பட்ட நிலைக்கான வழியையும் உபாயத்தையும் சங்கரர் உபதேசிப்பதுடன் நில்லாமல் தானே அவ்வழியில் வாழ்ந்தும் காட்டியுள்ளார்.

இந்தியத் தத்துவ ஞானத்தின் வரலாற்றில் ஆதி சங்கரர்க்கு மிக உயர்வான இடமுண்டு! அவர் தாமாக எதையும் சொல்லாமல் வேதத்தில் இருப்பவற்றையே நான் சொல்கிறேன் என்றார். அப்படிச் சொன்னாலும் மக்கள் மனத்தில் ஓர் அடிப்படைப் புரட்சியைத் தோற்றுவித்தார். அப்புரட்சியின் விளைவால்தான் "சனாதன தர்மம்" என்னும் இந்து தர்மம் இப்போதும் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றது.

**வழிபாட்டு முறையில் படி நிலை!**

தெய்வத்தின் அருளால் கிடைப்பது ஞானம். அந்த



ஞானத்தால் மனிதன் வீடுபேறு அடைகிறான்! பக்தன் தெய்வத்தை வெவ்வேறு வடிவிலும், வெவ்வேறு பெயர்களிலும் வழிபட்டாலும் தெய்வம் ஒன்றேயல்லவா? அந்தத் தெய்வமும் தன் மாயா சக்தியால் வெவ்வேறு வடிவங்களையும் பெயர்களையும் ஏற்று அருள் புரிகின்றது! இதனை மணிவாசகரும்,

*"ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லார்க்கு ஆயிரம்*
*திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ?"*

என்றார் திருவாசகத்தில்!

தெய்வப் படிமங்களில் வழிபடுவது தொடக்க நிலை! ஜபம் செய்வதும், தோத்திரங்களைப் பாடுவதும் இடைநிலை! உள்ளத்தாலேயே – மனத்தாலேயே பூஜையும் வழிபாடும் செய்வது தலையாய நிலை! அந்த இறைவனையே "நான்" தான் என்ற "சோகம் பாவணை" மிகமிகத் தலைமை யானது!

**நிறைவுரை :**

பழங்காலத்துப் பெரிய ரிஷிகளைப் போன்ற தவமோ ஆற்றலோ இல்லாவிடினும் பிரம்மத்தை அறிய உரிமையும், ஆற்றலும் உடையவர்கள் ஆகலாம். பிரம்மத்தை அறியும் உரிமை இன்னாருக்குத் தான் உரியது என்ற வேற்றுமைகள் இல்லாமல் எல்லாரும் அறியலாம். இந்த உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள். புரிந்து கொள்ள வாருங்கள்! என்று மனிதகுலம் அனைத்திற்கும் அறைகூவல் விடுத்தவர் "சர்வக்ஞா" மகாஞானியான நம் ஆதிசங்கரர். சங்கரம் என்றால் மங்கலத்தை நலத்தைச் செய்பவர் என்று பொருள். ஆகவே தனது பெயருக்கேற்ப இந்த உலகத்திற்கே வழிகாட்டிப் பேருதவி புரிந்தவர் நம் ஆதிசங்கரர்.

"சுருதி, ஸ்ம்ருதி, வேதம் – அறநூல்கள், புராணம் ஆகியவற்றிற்கு ஓர் இருப்பிடமானவரும், கருணையின் இருப்பிடமானவரும் ஆன உலகத்திற்கே நலம் செய்த ஸ்ரீசங்கர பகவத் பாதரை வணங்குகிறேன்" என்ற கருத்துடைய சுலோகமும் இதையே கூறும்!

*"சுருதி, ஸ்ம்ருதி*
*புராணம் ஆலயம்*
*கருணாலயம்*
*நமாமி பகவத்பாதம்*
*சங்கரம் லோக*
*சங்கரம்"*

ஆதிசங்கரர் அருளியுள்ள நூல்களின் வழியே அவருடைய அருள் நெறிகளைச் சுருக்கமாகப் பார்த்தோம். அவற்றை மனத்தில் தேக்கி, வாழ்வில் வெற்றியும் நலங்களும் பெறுவோமாக!

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸ்ரீ லக்ஷ்மிந்ருசிம்ம கராவலம்ப ஸ்தோத்திரம்

## (விளக்கத்துடன்)

– வித்வான், டாக்டர் பமிடிகால்வ செஞ்சுசுப்பையா

**ஆதிசங்கரர் இயற்றிய ஸ்ரீ லக்ஷ்மிந்ருசிம்ம கராவலம்ப ஸ்தோத்திரம் ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தியை முன்னிட்டு "ஸப்தகிரி" வாசகர்களுக்காக... இதனை அனுதினமும் காலை, மாலை வேளைகளில் பக்தியுடன் படிப்போருக்கு இன்னல்கள் தீர்ந்து இன்பம் உண்டாகும்.**

1) *ஸ்ரீமத் பயோநிதி நிகேதந: சக்ரபாணே!*
*போகீந்த்ர போகமணிராஜித புண்யமூர்த்தே! ।*
*யோகீஸ! ஸாஸ்வத! ஸரண்ய! பவாப்திபோத!*
*லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥*

ஸ்ரீ லக்ஷ்மியுடன் கூடியவராகி, கையிலே சக்கரத்தை தரித்து பாற்கடலில் பள்ளிகொள்ளும் ஆதிசேஷன் மீது வீற்றிருந்து பிரகாசிக்கக்கூடியவரே! யோகிகளின் தலைவனே! எப்பொழுதும் சாஸ்வதமாய் இருப்பவரே! சரணடைந்தவரை காப்பாற்றுபவரே! இன்னல்களை களைபவரே! ஸ்ரீ லக்ஷ்மீ நரசிம்மரே! அடியேன் முன்னேற தங்கள் திருக்கரங்களால் தூக்கி விட்டு அருள வேண்டும்.

2) *ப்ரஹ்மேந்த்ர ருத்ர மருதர்க க்ரீடகோடி*
*ஸங்கட்டிதாங்க்ரி கமலாமல காந்திகாந்த! ।*
*லக்ஷ்மீ லஸத்குச ஸரோருஹ ராஜஹம்ஸ!*
*லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥*

பிரம்மன், சிவன், இந்திரன், சூரியன், வாயு போன்ற முப்பத்து மூவரும் முன் நின்று வணங்குகின்ற தூய்மையான, ஒளிமிக்க திருவடிகளை உடையவரே! லக்ஷ்மியின் மார்பகங்களாகிய தாமரை மீதுறையும் அன்னமே! ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரே! அடியேன் முன்னேற தங்கள் திருக்கரங்களால் அடியேனை தூக்கி விட்டு முன்னேறச் செய்ய வேண்டும்.

3) *ஸம்ஸார ஸாகர விஸால கராள காம*
*நக்ர க்ரஹ க்ரஸந நிக்ரஹ விக்ரஹஸ்ய ।*
*மக்னஸ்ய ராகல ஸதூர்மி நிபீடிதஸ்ய*
*லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥*

மிகப்பெரிதானதும், காமமெனும் முதலையாலும், கொடூரமான இந்திரியங்கள் ஆகியவற்றாலும் பீடிக்கப் பெற்று இந்த சம்சாரமெனும் கடலில் அமிழ்ந்து கிடக்கும் அடியேனை ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரே! தங்களுடைய திருக்கரங்களால் காத்து தூக்கி விட வேண்டும்.

4) *ஸம்ஸார கோர கஹநே சரதோ முராரே!*
*மாரோக்ர பீகர ம்ருக ப்ரவரார்திதஸ்ய ।*
*ஆர்தஸ்ய மத்ஸரனிதாக நிபீடிதஸ்ய*
*லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥*

சம்சாரமெனும் இந்த கோரமான காட்டில் சிக்கிக் கொண்டிருக்கும் பயங்கரமான மிருக ஜாதியான என்னை, துக்கத்தால் பீடிக்கப் பெற்ற என்னை, உன் காலடியில் சரணடைந்த அடியேனை, முரன் எனும் அசுரனை வென்றவரே! ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரே! அடியேனை கைகொடுத்து காத்தல் வேண்டும்.

5) *ஸம்ஸார கூபமதிகோர மகாத மூலம்*
*ஸம்ப்ராப்ய து:க ஸத ஸர்ப ஸமாகுலஸ்ய ।*
*தீநஸ்ய தேவ! க்ருபயா சரணாகதஸ்ய*
*லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥*

துக்கங்களுக்கெல்லாம் மூலகாரணமான சம்சார மெனும் மிகவும் பயங்கரமான கிணற்றிலே விழுந்த என்னை நூற்றுக்கணக்கான கொடிய விஷமுள்ள பாம்புகள் எனும் துக்கங்கள் தாக்குகின்றன. தேவாதி தேவனே! உன்னுடைய திருவடிகளை சரணடைந்த எனக்கு ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரே! தங்களுடைய திருக்கரங்களை தந்து காத்தல் வேண்டும்.

6) *ஸம்ஸார பீகர கரீந்த்ர கராபிகாத*
*நிஷ்பித்யமான வதிஷஸ்ஸகலார்திதஸ்ய ।*
*ப்ராண ப்ரயாண பவபீதி ஸமாகுலஸ்ய*
*லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥*

சம்சாரமெனும் பயங்கரமான யானைகளிடம் அகப்பட்டு சின்னாபின்னப்படுகின்ற, உயிரே போய் விடும் என்று பயப்படுகின்ற அடியேனை, எல்லாவித இன்னல்களையும் போக்குகிறவரே! ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரே! தங்கள் திருக்கரங்களால் இந்த துக்கக் கடலிலிருந்து மேலெழுப்பி விட வேண்டும்.

*7) ஸம்ஸார ஸர்ப விஷதுஷ்ட பயோக்ர தீவ்ர*
*தம்ஷ்ட்ரா கராள விஷ தக்த விநஷ்ட மூர்தே: ।*
*நாகாரிவாஹந! ஸுதாப்தி நிவாஸ! ஸௌரே!*
*லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥*

ஓ கருட வாகனனே! சம்சாரமெனும் இருட்டினால் சூழப்பட்ட, பயங்கரமான விஷங்களையுடைய பாம்புகளினால் கடிக்கப்பட்ட உடலுடையவனானேன். பாற்கடலில் பள்ளி கொள்ளும் பரந்தாமா! ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரே! எனக்கு தங்களுடைய திருக்கரங்களைத் தந்து காத்தருள வேண்டும்.

*8) ஸம்ஸார ஜால பதிதஸ்ய ஜகந்நிவாஸ!*
*ஸர்வேந்த்ரியார்தபடி ஸஷ்டஜஷாத்மனச்ச ।*
*ப்ரோத்தம்பித ப்ரஸுர தாலுக மஸ்தகஸ்ய*
*லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥*

ஓ ஜகன்நிவாசா! சம்சாரமெனும் பெருங்கடலில் வீழ்ந்த என்னை, நவத்வாரங்களுடனும் பதினொறு இந்திரியங்களாலும் கட்டுண்ணப்பட்ட என்னை ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரே! அடியேன் முன்னேற தங்கள் திருக்கரங்களால் தூக்கி விட வேண்டும்.

*9) ஸம்ஸார வ்ருக்ஷ மகபீஜ மநந்தகர்ம*
*ஸாகாயுதம் கரணபத்ர மநங்க புஷ்பம் ।*
*ஆருஹ்ய து:க ஜலதௌ பதிதோ தயாளோ!*
*லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥*

தயாளனனே! ஏராளமான கர்மாக்களெனும் கிளைகளையும், புறக்கரங்களாகிய இலைகளையும், காமமாகிய புஷ்பங் களையுமுடைய சம்சாரமெனும் ஒரு பெரிய மரத்தில் ஏறி, துக்கமெனும் பலனை அனுபவிக்கும் அடியேனை ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரே! தங்களுடைய திருக்கரங்களை தந்து காத்தருள வேண்டும்.

*10) ஸம்ஸார தாவ தஹநாகுல பீகரோக்ர*
*ஜ்வாலாவலீபிரபிதக்த தநூருஹஸ்ய ।*
*த்வத் பாத யுத்ம ஸரஸீருஹ மஸ்தகஸ்ய*
*லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹீ கராவலம்பம் ॥*

ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரே! இந்த சம்சாரமெனும் சுற்றிலும் எரிகின்ற நெருப்பின் தீப்பிழம்புகளின் நடுவிலே அகப்பட்டுக் கொண்டு உடலெல்லாம் வெந்து விட்டன. அடியேன் தங்களுடைய தாமரையையொத்த அழகிய திருவடிகளிலே வந்து சரணடைந்துள்ளேன். அப்படிப் பட்ட என்னை இந்த சம்சார சாகரத்திலிருந்து காத்தருளல் வேண்டும்.

*11) ஸம்ஸார ஸாகர நிமஜ்ஜந முஹ்யமாநம்*
*தீநம் விலோகய விபோ! கருணாநிதே! மாம் ।*
*ப்ரஹ்லாத கேத பரிஹார! பராவதார!*
*லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥*

சம்சாரமெனும் கடலில் மூழ்கி மயக்கமும் துன்பமும் அடைந்த என்னை, பிரகலாதனின் துக்கத்தை களைவ தற்காக அவதாரம் எடுத்தவரே! கருணைக் கடலே! ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரே! தங்கள் கடைக்கண்ணால் கடாக்ஷித்து தங்கள் திருக்கரங்களை கொண்டு அடியேனை காத்தருள வேண்டும்.

*12) ஸம்ஸார யூத கஜசம்ஹதி சிம்ஹ! தன்ஷ்ட்ரா!*
*பீதஸ்ய துஷ்டமதிதைத்ய பயங்கரேண ।*
*ப்ராண ப்ரயாண பவபீதி நிவாரணேன*
*லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥*

யானையின் மத்தகத்தைப் பிளக்கும் சிம்மத்தைப் போன்றவனே! சம்சார அச்சத்தை நீக்குபவனே! பயங்கரனே! பிராணனாகிய உயிருக்கும் பிரயாணம் ஆகிய வாழ்க்கைக்கும் நிவாரணனாய் விளங்கும் ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரே! எனக்கு ஒரு கரம் கொடுப்பாய்!







13) ஸம்ஸாரயோகி ஸகலேப்ஸித நித்யகர்ம
ஸம்ப்ராப்ய து:கஸகலேந்த்ரிய ம்ருத்யுநாச ।
ஸங்கல்ப! ஸிந்துதனயாகு சகுங்குமாங்க!
லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥

மனிதப் பிறப்பு பல்வேறு துன்பங்களை கொடுப்பது. இந்திரியங்கள் தங்கள் இஷ்டத்திற்கு அறிவை கெடுத்து படுகுழியில் தள்ளி விடுகின்றன. அத்தகைய துன்பங்களையும் ஆயுள் தோஷத்தையும் தீர்ப்பவனே, கடல் அரசன் பெண்ணை அணைத்துக் கொண்டிருக்கும் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரே! எனக்கு உன் அபயக்கரம் தருவாய்.

14) பத்வா களைர்யமபடா பஹு பர்த்ஸயந்தி
கர்ஷந்தி யத்ர பதி பாஸ ஸதைர்யுதா மாம் ।
ஏகாகிநம் பரவஸம் சகிதம் தயாளோ!
லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥

யமதூதர்கள் பலர் ஒன்றாக சேர்ந்து, பாச கயிற்றினால் என்னுடைய கழுத்தைக் கட்டி இழுக்கின்றனர். என் ஒருவனாலே எதுவும் செய்ய இயலாமல் உன்னை வேண்டி நிற்கிறேன், ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரே! அடியேனை இந்த துக்கத்திலிருந்து வெளியேற்றி காத்தல் வேண்டும்.

15) அந்தஸ்ய மே ஹ்ருத விவேக மஹாதநஸ்ய
சோரைர்மஹா பலிபி ரிந்த்ரிய நாமதேயை: ।
மோஹாந்த கார குஹரே விநிபாதிதஸ்ய
லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥

ஓ லக்ஷ்மி நரசிம்மரே! குருடனான எனக்கு என் உடலிலுள்ள இந்திரியங்களும் என்னுடைய விவேகத்தை அழித்து மோகமெனும் பேரிருள் சூழ்ந்த குகையிலே தள்ளி விட்டன. எனவே அடியேனுக்கு தங்கள் திருக்கரங்களினால் நல்வழியை காட்டி உதவிட வேண்டும்.

16) லக்ஷ்மீபதே! கமலநாப! சுரேஸ! விஷ்ணோ!
யஜ்ஞேச! யஜ்ஞ! மதுசூதன! விஷ்வரூப! ।
ப்ரஹ்மண்ய! கேசவ! ஜநார்தந! வாஸுதேவ!
லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥

லக்ஷ்மீபதியே! பத்மநாபா! தேவர் தலைவா! எங்கும் நீக்கமற நிறைந்தவரே! வைகுண்ட வாஸா! கிருஷ்ணா! மதுசூதனா! ஜனார்தநா! வாஸுதேவா! ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரே! அடியேனுக்கு தங்கள் திருக்கரங்களை தந்து உதவிட வேண்டும்.

17) ப்ரஹ்லாத நாரத பராஸர புண்டரீக
வ்யாஸா ம்பரீஷ சுக சௌனக ஹ்ருந்நிவாஸ! ।
பக்தாநுரக்த பரிபாலந பாரிஜாத!
லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥

பிரகலாதன், நாரதர், பராசர முனிவர், புண்டரீக முனிவர், வேத வியாசர் போன்ற பாகவதர்களின் நிர்மலமான இருதயத்தில் வசிப்பவரே! பக்தர்களையும் நேசிப்பவர்களையும் பாதுகாத்து அருள்பவரே ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரே! எனக்கு தங்கள் திருக்கரங்களினால் நல்வழியை காட்டுதல் வேண்டும்.

18) ஏகேந சக்ர மபரேண கரேண ஸங்க
மந்யேந ஸிந்து தநயா மவலம்ப்ய திஷ்டந் ।
வாமேதரேண வரதாபய ஹஸ்தமுத்ரம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥

ஒரு திருக்கரத்தினிலே சக்ரமும், மற்றொரு திருக்கரத்தினிலே சங்கும், இன்னுமொரு திருக்கரத்தினிலே லக்ஷ்மியை அணைத்தபடியும், வலது திருக்கரத்தினிலே வரத முத்திரையுடனும், மற்ற இரு திருக்கரங்களினால் அபய – பத்ம முத்திரையுடனும் அமர்ந்துள்ள ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரே! எனக்கு தங்கள் திருக்கரங்களினால் நல்வழியை காட்டுதல் வேண்டும்.

19) ஆத்யந்த சூன்யமஜ மவ்யய அப்ரமேயம்
ஆதித்ய ருத்ர நிகமாதிநுத பிரபாவம் ।
த்வாம் போதிஜாஸ்ய மது லோலுபமத்த ப்ருங்கம்
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥

அவனுக்குள்தான் அத்தனையும் அடக்கம். ஆதித்ய, ருத்ர, தேவாதி தேவர்கள் இணைந்த தோற்றம் அவன். அவன் திருவடிகள் தேனேமலரும் திருப்பாதங்கள். ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரே! அடியேனுக்கு ஒரு கரம் கொடுத்து அருளல் வேண்டும்!

20) வாராஹ! ராம! ந்ருஸிம்ஹ! ரமாதிகாந்தா
க்ரீடாவிலோல! விதிசூலி சுர பிரவந்த்ய! ।
ஹம்ஸாத்மஹம் பரமஹம்ஸ விஹார லீல!
லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥



வராக, நரசிம்ம, ராம அவதார விசேஷங்கள் உடைய உன் கிரீட அழகும், ஒளியும் அற்புதம்! அன்னமாய் அருமறை பயந்த ஞான வடிவுடைய ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரே! அடியேனுக்கு ஒரு கரம் தருவாய்!

*21) மாதா ந்ருஸிம்ஹஸ்ச பிதா ந்ருஸிம்ஹ:*
*ப்ராதா ந்ருஸிம்ஹஸ்ச சகா ந்ருஸிம்ஹ: ।*
*வித்யா ந்ருஸிம்ஹோத்ரவீணம் ந்ருஸிம்ஹ:*
*ஸ்வாமீ ந்ருஸிம்ஹ ஸ்கலம் ந்ருஸிம்ஹ:॥*

ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரே! நீயே என் சுவாமி! நீயே என் அனைத்தும்! நீயே என் அன்னை! நீயே என் தந்தை! நீயே என் உறவு! நீயே என் தோழன்! அடியேனுக்கு ஒரு கரம் தருவாய்!

*22) ப்ரஹ்லாத மானஸ ஸரோஜ விஹார ப்ருங்க!*
*கங்காதரங்க தவளாங்க! ரமாஸ்தி தாங்க! ।*
*ஸ்ருங்கார ஸங்கர கிரீடலஸத்வராங்க!*
*லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ! மம தேஹி கராவலம்பம் ॥*

பிரகலாதன் மனமாகிய தாமரையை இருப்பிடமாகக் கொண்டவரே! உன் அழகும், ஆபரணமும், நளினமும் தலைமைக்கு உரியதான திருமுடியும், அற்புதம்! ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரே! அடியேனுக்கு ஒரு அபயக்கரம் தருவாய்!

*23) ஸ்ரீ சங்கரார்யா ரசிதம் சததம் மனுஷ்ய:*
*ஸ்தோத்ரம் படேதிஹது ஸர்வ குணப்ரஸன்னம் ।*
*சத்யோ விமுக்த கலுஷோ முனிவர்ய கண்யோ*
*லக்ஷ்மீபதே: பதே முபைதி ஸ நிர்மலாத்மா ॥*

ஸ்ரீசங்கரன் ரசித்து உன் பெருமையை உணர்ந்து எப்போதும் மனிதர்கள் துதிக்கச் செய்த, இந்த ஸ்தோத்திரம் பகவானின் கல்யாண குணங்களை விவரிக்கிறது. கலிகாலத்தில் முக்தி உட்பட அனைத்தும் தரக்கூடியது. சத்தியமானது. ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்மரே! அடியேனுக்கு ஒரு அபயக்கரம் தருவாய்!

*24) ஏத ஸ்மயார்ஜிதவபு: ப்ரசுரப்ரவாஹ*
*மக்னார்த மர்த்ய நிவஹஸ்ய கராவலம்பம் ।*
*லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சரணாப்ஜ மது வ்ரதேன*
*ஸ்தோத்ரம் க்ருதம் சுபகரம் புவி சங்கரேண ॥*

ஸ்ரீலக்ஷ்மி நரசிம்மரை சரணடைந்தால் நம் செயல்கள் அனைத்தும் புனிதமாகும். மனிதனாகப் பிறந்த நமக்கு ஹரி பக்தி உண்டாகும். அவருடைய தாமரைத் திருவடிகளின் அகண்ட ரூபமும் வசமாகும்.

*25) ஸ்ரீமன் ந்ருஸிம்ஹ! விபவே கருடத்வஜாய*
*தாபத்ரயோப ஸமனாய பவௌஷதாய ।*
*த்ருஷ்டாதி வ்ருஸ்சிக ஜலாக்னி புஜங்க ரோக*
*க்லேஸ வ்யயாய ஹரயே குரவே நமஸ்தே ॥*

நரசிம்ம மூர்த்தியே! பாவங்களைத் தீர்ப்பவரே! எல்லாவித பாபங்கள், ரோகங்கள், அக்னி, தண்ணீரால் ஏற்படும் கண்டங்கள் என சகல ஆபத்துகளில் இருந்தும், நோய்களிலிருந்தும் காப்பாற்றும் மருந்தும் நீ! மருத்துவனும் நீ! உன்னால் அத்தனையும் தீர்ந்து போகும். குருவே! உன்னை நமஸ்கரிக்கின்றேன்.






# திருவேங்கடவனின் திருவருள்

திரு. பி. முத்துகுமார்,
சிவகாசி,
95665 71103

சிவகாசி என்னும் ஊரில் உள்ள நான் மனதில் ஏழுமலையானை எண்ணாத நாளில்லை. என் வாய் அவன் நாமம் உச்சரிக்க மறந்ததில்லை. சிறு வயதில் இருந்து சில முறை திருப்பதி ஏழுமலையானை தரிசித்துள்ளேன். ஆனாலும் நான் என் உடன் என் நண்பன் பாலமுருகன் என்பவருடன் சுமார் ஏழு வருடங்களுக்கு முன் தரிசனம் செய்ய வரும்போது என் வாழ்வில் அவனுடைய அருள் காணக் கிடைத்தது.

எனக்கு சுமார் இருபது வருடமாக தலைச் சுற்றி கீழே விழுந்து விடுவேன். நரம்பு தேய்மானம் காரணமாக வைத்தியம் நிறைய செய்து தினமும் மாத்திரை இருபது வரை சாப்பிட்டால்தான் மயங்கி கீழே விழாமல் இருப்பேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் என் நண்பருடன் திருமலை அலி பிரி நடைபாதை வழியாக முதன் முதலாகச் செல்லலாம் என முடிவு செய்து, திருப்பதி வந்து அலமேலு மங்காபுரம் சென்று தாயாரை தரிசித்து அன்னதானம் சாப்பிட்டவுடன் கிளம்பிய நிலையில் என்னை பிடித்த தலைச்சுற்றல் நோய், மயக்கம் தலைகீழாக ஒரே பயம். எப்படி நடைபாதையில் கண் திறக்க முடியாத மயக்க நிலையில் செல்வோம் என ஒரே திகைப்பு.

ஆனாலும் என்னுடைய கோவிந்தனை நடந்தே சென்று தரிசனம் செய்ய வேண்டும் என போராட்டம். கால் சிறிது எடுத்து வைக்க முடியாமல் கண்ணை திறந்தால் உலகமே சுற்றுகிறது. ஆட்டோவில் ஏறி அலிபிரி நடை பாதைக்குச் சென்றோம். கண் திறந்தால் ஆட்டோ சுற்று கிறது. தலை கிறு கிறு என்கிறது. என் உயிர் திருப்பதி விட்டு செல்லாது என முடிவுக்கே வந்தேன். இருந்தாலும் பரவா யில்லை என்று என் நண்பரிடம் கூட சொல்லாமல் கண்ணை மூடி நாராயணா! நாராயணா!! என்னை எப்படியாவது முதன் முதலாக உன்னை பாத யாத்திரையாக மலைபாதை வழியாக வந்து தரிசிக்க வாய்ப்பு அளிக்க மனம் மன்றாடி வேண்டியது. மலை பாதை வந்து விட்டது.

ஆட்டோவை விட்டு இறங்கியதும் கால் தடுமாறுகிறது. மனம் தடுமாறவில்லை. கண்ணைத் திறந்தால் கிறுகிறு என்கிறது தலை. உடம்பு தள்ளாடுகிறது. ஆனால் மனம் மட்டும் என்னுடைய ஏழுமலையானை நினைத்து "நாராயணா! நாராயணா!!" என்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. அப்படியே அலிபிரி மலை படிக்கட்டுகளில் தள்ளாடிய படியே ஒரு இரண்டு படியில் கால் வைத்தவுடன் எங்கிருந்தோ என்னுடம்பில் ஒரு உணர்வு அதிர்வு ஏற்பட்டு உடம்பே ஒரு கனம் வியர்த்தது. வியர்த்தவுடன் உடம்பில் இருந்து என்னையறியாமல் ஒரு அமானுஷ்யம் வெளிப்பட் டது. உடனே என்னை தொல்லைப்படுத்திக் கொண்டிருந்த கிறுகிறுப்பு, உடம்பு தளர்வு மறைந்த மாயம் அந்த மாயவன் லீலைதானே! அவனின்றி மாயம் எப்படி? மாத்திரை இல்லாமல் வாழ முடியாது என்று மருத்துவர் கூறிய நிலையில் மாத்திரையே இதுவரை உபயோகப்படுத்தாமல் நான் நாராயணனை மட்டும் நினைத்து வாழ்கிறேன் என்றால், அந்த இறைவன் திருமலையப்பன் என் மனக்கண்ணில் அருள் புரிந்ததை எண்ணி இன்றும் அவனுக்கு அடிமையாகி ஏழுமலையான் தரிசனம் இருக்கும் வரை வேண்டும் என வேண்டி அடிக்கடி வந்து அவரை மனம் குளிர தரிசனம் செய்கிறேன். என் வாழ்வில் எனக்கு ஏழுமலையான் அருள் எனது பாக்கியம். வேறு ஒன்றும் தேவையில்லை. உண்மையான பக்தியுடன் அவன் நாமம் போற்றினால் நம்முடைய நினைவில் கண்டிப்பாக தரிசனம் தருவான் திருமலையப்பன்.

யோகப் பயிற்சியில் பல வகைகள் உண்டு. அவற்றில் நான்கு வகையான பயிற்சிகள் மிகவும் பொதுவானவை. 1) பல்வேறு சடங்குகளின் மூலமாக கடவுளுடனான உறவை புதுப்பிக்க உதவும் கர்ம யோகம், 2) ஆழ்ந்த சாஸ்திர அறிவினாலும் தவத்தினாலும் கடவுளை அறிய உதவும் ஞான யோகம், 3) எட்டு நிலைகளைக் கொண்ட பயிற்சியின் மூலமாக கடவுளை அறிய உதவும் அஷ்டாங்க யோகம் மற்றும் 4) தூய அன்பின் மூலமாக கடவுளை அறியச் செய்யும் பக்தி யோகம். மனிதராகப் பிறந்தவர்கள் மேற்கூறிய யோகப்பயிற்சியில் எது உகந்ததோ அதில் ஈடுபட வேண்டும். இல்லாவிடில், இந்த உடலினால் என்ன பயன்? உடல் மிகவும் ஆரோக்கியமாக இருக்கலாம். ஆனால், அஃது ஒரு நாள் அல்லது ஒருநாள் மடிந்துவிடும். அப்போது நமது யோகப் பயிற்சியே அடுத்த பிறவியை தீர்மானிப்பதாக அமையும். உடல் சுவரைப் போன்றது. யோகப் பயிற்சிகள் அந்த உடலினால் வரையப்பட வேண்டிய சித்திரங்களைப் போன்றவை. யோகப் பயிற்சியில் ஈடுபடாத மனித உடல், எவ்வளவு பல மிக்கதாக இருந்தாலும், அது மனித வாழ்வின் குறிக்கோளை அடைவதற்கு உதவாது. சிங்கம், புலி, யானை போன்ற மிருகங்கள் எந்த பயிற்சியும் இன்றி பலமாக உள்ளனவே. மனிதன் என்றாவது தனது உடற் பயிற்சியின் மூலமாக அந்த மிருகங்களைக் காட்டிலும் பலசாலியாகி விட முடியுமா? மனித வாழ்வின் குறிக்கோள் பலசாலியாவது அல்ல. கடவுளை உணர்வதே. எனவே, கடவுளை உணர்வதற்கான யோகப் பயிற்சியில் ஈடுபடுதல் மிகவும் அவசியம். நான்கு யோகங்கள் உள்ள போதிலும் யோகம் என்பது அஷ்டாங்க யோகத்தைக் குறிக்கும். பிராணாயாமமும், ஆசனங்களும் அஷ்டாங்க யோகத்தின் இரண்டு அங்கங்கள் மட்டுமே. அதில் எட்டு அங்கங்கள் உள்ளன. அவையாவன : 1) யம, செய்யக்கூடாத செயல்களைத் தவிர்த்தல், 2)நியம, செய்ய வேண்டிய செயல்களைச் செய்தல், 3)ஆசன, பல்வேறு ஆசனங்களை பயிற்சி செய்தல், 4) பிராணாயாம, மூச்சுப்

# யோகமும் ஆன்மீகமும்



பயிற்சி, 5) ப்ரத்யாஹாரா, புலனின்பப் பொருள்களிலிருந்து விலகுதல், 6) தாரணா, மனதை ஒருமுகப்படுத்துதல், 7) த்யான, தியானம் செய்தல் மற்றும் இறுதியாக 8) ஸமாதி, ஸமாதி நிலையை அடைதல்.

**அஷ்டாங்க யோகத்தின் முக்கிய குறிக்கோள் :**

தியானத்தின் மூலமாக பரமாத்மாவை உணர்வதே. இதன் எட்டு நிலைகளும் படிப்படியாக பயிற்சி செய்யப்பட வேண்டியவை. அதை விட்டுவிட்டு வெறும் பிராணாயாமத்தையும் ஆசனத்தையும் மட்டும் பயிற்சி செய்தால் அது பரமாத்மாவை உணர உதவாது.

ஆசனத்தையும் பிராணாயாமத்தையும் பயிற்சி செய்வதற்கு முன்பாக, பன்னிரண்டு வகையான யம மற்றும் பன்னிரண்டு வகையான நியமங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் (ஸ்ரீமத் பாகவதம் 11.19.34–35). உதாரணமாக, மாமிசம் உண்ணும் பழக்கம் உடையவர்கள், தினமும் மூன்று வேளை வயிறு முட்டு உண்பவர்கள், காலை 7 மணி வரை தூங்குபவர்கள், நினைத்தபோதெல்லாம் உடலுறவில் ஈடுபடுபவர்கள் என இன்றைய சராசரி மனிதர்களில் பலரும் அஷ்டாங்க யோகத்தைப் பயிற்சி செய்வதற்குத் தகுதியற்றவர்கள் (பகவத் கீதை 6.16–17). மாமிசம், சூது, போதைப் பொருட்கள், தகாத பாலுறவு போன்றவற்றை தவிர்த்தல் யோகப் பயிற்சியின் அடிப்படை. இருப்பினும் அஷ்டாங்க யோக வழிமுறையானது இன்றைய உலகத்திற்கு பொருத்தமற்றதாகும். அஷ்டாங்க யோகத்தைப் பயிற்சி செய்ய விரும்புபவர்கள் முதலில் தனிமையான புனித தலத்திற்குச் சென்று அங்கு அதனைப் பயில வேண்டும் என்று பகவத்கீதை (6.11) கூறுகின்றது. யோக முறைகளுக்கு எத்தனை கால வரலாறு இருக்கும் என்று எவரும் கூறிவிட முடியாது.

கடோபநிஷத் இவ்வாறு கூறுகிறது. "ஐம்புலன்களும் மனமும் செயலற்றிருக்க, அறிவு நிலைத்து நிற்கும் நிலையே யோகம்" (11–3). அறிவின் சிக்கல்களையும் மனத்தின் சஞ்சலங்களையும் கடந்து சென்று மெய் ஞானத்தை அறிவதற்கான ஒரு வழிமுறையே யோகம் என்று ஸ்வேதாஸ்வேதா உபநிஷத் கூறுகிறது.

யோகம் என்றால் "சித்த விருத்தி நிரோதம்" என்கிறது பதஞ்சலி யோக சூத்திரம்.

(யோகேஸ்சித்த விருத்தி நிரோத)சித்த விருத்தி நிரோதம் என்றால் சித்தத்தின் செயல்பாடுகளைத் தடுத்தல் என்று பொருள். ஒருவரின் மனமும் அறிவும் அடங்கியது தான் சித்தம் என்பது. பதஞ்சலி யோக சூத்திரம் என்ற நூல் பதஞ்சலி யின் சிருஷ்டி, இவர் சமாதி, சாதனா, விருபதி, கைவல்யம் என்ற நான்கு பகுதிகளில் (பாதங்கள்) 195 சூத்திரங்களில் யோக வழி முறைகளைக் கச்சிதமான சூத்திரங்களாகத் தொகுத்து வைத்தார்.



**பதஞ்சலி மகரிஷி:**

ஆதிசேஷன் அவதாரமாகத் தோன்றியவர். ஆதலினால் பதஞ்சலி முனிவரின் கடும் விஷ மூச்சு காற்று பட்ட அனைத்தும் சாம்பலாகிவிடும். எனவே இவர் தன் சீடர்களுக்கு அசரீரியாகவே உபதேசம் செய்வார்.

ஆயிரம் கால் மண்டபத்தில் அமர்ந்து தாம் ஏற்றிய வியாகரண சூத்திரம் என்னும் நூலை தம்முடைய சீடர்களுக்கு நேருக்கு நேராய் உபதேசிக்க எண்ணினார். கௌடபாதர் என்ற சீடர் மட்டும், பதஞ்சலி முனிவர் ஏவிய பணிக்காக வெளியே சென்றுவிடுகிறார். பதஞ்சலி முனிவர் தமக்கும் சீடர்களுக்குமிடையே ஒரு கனமான திரையை போட்டுக் கொண்டார். திரையின் பின் அமர்ந்து உபதேசத்தை ஆரம்பித்தார். சீடர்களுக்கு பரமானந்தம். இத்தனை நாள் அசரீரியாக ஒலித்த குருவின் குரலை பக்தர்கள் கேட்டு மகிழ்ந்தனர்.

பதஞ்சலி முனிவரிடமிருந்து வந்த கருத்து மழையில் திக்கு முக்காடிய சீடர்களுக்கு இந்த கம்பீரமான குரலுக்குரிய குருநாதரின் திருமுகத்தை திரை நீக்கி பார்த்து விட வேண்டும் என்ற ஆவலால், திரையைப் பிடித்திழுக்க... அடுத்த கனம்... ஆதிசேஷரின் கடும் விஷக்காற்று தீண்டி அங்கிருந்த அத்தனை சீடர்களும் எரிந்து சாம்பலாகினர்.

முனிவர் பயந்தது நடந்தது. அது சமயம் கௌடபாதர் வருவதை கண்டு, முனிவர் உடனே மானுட உருவத்திற்கு மாறினார். நண்பர்கள் அனை வரும் சாம்பலாகியதை கண்டு கதறினார். பொறு மையை இழந்ததினால் வந்த வினை. "கௌடபாதர் நீ மட்டும் தான் என் சீடர் என்பது விதி என்பதால் உனக்கு சகல கலைகளையும் கற்றுத் தருகிறேன்" என்றார் பதஞ்சலி முனிவர். அதன்படி கௌடபாத ருக்கு அனைத்து வித்தைகளும் கற்றுத் தந்தார் பதஞ்சலி.

ஒரு சமயம் ஆதிசேஷன் சிவனின் ஆநந்த தாண்டவத்தைக் காண வேண்டுமென கயிலை சென்று சிவனிடம் தன் ஆசையை வெளிப்படுத்தி னார். அதற்கு சிவன் பூலோகத்தில் தில்லை வனத் தில் தான் காட்சியளிக்க உள்ளதாகவும், அதைக் காண ஏதுவாக அத்திரி மகரிஷியின் மகனாக வளர்ந்து வருமாறு ஆதிசேஷனை பணிக்கிறார்.

அத்திரி மகரிஷி ஆற்றில் சந்தியா வந்தனம் செய்யும் போது ஐந்து முகங்களுள்ள ஒரு குழந்தை யாக அவர் கைகளில் வந்து விழுகிறார். மகரிஷியும் அந்தக் குழந்தையை எடுத்து பதஞ்சலி என்ற பெயரிட்டு வளர்க்கிறார்.

அத்திரி மகரிஷியும், புலிகால் முனிவரும் சிவனின் ஆனந்த தாண்டவத்தைக் காண விருப்பம் கொண்டு தவம் செய்கின்றனர். அப்போது பதஞ்சலி யும் அவர்களுடன் சேர்ந்து தவமியற்றினார். இவர்களின் தவத்திற்கு இரங்கிய ஈசன் ஒரு வியாழக்கிழமையுடன் கூடிய தைப்பூச நாளில் இவர்களுக்கு ஆனந்த தாண்டவத்தைக் காட்டி அருள்கிறார்.

இந்த பதஞ்சலி முனிவர் ஒரே நேரத்தில் ஆயிரம் சீடர்களுக்கு ஆயிரம் தலைகளுடன் திரை மறை வில் இருந்து வியாகரண மகாபாஷ்யத்தைக் கூறி னார் என்று தொன்மங்கள் குறிப்பிடுகிறது.

யோகம் இன்றி ஆன்மீகம் இல்லை. ஆன்மீக மும் மிகச் சிறந்த யோகம் தான்.


**டாக்டர் கி.ஜ. நிகிலா வெங்கட்**
**கோயம்பத்தூர்,**
**8940991234**


# கன்னன் கருத்துரை



*தேஹினோஸ்மின்யதா தேஹே கௌமாரம் யௌவனம் ஜரா ।*
*ததா தேஹாந்தரப்ராப்திர்தீரஸ்தத்ர ந முஹ்யதி॥*

(2-13)

**ஒவ்வொருவருக்கும் முதலில் குழந்தைத்தன்மையும், பிறகு இளமையும், அதன் பிறகு மூப்பும் வருகிறது. இந்தப் பருவங்கள் எப்படி உண்டாகின்றனவோ அப்படியே ஜீவாத்மா கூட இந்த உடலை விட்டு மற்றொரு உடலை அடைகிறது. இதையே இறந்து போதல் என்கிறோம். ஞானிகள் இதில் மயங்க மாட்டார்கள்.**

**தொகுப்பு :**
**அமரர் பேராசிரியர்**
**பொன் சௌரிராஜன், திருப்பதி.**





# பூர்வாசார்ய ஸ்தோத்ரங்கள்

பகவத் இராமாநுஜரின் பிரதான சீடரான கூரத்தாழ்வானும் அவர் மனைவி ஆண்டாள் அம்மையாரும் திருவரங்கத்தில் வசித்து வந்தனர். திருவரங்கநாதனின் அரவணை பிரசாதத்தின் மூலம் பெருமாளின் அனுகிரஹத்தைப் பெற்று, அதன் பின்னர் இரண்டு புத்திரர்களைப் பெற்றனர். திருக்குமாரர்களுக்கு விஷ்ணுபுராணம் அருளிய பராசரர் மற்றும் மஹாபாரதத்தை அருளிய வியாஸர் நினைவாக ஸ்ரீபராசரபட்டர் மற்றும் ஸ்ரீவேதவியாஸ பட்டர் என்று சுவாமி இராமாநுஜரே திருநாமமிட்டார்.

திருவரங்கத்தில் வைகாசி அனுஷத்தன்று ஸ்ரீபராசரபட்டர் அவதரித்தார். பகவத் ராமாநுஜர் தன்னுடைய மற்றொரு பிரதான சீடரான எம்பாரை இந்த குழந்தைகளுக்கு ஆசார்யனாக இருந்து அனைத்தையும் கற்றுக்கொடுக்குமாறு நியமித்தார். சிறு வயதிலேயே அனைத்தையும் ஆர்வமாகக் கற்ற ஸ்ரீபராசரபட்டர் சிறந்த சிஷ்யனாக விளங்கினார்.

ஒரு முறை பட்டர் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த போது ஒரு வித்வான் "ஸர்வக்ஞ பட்டன்" அதாவது எல்லாம் தெரிந்தவர் என்று சொல்லிக் கொண்டே வர, "இது யார்? எம்பெருமானார். கூரத்தாழ்வான், முதலியாண்டான். எம்பார் உள்ளிட்ட பெரியவர்கள் இங்கே திருவரங் கத்திலே எழுந்தருளி இருக்க எல்லாம் தெரிந்தவன் என்று சொல்லிக் கொண்டே வருவது?" என்று திடுக்கிட்டு, அந்த வித்வானிடம் சென்று அவரை வாதத்திற்கு அழைத்தார். அந்த வித்வானும் பட்டர் சிறுபிள்ளை ஆதலால், பட்டர் என்ன கேள்வி எழுப்பினாலும் அதற்கு தாம் விடையளிப்பதாகக் கூறினார். பட்டர் தன் திருக்கரத்தில் ஒரு பிடி



## ஸ்ரீபராசர பட்டர் அருளிய ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரம்

மண்ணை எடுத்து, இதில் எவ்வளவு மண் இருக்கிறது என்று கேட்க பதிலின்றி திகைத்தார் அந்த வித்வான்.

பிறகு பட்டர் "ஒரு பிடி மண் என்று பதிலளிக்க முடியாத நீர் எப்படி ஸர்வக்ஞ பட்டன் ஆக முடியும்?" என்று கேட்க, பட்டரின் பேரறிவைக் கண்டு வியப்புற்ற அந்த வித்வானும் பல்லக்கிலிருந்து இறங்கி பட்டரை பல்லக்கிலே ஏற்றி வைத்துக் கொண்டு கூரத்தாழ்வான் திருமாளிகையிலே கொண்டு சேர்த்து பலவகையால் பட்டரைப் புகழ்ந்தனர். பட்டர் வளர்ந்த பின் எம்பெருமானார் தரிசனத்தின் மிகவும் முக்கியமான ப்ரவர்த்தகர் ஆனார். ஸ்ரீரங்கத்தில் பெரிய கோயிலில், ஸ்ரீரங்கநாதனின் புரோஹிதன் என்னும் உயர்ந்த கைங்கர்யத்தை செய்து வந்தார்.

"நம்பெருமாளின் அபிமான புத்திரர்" என்று பட்டர் புகழப்பட்டார். பட்டர் ஸ்ரீரங்கநாயகி தாயாரை தன்னுடைய தாயாக எண்ணி திவ்ய தம்பதிகளுக்கு அனைத்து கைங்கர்யங்களையும் செய்து வந்தார்.

திவ்ய தம்பதிகளின் திருக்கல்யாண குணங்களில் லயித்த பட்டர் அஷ்டச்லோகி, ஸ்ரீ ரங்கராஜ ஸ்தவம், ஸ்ரீ குணரத்ன கோசம், பகவத் குண தர்ப்பணம் என்னும் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் வியாக்யானம், ஸ்ரீரங்கராஜ ஸ்தோத்ரம் என்னும் ஸ்தோத்திரங்களையும் நூல்களையும் அருளிச் செய்துள்ளார்.

ஸ்ரீ ரங்கநாதனின் ஸ்வீகார குமாரரான ஸ்ரீபராசர பட்டர் பெரிய பெருமாளை விட்டுப்பிரியும் நிலை ஏற்பட்டது. ஆம், ஒரு சமயம் கூரத்தாழ்வானின் சிஷ்யனான வீரசுந்தர பிரம்மராயன் என்னும் சிற்றரசன் திருவரங்கத்தில் திருவிக்ரமன் பிரகாரத்தில் மதிள் எழுப்ப ஆசைப்பட்டான்.

அவ்வாறு செய்கையில் பிள்ளைப் பிள்ளை ஆழ்வான் என்னும் பாகவதரின் வீட்டை இடித்து இடையூறு செய்ய தீர்மானித்தான். பட்டர் அறிவுறுத்தியும் மன்னன் கேட்காததையடுத்து பட்டர் திருவரங்கத்தை விடுத்துத் திருக்கோட்டியூருக்குச் சென்று விட்டார். இதனால் ஸ்ரீரங்கத்தை விட்டு திருக்கோட்டியூரில் சில காலம் வசிக்கலானார்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருப்பதியில் தரிசிக்க வேண்டிய ஆலயங்கள்

**ஸ்ரீ கோவிந்தராஜ ஸ்வாமி கோயில் :**

இங்கு எழுந்தருளியுள்ள மூல மூர்த்தி வைணவத் திலகமான ஸ்ரீராமாநு ஜரால் பிரதிஷ்டை செய்யப்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. இங்கு உள்ள மூலவர் கிடந்த கோலத்தில் காட்சியளிக் கிறார். ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபார்த்தசாரதி மற்றும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமியும் இக் கோயிலில் இடம் பெற்றுள்ளனர்.

☎ *0877–2264592.*

**ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயில் :**

இக்கோயில் திருப்பதி இரயில் நிலையத்திலிருந்து சுமார் ஒரு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இக் கோயில் ஸ்ரீராமர் லக்ஷ்மணர் மற்றும் சீதை இலங்கையிலிருந்து திரும்பி வரும்போது திருப்பதிக்கு வந்ததின் நினைவாக எழுப்பப்பட்டதாகும். ☎ *0877–2264584.*

**ஸ்ரீ கபிலேஸ்வர ஸ்வாமி கோயில் :**

இங்கு அமைந்திருக்கும் சிவன் கோயில் திருப்பதி நகரத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. கபிலமஹரிஷியால் இங்குள்ள சிவலிங்கம் தோற்றுவிக்கப்பட்டதால் இந்த மூலவருக்கு கபிலேஸ்வரர் என்று பெயர் வந்தது. இங்கு உள்ள தீர்த்தமும் கபிலதீர்த்தம் என்றே அழைக்கப் படுகிறது. ☎ *0877– 2264587.*

**அலர்மேல்மங்காபுரம் (திருச்சானூர்) :**

இது திருப்பதிக்கு 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இதுவும் பழமை வாய்ந்த புனிதத் திருத்தலமாகும். திருவேங்கடவனின் தேவியான ஸ்ரீபத்மாவதி தாயார் மூலவராக இக் கோயிலில் எழுந்தருளியுள்ளார்.

☎ *0877–2264586.*



அரங்கனின் பிரிவைத் தாள முடியாததால் பெரும் துக்கத்தில் ஆழ்ந்தார். காவேரிக்கரையில் பாம்பணை மேல் பள்ளி கொண்டுள்ள தன் தந்தையான பெருமாளை தரிசிக்காமல் தவித்தார், துன்பக்கடலில் தத்தளித்தார், உள்ளம் உருகினார்.

தன்னுடைய துயரை தீர்க்கும் வண்ணம் "ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரம்" அருளி அந்த ஸ்தோத்திரத்தின் மூலம் எம்பெருமானைத் துதித்தார்.

ஸ்ரீரங்கநாத ஸ்தோத்திரத்தில் ஆறு சுலோகங்கள் உள்ளன. மேலும் பட்டர் தனித்தனியாக எழுதிய இரண்டு சுலோகங்களையும் சேர்த்து எட்டு சுலோகங்களாகச் சொல்வது நம் முன்னோர்கள் வழக்கம்.

இந்த ரங்கநாத ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்வதினாலே மன அழுத்தமும் மன பாரமும் குறையும். இச்சுலோகம் படித்து ஸ்ரீரங்க நாதனை துதித்து, அனைத்து மங்களங்களையும் பெறுவோமாக.




**மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களில் இண்டாவது அவதாரமாக விளங்குகிறது கூர்மாவதாரம். "கூர்மம்" என்றால் ஆமை என்பது பொருள். பகவான் ஏன் ஆமையாக அவதாரம் செய்தார் தெரியுமா?**

**தேவர்கள் அசுரர்களிடையே யுத்தம் ஒன்று நடந்தது. அதில் துர்வாச முனிவரின் சாபத்தால் இந்திரன் தோல்வியுற்றான். உடனே மஹாவிஷ்ணுவை இந்திரன் பிரார்த்தனை செய்தான். மஹாவிஷ்ணுவும் அதற்கு அருளினார். பகவான், "மந்தர மலையை மத்தாகவும், வாசுகி என்ற பாம்பை நாண் ஆகவும் வைத்து, பாற்கடலை கடைந்தால் பல வெற்றி தரக்கூடிய பொருள்கள் கிட்டும்" என்று கூறினார். அவ்வாறு செய்த போது மந்திர மலையின் அழுத்தத்தினால் பாற்கடலை கடைய முடியாமல் போனது. அசுரர்களும் இதை கேள்விப்பட்டு இதற்கு உதவி செய்ய முன் வந்தார்கள். ஸ்ரீமஹாவிஷ்ணு ஆமை வடிவெடுத்து மந்திர மலையை தன் ஓட்டின் மீது தாங்கி, இவ்வுலகிற்கு பல வெற்றியை தரக்கூடியவைகளுடன் அமிர்தமும் வழங்கினார்.**



# ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரம்

"ஸப்தப்ராகாரமத்யே ஸரஸிஜ
முகுளோத்பாஸமாநே விமாநே
காவேரீமத்யதேசேம்ருதுதரபணிராட்போகபர்யங்கபாகே|
நித்ராமுத்ராபிராமம்கடிநிகடசிர:பார்ச்வவிந்யஸ்த
ஹஸ்தம்
பத்மாதாத்ரீகராப்யாம் பரிசிதசரணம்
ரங்கராஜம் பஜேஹம்||"

உபய காவேரி மத்யத்தில் ஏழு பிராகாரங்களின் நடுவில் தாமரைப் புஷ்பத்தின் மொட்டுப் போன்ற ஸ்ரீரங்க விமானத்தில், மிகவும் ஸுகுமாரமான பணிபதிசயனத்தில் யோக நித்திரை செய்யும் அழகுடையவரும், இடப்பக்கத்தில் இடக்கையையும், திருமுடிப் பக்கத்தில் வலத்திருக்கையையும் வைத்திருப்பவரும், திருமகள் நிலமகள் திருக்கரங்களாலே வருடப் பெற்ற திருவடிகளையுடையவருமான ஸ்ரீரங்கநாதனை சேவிக்கிறேன்.

(1)

"கஸ்தூரீ கலிதோர் த்வபுண்ட்ர திலகம்
கர்ணாந்த லோலேக்ஷணம்
முக்தஸ்மேர மநோஹராதர தளம்
முக்தாகிரீடோஜ் ஜ்வலம் |
பச்யந்மாநஸபச்யதோ ஹரருச:
பர்யாயபங்கேருஹம்
ஸ்ரீரங்காதிபதே: கதா நு வதநம் ஸேவே
பூயோப்யஹம் ||"

திவ்யமான பரிமளத்துடன் கூடிய கஸ்தூரியினால் அமைந்த ஊர்த்வபுண்ட்ராகாரமான திலகத்தையுடையதும். செவியளவும் நீண்ட சலிய நின்ற திருக்கண்களையுடையதும், அவ்யாஜமாகச் செய்யப்பட்ட புன்சிரிப்பினால் அழகிய திருவதரங்களையுடையதும், முத்துமயமான கிரீடத்தினால் பிரகாசிக்கின்றதும், தாமரையே என்னும்படி உள்ளதுமான காண்பவர் சித்தாபஹாரியான எப்பொழுது சேவிக்கப் போகிறேன்!

(2)

"கதாஹம் காவேரீ தடபரிஸரே ரங்கநகரே
சயாநம் போகீந்த்ரே சதமகமணி
ச்யாமளருசிம்|
உபாஸீந: க்ரோசந் மதுமதந! நாராயண!
ஹரே!
முராரே! கோவிந்தேத்யநிசம் அபநேஷ்யாமி
திவஸாந்||"

காவேரிக்கரையின் சமீபத்தில் இருக்கிற ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தில் ஆதிசேஷன் மேல் சயனித்துக் கொண்டிருக்கிற இந்திர நீல ரத்தினம் போன்ற கறுத்த திருமேனியுடைய பகவானை சமீபத்தில் சென்று சேவித்து மதுமதந! நாராயண! ஹரே! முராரே! கோவிந்த! என்ற திருநாமங்களை உரக்கச் சொல்லிக் கொண்டு எனது வாழ்நாளை எப்பொழுது நான் கழிக்கப் போகிறேன்!

– உ.வே. டாக்டர் அனந்த பத்மநாபாசாரியார்,
சென்னை, 99620 11293.

ஸ்ரீரங்கநாத ஸ்தோத்திரம் தொடரும்...

# 108 திவ்விய தேச வைபவம்

# திருத்தண்கால் (திருத்தங்கல்)

58






– திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு:**

சந்திரகேது என்கிற அரசன் ஏகாதசி விரதம் இருந்த போது, ஒரு சமயம், த்வாதசிபாரணை முடிக்குமுன்பே, எண்ணெய் தேய்த்துக் குளித்த தால், விரதபங்கம் ஏற்பட்டு, புலியாகப் பிறந்து பல இடங்களில் திரிந்து, திருத்தங்கல் வருகிறான். தேவேந்திர வல்லபன் என்கிற பாண்டிய மன்னன், இங்கு வேட்டைக்கு வந்த போது, புலியை அம்பு எய்து கொன்றான். சந்திரகேது பழைய வடிவைப் பெற்றான். இந்த நிகழ்ச்சி "புலிப்பாறை" என்கிற இடத்தில் இந்த தலத்தில் நடந்தது என்று கூறுவர். திருத்தங்கலில் தங்கி வாழ்ந்ததால், அரசன் தன்னுடைய பழைய வடிவத்தை அடைந்தான் என்பர்.

கிருஷ்ணனின் பேரரான அநிருத்தன் மற்றும் பாணாசுரன் மகள் உஷை – இவர்களின் திருமணம், இந்த தலத்தில் தான் நடந்தது என்று புராண வரலாறு கூறுகிறது. பகவான், திருப்பாற்கடலில் சயனித்து இருந்த போது மஹாலக்ஷ்மி, பூமிதேவி, நீளாதேவி – மூவருக்குள் யார் முதன்மை என்று விவாதம் வந்ததாகவும், ஸ்ரீதேவி இங்குள்ள மலைக்கு அருகே வந்து தவம் இருந்ததாகவும், அங்கு இருந்த மஹரிஷிகளின் வேண்டுகோளுக்கு இணங்க அங்கே தங்கியதாகவும், பெரியபிராட்டியை எங்கும் தேடி, இங்கு வந்த பகவான், திருமகளைக் காண இங்கு வந்து இங்கேயே தங்கியுள்ளதாகவும் மற்ற இரு தேவிமார்களும் இங்கு வந்தனர் என்றும், அன்றிலிருந்து இவ்வூர் "ஸ்ரீபுரம்" என்றும், "ஸ்ரீக்ஷேத் ரம்" "திரு" தங்கியிருப்பதால் திருத்தங்கல் என்றும் பெயர் பெற்றதாகக் கூறுவர். ஆலிலைக்கும், ஆதிசேஷனுக்கும் மிகுதியான பெருமை யாருக்கு என்று போட்டி வந்த போது பிரம்மா ஆதிசேஷன் தான் பெருமை மிகுந்தவர் என்று சொல்ல, ஆலிலை இந்தத் திவ்யதேசத்தில் மலையாக ஆகி பகவானைத் தாங்கும் பெருமை பெற்றது என்பர். "திருத்தங்கால் மலை" என்றே பெயர் பெற்றது.

**சிறப்புகள்**

கருடன், ஆதிசேஷனுடன் அமிர்தகலசத்துடன் இங்கு அருள்பாலிப்பது வேறு எங்கும் இல்லாதது.

பராசரன் என்கிற பிராமணன் சேரநாட்டு பெருஞ் வேற்று உதியன் என்கிற அரசனைக் கண்டு, முக்தி மார்க்கத்தை நன்கு உபதேசித்து பொன்னும், மணியும் பரிசாகப் பெற்றுத் திரும்பும்போது, வழியில் திருத்தங்கலில் இளைப்பாற... அப்போது விளையாடிக் கொண்டிருந்த பிராமணச் சிறுவர்களில் "வார்த்திகன்" என்கிற சிறுவன், வேதங்களை நன்கு சொல்ல, மனம் மகிழ்ந்த பராசரன் என்கிற இந்த பிராமணன், தான் பெற்ற பரிசுகளை எல்லாம் இச்சிறுவனுக்குக் கொடுக்க, ஊரார், வார்த்திகனைத் திருடன் என்று சொல்லிக் கைது செய்ய, வார்த்திகனின் மனைவி கார்த்திகை புலம்ப பத்தினிக்கு நேர்ந்ததைச் சகியாத மதுரையின் காவல் தெய்வமாகிய கொற்றவை தன் கோயிலைத் தாழிட்டுக் கொள்ள, உண்மையை அறிந்த பாண்டிய மன்னன் வார்த்திகனை விடுவிக்க ஆணையிட்டு, அவனை வணங்கி இந்த ஊரையும் பக்கத்து ஊரான வயலூரையும் அவனுக்கு வழங்கியதாகச் சொல்வர்.

| | |
|---|---|
| மூலவர் | : நின்ற நாராயணன் (கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) |
| உத்ஸவர் | : திருத்தண்காலப்பன் |
| தாயார் | : செங்கமலத்தாயார் (அன்ன நாயகி), (ஸ்ரீதேவி) அம்ருத நாயகி), அநந்த நாயகி (நீளா தேவி), ஜாம்பவதி, பாரிஜாத வல்லித் தாயார். |
| விமாநம் | : தேவசந்த்ர விமானம், ஹம்ஸ விமாநம், சோமச்சந்த விமாநம் |
| தீர்த்தம் | : பாபவிநாச தீர்த்தம் |
| ப்ரத்யக்ஷம் | : ஸ்ரீதேவி, சல்லிய பாண்டியன், ஸ்ரீவல்லப பாண்டியன் மற்றும் புலி. |
| ஆகமம் | : வைகானஸம் |
| மங்களாசாஸனம் | : பூதத்தாழ்வார், திருமங்கை ஆழ்வார். |

விசேஷம் : புரூருவஸ் என்கிற சந்திர குல அரசன் தன் அரசாட்சியில் வெறுப்புற்ற சமயத்தில், மஹரிஷிகள் உணர்த்த, இத்தலத்தே வந்து பெருமானைத் தொழுது முக்தி பெற்றான் என்பர்.

### த்யானச்லோகம்

*"ஸோமச்சந்தே விமாநே ப்ரதித விபவகே*
*பாபநாசாக்ய தீர்த்தே*
*க்ஷேத்ரே ஸ்ரீக்ஷேத்ரஸம்ஜ்ஞே மஹித குண*
*கணைஸ் ஸேவிதா: தேவ ஸங்கை:।*
*ஜித்வா பாணம் ஸருத்ரம் தநுஜதபவாம்ச*
*வித்ராவ்ய நூநம்*
*திஷ்டந் நாராயணோ ந: கலயது குசலம்*
*வ்யாக்ர மோக்ஷப்ரதாதா ॥"*

– விசேஷத்யானச்லோகம்

*"ஸ்ரீமத்சீகர வாத பத்தநதலே தேவ: பிதாநாமத:*
*தீர்த்தம் பாப விநாசநாக்ய மமலம் திவ்யம்*
*விமாநம் பரம் ।*
*ஹம்ஸாக்யம் கலு பாரிஜாத லதிகா*
*தத்ப்ரேயஸீ ராஜதே,*
*தஸ்மிந் பாண்ட்ய தராதிபஸ்ய வரதோ*
*விஷ்ணு; புரஸ்தாந்முக:॥"*

– ஸ்ரீ விஷ்ணு ஸ்தலாதர்சம்

### பாசுரம்

*"தமர் உள்ளம் தஞ்சை தலை அரங்கம்*
*தண்கால்*
*தமர் உள்ளும் தண் பொருப்பு வேலை - தமர்*
*உள்ளும்*
*மாமல்லை கோவல் மதிட் குடந்தை என்பரே*
*ஏவல்ல எந்தைக்கு இடம்"*

– பூதத்தாழ்வார்

*"பேரானைக் குறுங்குடி எம்பெருமானை*
*திருத்தண்கால்*
*ஊரானைக் கரம்பனூர் உத்தமனை முத்திலங்கு*
*காரார்திண் கடலேழும் மலையே ழிவ்வுலகே*
*ழுண்டும்*
*ஆராதென்று இருந்தானைக் கண்டது*
*தென்னரங்கத்தே"*

– திருமங்கை ஆழ்வார்

*"மாறுபட வாடை எனும் வன்கால் வந்து,*
*என்முலைமேல்*
*ஊறுபட ஊர்ந்த உளைவு எல்லாம் - மாதத்*
*திருத்தண்கால் ஊரான், திருத்தண்துழாயின்*
*மருத்தண்கால் ஊராதோ வாய்ந்து"*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்



நாமாக்கள்

531. ஓம் நந்த: நம:

ஆனந்த சாதனமான பொருள் அனைத்தும் நிரம்பியவனே.

ஓம் கட்கசிஹ்நாயை நம:

லக்ஷ்மீ வாஸம் செய்யும் இடத்தை வாளேந்திய வீரர் ரக்ஷிப்பர். ஆதலால் வாளைக் காட்டும் அடையாளமாக உள்ளவளே

532. ஓம் ஸத்யதர்மா நம:

தன்னை அடைபவர்கட்கு ஆரம்பம் முதல் கடைசி வரை நேர்மையானவனே

ஓம் மஹாகார்யை நம:

பெரிய பெரிய கார்யங்களையும் செய்து முடிப்பவளே.

533. ஓம் த்ரிவிக்ரம: நம:

மூன்று வேதங்களிலும் பரவியவனே

ஓம் இந்துமாலின்யை நம:

முத்துக்களாகிற அம்ருதமயமான சந்திரர்களை மாலையாக அணிந்தவளே.

534. ஓம் மஹர்ஷி: நம:

வேதங்களைக் கண்டவனே.

ஓம் ஏகவீராயை நம:

பெருமாள் ஒருவராலேயே பலபடியாக நியமிக்கப்படுபவளே

535. ஓம் கபிலாசார்ய: நம:

கபிலர் என்கிற ஆசார்யனாகத் தோன்றியவனே

ஓம் பத்ர காள்யை நம:

க்ஷேமத்தையே கொடுப்பவளே

536. ஓம் க்ருதஜ்ஞ: நம:

தவறுகளைத் தவிர்த்து, நல்லவைகளையே அறிபவனே

ஓம் ஸ்வாநந்திந்யை நம:

இயற்கையாக தானாகவே ஆனந்தத்தை அடைபவளே

537. ஓம் மேதிநீபதி: நம:

பூமிநாயகனே

ஓம் உல்லஸத்கதாயை நம:

உயர அழகாகப் பிடிக்கப்படும் கதாயுதத்தை உடையவளே

538. ஓம் த்ரிபத: நம:

அகர, உகர, மகர, 3 பதங்கள் வேதங்கள் ஆனவனே

ஓம் நாராயிண்யை நம:

ஜீவர்களுக்கு ஆச்ரயமாக இருக்கும் பெருமாளுக்கே பெருமை அளிப்பவளே

539. ஓம் த்ரிதஸாத்யக்ஷ: நம:

ப்ரம்மாதி தேவர்களைக் காத்தவனே

ஓம்ஜகத்பூரிண்யை நம:

உலகங்களுக்கு ஸகல ஸம்ருத்தியையும் உண்டாக்குபவளே.

540. ஓம் மஹாச்ருங்க: நம:

கோரப்பற்களின் நுனியால் பூமியைத் தாங்குபவனே

ஓம் உர்வராயை நம:

ஸமஷ்டிச்ருஷ்டி இறுதியில் பூமியைப் படைத்து, அதில் அதை நியமிப்பதற்காகத் தானும் ப்ரவேசிப்பவளே.

ஸ்ரீமதே ரக்தா பங்கஜவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீநாராயண பரப்ரம்மணே நம:

## குறிப்பு :

விருதுநகர் தென்காசி ரயில் மார்கத்தில் உள்ளது. விருதுநகர் ஸ்ரீவில்லிபுத்தூர் இங்கிருந்தும் பேருந்து வசதி உண்டு.

திவ்ய தேச வைபவம் வளரும்...

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

**சேனை முதலியார் வாழித்திருநாமம் தொடர்ச்சி...**

*(எழிற்பிரம்பின் செங்கோலை ஏந்துமவன்)* எழில் – உயர்ச்சி, செங்கோலை ஏந்துமவரான சேனை முதலியாருக்கு உயர்வாவது *"தன்னைக் காட்டிலும் பெரியவர், ஸமர்த்தர்"* என்று எம்பெருமான் எண்ணி அவனுடைய விண்ணாட்டையும் மண்ணாட்டையும் நிர்வகிக்கும் பாரத்தை அவரிடம் ஒப்படைத்த தாகும். வித்யா ரூபியாய் பிரசித்தியான பிரம்பைக் கைக்கொண்ட சேனைமுதலியார் எம்பெருமா னுடைய கைங்கர்யத்தை எதிர்பார்த்து ஸ்ரீவைகுண டத்தில் எழுந்தருளியிருக்கிறார் என்று திவ்ய ஸூரிசரிதம்(சுலோ.66) கூறும். மேலும் *"யத் யதா ந்யவேதி தத் ததாநுஜாநந்தம் உதார வீக்ஷணை:"* என்று ஆளவந்தார் அருளியபடியே எந்தக் காரியம் எம்மாதிரி எம்பெருமானால் விண்ணப்பம் செய்யப் பட்டதோ, அதில் உள்மானம் புறமானங்கள் பார்ப்ப தில்லை. செய்யும் ப்ரகாரங்கள் நினைப்பதில்லை. அருள் நிரம்பிய பார்வைகளாலே அந்தக் காரி யத்தை அம்மாதிரியை செய்வது என்று நியமித்தருளுவதாகும். ஈச்வரன் இவர் சொல்லை பின் செல்லுமத்தனை என்பர். இங்கு அருள் நிரம் பிய பார்வையாவது – எல்லையற்ற ஸௌஹார்த்த அநுராகத்தால் உண்டான பார்வைகள் என்பர் பெரிய வாச்சான்பிள்ளை. ஐயராலே (சேனை முதலியா ராலே) யாதொரு விண்ணப்பம் செய்யப்பட்டதோ, அது அப்படியே என்று சொல்லை பரப்பர நியமிப்ப தாகும். பட்டர் ஸ்ரீரங்கராஜ பூர்வ சதகத்தில் (50) சேனை முதலியாரை வழிபடுவதாகச் சொல்லும் போது அவர் ஸ்ரீரங்கநாதனைப் பிராட்டியோடு கூட திருவிளையாடல் செய்யும்படியாக சேஷாஸனத் தில் உட்கார வைத்து எல்லா அறிவில் பொருள், அறி வுள் பொருள்களையும் நியமிக்கும் அதிகாரத்தை எப்போதும் தமது திருவிரல் முத்திரை கொண்டே நிர்வகிக்கிறார் என்று அருளுவது காணலாம். அந்த அங்குலி முத்திரை சேனை முதலியாருடைய திருக் கோலங்களில் இன்றும் காணலாம். வேதாந்த தேசிகரும் தாம் அருளிய யதிராஜ ஸப்ததியில் (3) *"யத்வேத்ர சிகர ஸ்யந்தே விச்வமேதத் வ்யவஸ்திதம்"* என்கிறபடியே தம் கைப்பிரம்பின் கீழ் வைத்து உலகம் எல்லாவற்றையும் நடத்தி வருபவர் சேனை முதலியார் என்றது காண்க. திருவரங்கத்தந்தாதியில் (1) *"ஆழி அம் கையில் பொன் பிரம்பு ஏந்திய சேனையர்கோன்"* என்று அருளியதற்கு ஏற்ப, *"சிறந்த மோதி ரத்தை அணிந்த அழகிய கையில் பொன்மயமான பிரம்பை-செங்கோலை தரித்த சேனையர்கோன்"*



என்றதும் காண்க. விஜய நகர அரசரான கிருஷ்ண தேவராயர் எழுதிய "ஆமுக்தமால்யத" என்னும் நூலில் திருவரங்கத்தில் உள்வாசலில் சேனை முதலியார் இருப்பை பிரம்பைக் கையில் பிடித்து, மணி அரங்கில் சித்திரக் கம்பள விரிப்பின் மேல் வெண்டாமரைக் கண்ணன் உருவம் பொறித்த மோதிரம் அணிந்த விரல் மிளிர, இருபுறமும் சிறிதே வணங்கியவாறு அசையாதுள்ள யானை முகத்தினர் நூற்றவர் பணிந்து நிற்ப அமர்ந்துள்ளார் விஷ்வக் சேனர் என்றது காண்க. திருக்குடந்தை ஆராவமுதன் ஸந்நிதியில் உற்சவர் சேனை முதலியார் நின்ற திருக்கோலத்தில் இருப்பது காணலாம்.

*(பாங்குடன் முப்பத்து மூவர் பணியுமவன்)* முப்பத்து மூவர் – எட்டு வசுக்கள், பதினோரு ருத்ரர்கள், பன்னிரண்டு ஆதித்யர்கள், அசுவனி தேவர்கள் இருவர் ஆக முப்பத்து மூன்று தேவர்களாவர். பரமபதத்திலுள்ள நித்ய முக்தர்கள் திரளுக்கும் மற்ற உலகங்களிலுள்ள திருமால் அடியார்க்கும் தலைவராதலால் சேனை முதலியார் என்றும் சேனைத் தலைவர் என்றும் சொல்லப்படுவதாகக் கூறுவர் பெரியோர்.

*(பங்கயத்தாள் திருவடியைப் பற்றினான்)* ஸ்ரீவிஷ்வக்ஸேந ஸம்ஹிதையிலே பூவளரும் திருமகளாலே அருள் பெற்று அத்தாலே *''ஸ்ரீமதி விஷ்வக்ஸேநே''* என்னும்படி கைங்கர்ய ஸ்ரீயையுடைய சேனைமுதலியார் என்பர்.

*(சேனையர்கோன் செங்கமலத் திருவடிகள்)* – சேனையர்கோன் – பரமபதத்திலுள்ள நித்ய முக்தர்களுக்குத் தலைவர். *''அசைவில் அமரர் தலைவர்''* என்று நம்மாழ்வார் (திருவா.5–8–9) அருளியதற்குச் சேர ஞானத்துக்கு குறைவு வளர்ச்சிகளை உடையவரன்றிக்கே இருக்கிற அமரர் உண்டு நித்யஸூரிகள். அவர்களுக்குத் தலைவனான ஸ்ரீசேநாபதியாழ்வான் என்பர் நம்பிள்ளை. இவருடைய கார்யமும் எம்பெருமான் புத்திக்கு அதீனமாயிருக்கிறபடி என்பர். *''வானவர் வானவர் கோனொடும்''* என்ற இடத்தில் வானவருண்டு – நித்ய ஸூரிகள். வானவர் கோனுண்டு – ஸ்ரீசேனாபதியாழ்வான். அவரோடே கூட திவ்யமான மலர்களைக் கொண்டு முறைகெட பரிமாறுவர் (திருவா.3.3.2) என்று நம்பிள்ளை சுவைபட உரைப்பது காண்க. நம்மாழ்வார் *''கோயில் கொள் தெய்வமெல்லாம்''* (திருவா.8.6.5) என்று அருளியதற்கு ஏற்ப பரமபதத்தில் சேனைமுதலியாருக்கும் ஒரு கோயில் உண்டாயிருக்கும் என்பர். மேலும் கஜானனர் முதலானோர்களுக்கு ப்ரபத்தியை வெளியிட்டருளினவர் சேனை முதலியார் ஆவர் என்று பிள்ளைலோகம் சீயர் அருளுவர். திருவரங்கத்தில் இரண்டாம் திருச்சுற்றின் வட கிழக்கு மூலையில் அனுமன், விபீஷணன் ஆகியரோடு சேனை முதலியாரும் எழுந்தருளியிருப்பது காணலாம். *''அமரர் கோன் அர்ச்சிக்கின்று''* (திருவா.10.2.6) என்று நம்மாழ்வார் அருளியதற்கு ஏற்ப திருவனந்தபுரத்தில் *''ஸ்ரீஸேனாபதியாழ்வான் நித்ய கைங்கர்யம் பண்ணுகிறான். நித்ய ஸூரிகள் எடுத்துக்கை நீட்டுவார்''* என்று நம்பிள்ளை உரைப்பர். அது மட்டுமின்றி நித்ய ஸூரிகள் தலைவரான சேனை முதலியார் அனந்தபத்மநாபனை அர்ச்சனத்துக்கு ஏற்ப அந்த எம்பெருமான் தன் திருமுகத்தை மூன்று திருவாசலில் முதல் திருவாசலிலே காட்டும் என்று உரைப்பர். ஆசார்ய இருதய நூலில் (சூ.183) அழகிய மணவாளப் பெருமாள் சுவைபட அனுபவிப்பது காணலாம்.

இப்படிப்பட்ட பெருமைகளை உடைய சேனை முதலியார் தினந்தோறும் ஸ்ரீவைஷ்ணவர்கள் அனுஸந்திக்கும் குருபரம்பரையில் ஆரோஹண க்ரமத்தில் பெரிய பிராட்டியாருக்கு அடுத்ததாக *''ஸ்ரீவிஷ்வக்ஸேனாய நம''* என்று அருளுவது வழக்கம். அத்தகைய சேனை முதலியார் திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடுவோமாக.

வாழித்திருநாமம் வளரும்...

**வாசகர்களே...**

**ஏழு மலைகள் நிறைந்த திருமலையில் நித்திய வாசம் செய்யும் கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடவன் தங்களுடைய வாழ்வில் நிகழ்த்திய திருவிளையாடல்கள் அதாவது ஸ்வாமியின் திருலீலைகளை ஸப்தகிரி பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஏதுவாக அதை எழுதி ஸப்தகிரி அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

*எங்கள் முகவரி :*

**பிரதான ஆசிரியர்,**
**"ஸப்தகிரி", தி.தி.தே.,**
**கபிலத்தீர்த்தம் சாலை, திருப்பதி - 517 507.**
**0877- 2264543, 2264359.**



# கொரோனாவை அழிக்கும் அருமருந்து ஆயுர்வேதம்

தெலுங்கு மூலம் : டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் : திருமதி வி.உஷா, 99850 02156

****************

உலகையே நடுங்க வைத்து உயிரை அழித்து வரும் கொடிய அரக்கன் – கொரோனா. இத்தொற்றிலிருந்து அதாவது முதல் அலையிலிருந்து தப்பித்தோம் என்று ஆனந்தப்படும் முன்பே இரண்டாம் அலையாக உருவெடுத்து மக்களின் உயிரைக் கொன்று குவித்து வருகிறது.

எப்பொழுது இந்நோயை அடியோடு விரட்டும் வாய்ப்பு கிட்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றோம்.

கொரோனா என்ற வைரசினால் இந்த நோய் வருகிறது. ஆகையால் இதனை கொரோனா வைரஸ் டிசீஸ் அல்லது கோவிட் என்றும் அழைக்கின்றனர். வேற்று மொழியில் கொரோனா என்றால் கிரீடம் என்று பொருள். இது வைரஸ்களுக்கு எல்லாம் மகுடம் போன்றிருப்பதால் இப்பெயர் வழங்கலாயிற்று.

கண்ணுக்குப் புலப்படாத மிக நுண்ணிய கிருமி இந்த வைரஸ். இது போன்ற கிருமிகள், பாக்டீரியாக்களால் ஏற்படுகின்ற கொடிய நோய்களை தடுக்கும் முறைகள் மற்றும் சிகிச்சைகள் ஆகியவற்றை எல்லாம் நம் முன்னோர்கள் மருத்துவ புத்தகங்களில் எழுதி வைத்துள்ளனர்.

கிருமிகளால் பல விதமான நோய்கள் ஒருவரின் மூலம் மற்றொருவருக்குப் பரவுகின்றது. இதனைத் தொற்றுநோய் என்று கூறுவர். தொற்று நோய்கள் ஏற்பட்ட போது நாம் கடைபிடிக்க வேண்டிய சில வழிமுறைகள் பற்றி ஆயுர் வேத நூலில் இவ்வாறு சொல்லப்பட்டுள்ளது.

*''ப்ரசங்காத் காத்ர சம்ச்பர்சாத் நிச் வாசாத் சஹபோஜனாத்...''*

மனிதர்கள் அருகருகே இருந்து கொண்டு பேசுதல், கைக்குலுக்குதல், கட்டிப்பிடித்தல், தொடுதல், ஒருவர் சுவாசித்தக் காற்றை ஒருவர் சுவாசித்தல், அவர்களுடன் அருகில் அமர்ந்து உண்ணுதல், அவர்களின் அருகில் படுத்தல், அமர்தல், ஒருவரின் துணிகளை மற்றொருவர் அணிந்து கொள்ளுதல் போன்றவற்றால் சில தொற்று நோய்கள் பரவ வாய்ப்பு உண்டு என்று சொல்லப்பட்டுள்ளது.

சில வியாதிகள் தும்மல், இருமலின் போது வெளிப்படும் சிறு நீர்த்துளிகள் வழியாகப் பரவும். அந்த நீர்த் துளிகளைத் தொட்டுவிட்டு மூக்கு, கண், வாய் போன்ற உறுப்புகளை தொட்டாலும் வியாதி பரவி உயிரைக் கொல்லும். இவ்வகையைச் சார்ந்த வியாதியே இந்த கொரோனா வைரஸ் வியாதி.

*''நச சர்வாணி சரீராணி வ்யாதி க்ஷமத்வே சமர்தானி பவந்தி''* என்ற வாக்கியத்தில் எல்லா மனிதர்களுக்கும் ஒரே விதமான நோய் தடுப்பு சக்தி இருக்காது என்றும், சக்தி குறைவாக இருப்பவரிடம் அதிக அளவில் நோய் உற்பத்தி தன்மை இருக்கும் என்றும் ஆயுர்வேத சித்தாந்தம் கூறுகிறது. இவ்வியாதி வராமல் தடுக்க முககவசம் அணிந்து கொண்டு, சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் வேண்டும்.



**சானிடைஜர் தாயாரிக்கும் முறை**

**200 மி.லி. நீரில் 50 கிராம் வேப்ப இலை, ஒரு டீஸ்பூன் உப்பு போட்டு சூடு செய்து கொதிக்கும் சமயத்தில் ஒரு டீஸ்பூன் மஞ்சள் போட்டு இறக்கி ஒரு டீஸ்பூன் கற்பூரம் பொடி சேர்த்து மூடி வைத்து குளிர்ந்த பிறகு ஒரு சீசாவில் வைத்துக் கொண்டு அந்த திரவத்தை சானிடைஜராக உபயோகப்படுத்தலாம்.**

கைகளை நன்றாக சோப்பு அல்லது சானிடைசர் கொண்டு தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

சூடாக சமைத்த உணவுகளை உட்கொள்ள வேண்டும். நாள்தோறும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். சூடான தண்ணீரால் ஆவி பிடித்தல் வேண்டும். வைரசின் சக்தி குறையவும், நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கவும் துணைபுரிய நல்ல மருந்துகள் ஆயுர்வேத மருத்துவத்தில் உள்ளன. அவற்றை பயன்படுத்தி இந்த நோய் தொற்றிலிருந்து நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்.

# ஆயுர்வேதத்தில் அருமருந்து



- நன்கு இடித்த இலவங்கம், ஓமம், கற்பூரம் ஆகியவற்றை சம அளவில் எடுத்துக் கொண்டு ஒரு துணியில் போட்டு மூட்டைக் கட்டி அந்த வாசனையை சுவாசித்தால் நல்லது.
- கடுகு எண்ணெய் விரலால் எடுத்துக் கொண்டு மூக்கில் பூசிக் கொண்டால் சளி, சுவாசக் கோளாறுகள் போன்றவை வராமல் தடுக்கலாம். இவ்வாறு செய்வதால் தொண்டை, மூக்கு, வாய் போன்ற பாகங்களில் வைரஸ் பரவாமல் தடுக்கலாம்.
- ஒரு லிட்டர் வெந்நீரில் 10 துளசி இலைகள், 10 மிளகு நன்கு இடித்து போட்டு, 5 கிராம் இஞ்சி, 10 கிராம் வெல்லம், 1 கிராம் சுக்குப்பொடி, மஞ்சளை மிதமான சூட்டில் நீர் பாதி ஆகும் வரை கொதிக்க வைத்து, இறக்கி வடிகட்டி நாள்தோறும் குடிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.
- நாள்தோறும் ஒரு முறை 250 மி.லி. கொதிக்கும் நீரில் கால் டீஸ்பூன் மிளகுப்பொடி, 3-4 சிட்டிகை மஞ்சள் போட்டு மூடி வைத்து, வெதுவெதுப்பான சூடு உள்ள போது வடிகட்டி 3 டீஸ்பூன் தேன் கலந்து அரை மூடி எலுமிச்சை பிழிந்து குடித்தல் வேண்டும்.
- 5 டீஸ்பூன் மிளகுப்பொடி, இரண்டரை டீஸ்பூன் ஓமம் பொடி, இரண்டரை டீஸ்பூன் சீரகப்பொடி, ஒரு டீஸ்பூன் சுக்கு பொடி, கால் டீஸ்பூன் பட்டைப்பொடி ஆகியவற்றை கலந்து வைத்துக் கொண்டு நாள்தோறும் ஒரு முறை ஒரு லிட்டர் நீரில் அரை டீஸ்பூன் இப்பொடியைப் போட்டு நீரைக் கொதிக்க வைத்து 3அல்லது 4 சிட்டிகை கற்பூரம் போட்டு வடிகட்டி நாள்தோறும் 100-150 மி.லி. வரை உபயோகித்தல் வேண்டும். நோயால் பாதிக்கப்பட்டால் இதனை 3-4 பாகமாகப் பிரித்து 3 அல்லது 4 வேளை உபோயகித்தல் வேண்டும்.
- நாள்தோறும் 3 வேளை ஒரு இலவங்கம், ஒரு ஏலக்காய், பட்டை ஆகியவற்றை வாயில் வைத்துக் கொண்டு அந்த ரசம் விழுங்கினால் நுரையீரல் பாதிப்பு ஏற்படாமல் தடுத்து நோய் எதிர்ப்பு சக்தியை உண்டாக்கும்.



சென்ற இதழின் தொடர்ச்சி...

# ஸ்ரீமத் பகவத்கீதை

தெலுங்கு மூலம் :
திரு.கே.விஸ்வநாத சாஸ்திரி
தமிழாக்கம் :
டாக்டர் சி. கோவிந்தசாமி,
94445 82356.

மானிடர்கள் தம் உடலை எவ்வளவு வருத்திக் கொள்வதானாலும் வருத்திக் கொள்வார்களேத் தவிர, தானம் செய்வதற்கு மட்டும் விரும்ப மாட்டார்களாம். கையிலே பணத்தை வைத்துக் கொண்டிருக்கும் ஒருவனிடம் திருடன் வந்து உன் கையில் உள்ள பணத்தைக் கொடுத்து விடுகிறாயா? அல்லது என்னிடத்தில் நன்றாக அடிப்படப் போகிறாயா? என்றான். அதற்கு அவன் என்னை ஒரு அடியானாலும் அடித்துவிடு, அடிவாங்கிக் கொண்டாவது ஓடிவிடுகிறேன் என்பானே தவிர, அவன் கையில் உள்ள பணத்தை மட்டும் வீசி எறிந்து விட்டு போகமாட்டான். பணத்தின் மீது மானிடருக்கு அவ்வளவு ஆசை உள்ளது. எனவே மானிடரிடத்தில் உள்ள கஞ்சத்தனமும், பணத்தின் மீது அவர்களுக்கு உள்ள மோகத்தையும் மனதில் கொண்டு "தத்த" என்றால் தானம் செய்யுங்கள் என்று மானிடர்கள் ஒரு முடி வுக்கு வந்தனர். அப்படியானால் மீதமுள்ள இரண்டு "த" க்களுக்கு பொருள் என்ன? அவை இரண்டும் தேவர்களுக்கும், அசுரர்க ளுக்கும் உரியதாகும். அதற்கும் நமக்கும் சம்மந்தம் இல்லை.

ஆகவே நமக்கு ஒரு "த" போதும் என மானிடர்களில் சிலர் தீர்மானித்துக் கொண்டனர். இருப்பினும் சில மஹரிஷிகள் ஒன்று கூடினர். பிரஜாபதி அவர்கள் "த,த,த" என்று மூன்று "த" க்களைச் சொல்லியிருக்க நாம் ஒரு "த" வுக்கு மட்டும் பொருள் சொல்லிக் கொண்டால் எப்படி? மூன்று "த" க்களுக்கும் பொருள் சொல்ல வேண்டும் அல்லவா? ஒருவேளை ஒரு "த" வை மட்டும் சொல்ல வேண்டும் என அவர் நினைத்திருந்தால் தேவர்களை மட்டும் தனியாக அழைத்து "த" எனக் கூறியிருப்பார். அவ்வாறே மானிடர்களை தனியாக அழைத்து "த" எனக் கூறியிருப்பார். அப்படியே அசுரர்களையும் அழைத்து "த" எனக் கூறியிருப்பார் அல்லது சபை நாகரீகம் கருதி மூவரையும் அழைத்தாவது "த" எனச் சொல்லியிருக்க வேண்டும். அப்படி அல்லாமல் "த, த, த" என்று மூன்று முறை எதற்குச் சொல்ல வேண்டும். இதில் ஏதோ ஒரு கருத்து மறைந்துள்ளது. இது தேவர்களுக்கோ அல்லது அசுரர்களுக்கோ சொல்லப்பட்ட உபதேசம் அல்ல. மானிடர்களுக்கும் நமக்கும் சொல்லப்பட்ட உபதேசமாகவே கொள்ள வேண்டியுள்ளது.

தேவர்களுக்கு என்ன உபதேசம்? அசுரர்களுக்கு என்ன உபதேசம்? என்று ஆராய்ச்சி செய்ய வேண்டிய அவசியம் நமக்கில்லை. நாம் மஹரிஷிகள் மனிதர்கள். எனவே நமக்கே உபதேசம் செய்தார். என்ன வென்று செய்தார்?"தாம்யத" அதாவது, நீங்கள் அகங்காரம் இல்லாமல் இருப்பீர்களாக, "தத்த" தானங்களை தாராள மாகச் செய்யுங்கள். இயன்ற வரையில் செய்யுங்கள். "தயத்வம்" கருணையோடு இருங்கள் என்பதாகும். இந்த மூன்று உப தேசங்களும் நமக்கே அவர் செய்தார் என்றால், இந்த மூன்று குணங்களும் நம்மிடத்தில் இருக்க வேண்டும். அப்படியே அசுர குணங்கள் கொண்டி ருக்க வேண்டும்.

மேலும், மானிடர் குணங்களையும் பெற்றிருக்க வேண்டும். அப்பொழுது தானே இந்த உபதேசங்களை நாம் கிரகித்துக் கொள்ள முடியும். அப்படியென்றால் நம்மிடத்தில் இந்த மூன்று குணங்களும் உள்ளது போல நம்மிடத்தில் தேவ குணங்கள், அதாவது நற்குணங்கள் பல உள்ளன. மேலும், நேர் மறை சிந்தனைகளும் கொண்டுள்ளோம். அதேபோல நம்மிடத்தில் அசுர குணங்களும் மறைந்திருக்கின்றன. அசுர எண்ணம் என்பது மிகவும் கொடூரமான செயல்களாகும். அப்படிப்பட்ட எண்ணங்களும் நம்மிடம் சிறிது உள்ளது. மேலும் எதிர்மறை சிந்தனைகளைக் கொண்டுள்ளோம். பொதுவாக மானிடர் குணங்களையும் நாம் பெற்றுள்ளோம்.

எனவே, நம்மிடத்தில் தேவகுணம், அசுரகுணம், மானிடகுணம் என மூன்று குணங்களும் உள்ளன. இன்னும் நாம் சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் தேவர்களாக எவ்வாறு பிறப்பெடுக்கிறார்கள் என்றால், அவர்கள் செய்த மிகுந்த புண்ணிய காரியங்களே அதற்கு காரணமாகின்றது. அதிக பாவங்கள் மட்டுமே செய்பவர்கள் அசுரர்களாகப் பிறக்கிறார்கள். பாவங்களையும் புண்ணியங் களையும் இரண்டையும் செய்த காரணத்தால் மானிடர்களாக இம்மண்ணில் பிறப்பெடுக்கிறார்கள். பாவம் புண்ணியம் என்ற இரண்டும் நம்மிடம் இருப்பதினால், நல்லதும் தீயதுமான எல்லா குணங்களும் நம்மிடம் உள்ளன. நம்மிடம் இல்லாத குணம் என்று ஒன்று இல்லை என்றே சொல்லலாம்.

நற்குணத்திற்கும் அசுர குணத்திற்கும் எப்பொழுதும் போராட்டம் நடந்து கொண்டே இருக்கும். இப்போராட்டத்தில் தேவகுணம் வெற்றி பெறும் போது கவனத்தோடு இருக்க வேண்டும். அசுர குணம் வெற்றி பெறும் போது மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மனித குணம் வெற்றி பெறும்போது மிகவும் கவனத்தோடு இருந்து மேலும் மேன் நிலைக்குச் செல்ல நாம் முயற்சி செய்ய வேண்டும். இதுவே பிரஜாபதி செய்த உபதேசமாகும். இந்த விஷயத்தை மஹரிஷிகள் நன்றாக புரிந்து கொண்டு "தம்யத" "தத்த" "தயத்வம்" என்று மூன்று "த"க்களுக்குப் பொருளை விளக்கிக் கூறி, அனைவரும் அறியும் படியாக விரித்தும் கூறினர். மானிடர்க்கு பொதுவான குணம் "நற்குணமே". நற்குணமே மானிட தத்துவம்.

தொடரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 57க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ந | ர | சி | ம் | ம | ர் | மி | சு | ட் | 2 ல | 3 ஆ | 4 தி |
| யூ | ன் | ம | பி | 5 அ | கூ | ம் | மை | | ம் | ர் | ரு |
| ர் | த | 6 நா | க | ங் | 7 ர | ம | ழ | | ம | த் | க் |
| லை | த் | த | | கா | 8 வ | ர் | கி | | நா | தி | க |
| ல் | சி | மு | ன் | ர | சு | 9 கூ | க் | 10 ஜ | ர | ப் | ண் |
| ம | ணு | னி | த | க | தே | 11 பொ | ளி | டா | ஸ் | பி | டி |
| ல் | ஷ் | க | லா | ன் | வ | ய் | ள் | யு | ஹ | ர | யூ |
| ட | 12 வி | ள் | க | ம் | ர் | கை | 13 வெ | கு | ச | ப | ர் |
| க | | டா | ர | ன | 14 தா | யா | ரை | ண் | ணு | ந் | |
| க் | | ண் | 15 பி | 16 வா | | ழ் | | ட | ஷ் | த | |
| ரு | | 17 ஆ | யி | ர | ம் | வா | | ம் | 18 வி | ம் | |
| 19 தி | ரு | நி | ன் | ற | வூ | ர் | ம் | ண | வோ | ரு | 20 தி |



அலசுவோம்......
அறிவோம்....
ஆதிகாவிய
நாயகர்களை......

# யுதிஷ்டிரர்

“அறநெறி இது தான்”
என்று வாழ்ந்து காட்டிய
அருமையான
கதாபாத்திரம்

திரு. சத்யதாரா, சென்னை,
99445 61445.

“ஜ்யேஷ்டா” எனப்படும் கேட்டை நக்ஷத்திரத்தில் அவதரித்தவர் யுதிஷ்டிரர். மஹாபாரத காவியத்தில் மஹாராணி குந்தியின் மூத்த மைந்தன். யுதிஷ்டிரரின் வரலாற்றினை அலங்கரிக்கும் சில அற்புதமான கட்டங்கள்.

தந்தை இறந்தவுடன் பீஷ்மருடன் ஹஸ்தினாபுரம் வந்து சேர்ந்த யுதிஷ்டிரருக்கு வயது 16. திரௌபதியை பாண்டவர்கள் ஐவரும் மணந்த பிறகு மீண்டும் ஹஸ்தினாபுரம் வந்தபின் ராஜ்யத்தின் பாகம் பிரிக்கப்படுகிறது. தங்களுக்கு அளிக்கப்பட்ட கரடு முரடான மலைப் பகுதியான காண்டவப்பிரஸ்தம் என்ற வனப் பகுதியை விஸ்வகர்மாவின் உதவி கொண்டு “இந்திர ப்ரஸ்தம்” என்ற பெயரில் உருவாக்கி மிக அற்புதமாக சுமார் 23 ஆண்டுகள் ஆட்சி செய்கிறார்.

ராஜசூய யாகத்தில் ஸ்ரீகிருஷ்ணனால் சிசுபாலன் வதம் செய்யப்படுவதைத் தொடர்ந்து ஒரு சபதம் மேற்கொள்கிறார்.... “இன்று முதல் 13 ஆண்டுகள் என் சகோதரர்களையும் மூத்தோர்களையும் கடிந்து பேச மாட்டேன். குலத்து மூத்தோர்களின் கட்டளைகளை சிரமேற்கொள்வேன். எந்த நிலையிலும், கலகம் மூண்டு, யாருடைய அழிவிற்கும் காரணமாக இருக்க மாட்டேன்” என்பதே அந்த சபதம். இதுவே பின்னாட்களில் அவர்களுடைய பகைவர்களான துரியோதனாதிகளுக்கு சாதகமாகி விடுகிறது.

சூதாட்டத்தில் தோற்ற யுதிஷ்டிரர் தனது தம்பியருடனும், திரௌபதியுடனும், பன்னிரண்டு ஆண்டு கால வனவாசமும்



# பரசுராமர்

விஷ்ணுவின் தசாவதாரங்களில், முதல் ஐந்து அவதாரங்கள் யாவும், அவை கொண்ட வடிவால் (மீன், ஆமை, பன்றி, நரசிம்மம், வாமனன்) பெயர் பெற்றவையாய் இருக்க, பரசுராம அவதாரமோ, தன் கையில் ஏந்திய படையால் (பரசு–கோடாரி) பெயர் பெற்றது எனலாம்.

பரசுராம அவதாரம் என்பது திருமாலின் ஆறாவது அவதாரமாகும். இவ்வவதாரம் பாரத தேசத்தில், தற்போதைய கேரள மாநிலத்தில் தோன்றியபடியால், இன்றும் கேரள மாநிலம் “பரசுராம க்ஷேத்ரம்” என்றே போற்றியழைக்கப்படுகிறது. “பரசுராமன்” என்ற பெயரையும் பல குடும்பங்களில் தம் குழந்தைகளுக்கு இட்டு அழைக்கிறார்கள்.

ஸப்த ரிஷிகளுள் ஒருவரான ஜமதக்னி முனிவருக்கும் அவரின் மனைவியான ரேணுகா தேவியின் கடைப் பிள்ளையாக அந்தணர் குலத்தில் அவதரித்தவர் திருமாலின் அம்சமாகிய பரசுராமர். இவர் அந்தண குலத்தில் தோன்றினாலும், ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் மிகுந்த ஈடுபாடு கொண்டு, குறிப்பாக “கோடாரி” என்னும் ஆயுதத்தைத் தன்னிடம் காப்பாகக் கொண்டதால், “பரசு ராமன்” எனும் பெயருடன் விளங்கினார். சிவதவம் புரிந்து சிவனிடமிருந்து கோடரியும், மற்றைய ஆயுதங்களையும் வரமாகப் பெற்றார்.

ஓராண்டு அக்ஞாத வாசமும் மேற்கொள்ள நேரிடுகிறது. வனவாச காலத்தில், சூரிய தேவனின் கிருபையால் ஓர் " அக்ஷய பாத்திரம்" கிடைக்கப் பெறுகிறார்.

அதன் மூலம், வன வாசத்தில், பாண்டவர்களின் உணவுப் பிரச்னை தீர்கிறது. வனவாசத்தின் போது கொண்ட ஒரு அனுபவத்தில், யமதர்ம ராஜன் ஒரு யக்ஷ ரூபத்தில் வந்து கடுமையான சோதனைகளுக்கு உள்ளாக்கும் சமயம், யக்ஷன் கேட்ட கேள்விகளும் யுதிஷ்டிரன் அளித்த பதில்களும் "யக்ஷப்ரஸ்னம் "என்ற பெருமை கொண்ட தொகுப்பு, (இந்த கட்டத்தில் யுதிஷ்டிரரின் நேர்மையான தர்மம் நிறைந்த சிந்தனை மிகவும் பாராட்டப்படுகிறது). அகமகிழ்ந்த தர்மராஜன் யுதிஷ்டிரர் கோரிய படி, (1) ஓராண்டு அக்ஞாத வாசம் யாரும் கண்டு கொள்ள இயலாமல் வெற்றி பெற வேண்டும் (2) தனது மனம் வாழ்நாள் முழுதும் சத்யம், தர்மம், நீதி தவறாத நேர்மை, ஆகிய நெறிகளை கொண்டதாகவே இருக்க வேண்டும் என்ற இரண்டு வரங்களை அளிக்கிறான்

13ஆம் ஆண்டு அக்ஞாதவாசத்தில் – யுதிஷ்டிரர், விராட நாட்டு மன்னனுக்கு, பகடையாடி களிப்பூட்டும் பணியாளாக "கங்கபட்டர்" என்ற பெயரில் மறைந்து வாழ்கிறார்.

18 நாட்கள் நடந்த மஹாபாரத யுத்தத்தில், யுதிஷ்டிரர் ஒரு தவறு செய்ய நேரிடுகிறது. 15ஆம் நாள் யுத்தம். கௌரவ சேனாதிபதியாக இருந்த துரோணரை வீழ்த்த இருந்த ஸ்ரீகிருஷ்ணரின் எச்சரிக்கையைத் தொடர்ந்து பீமன் அஸ்வத்தாமா என்ற பெயருள்ள ஒரு யானையை கொன்றான். "அஸ்வத்தாமா இறந்து விட்டான்" என்று சொல்லி கூத்தாடினான்.

இதனை செவியுற்ற துரோணர் இது உண்மை தானா.... என்று அறிய "சத்ய சந்தரான யுதிஷ்டிரரை நோக்கி .. "இது உண்மையா" சொல் தர்மபுத்திரா..." என்கிறார். பொய் உரைப்பதற்கு யுதிஷ்டிரர் அறவே விரும்ப வில்லை. ஆனால் ஸ்ரீகிருஷ்ணராலும் பீமனாலும் உந்தப்பட்டு. "அஸ்வத்தாமா ஹதஹ குஞ்சரஹ" என்று பதில் இறுத்தார் (அஸ்வத்தாமன் என்ற யானை இறந்தது என்று பொருள்). முதல் இரண்டு வார்த்தைகளை மிக உரத்த குரலிலும், மூன்றாவது வார்த்தையை மிக மெதுவாகவும் கூறுகிறார். முதல் இரண்டு வார்த்தைகளை கேட்ட

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

## திருமலையில் பார்க்க வேண்டிய முக்கிய இடங்கள்

**ஸ்வாமி புஷ்கரணி :**

இந்தத் திருக்குளம் திருமலையில் திருமலை யான் சந்நதியின் அருகிலுள்ளது. பக்தர்கள் கோயிலுக்குள் நுழையும் முன்னர் இந்தப் புனிதமான திருக்குளத்தில் நீராடினால் தனது உடல் சுத்தத் துடன் மனசுத்தியும் ஆகிறது.

**ஆகாஸகங்கை :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

**பாபவினாசம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**வைகுண்ட தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையில் 5 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தும்புரு தீர்த்தம் :**

இந்தத் தீர்த்தம் ஆலயத்தின் வடக்கு திசையிலிருந்து 16 கி.மீ. தூரத்திலுள்ளது.

**தி.தி.தே. வனத்தோட்டம் :**

தேவஸ்தானத்தினர் திருமலையில் கண்களுக்கு விருந்தளிக்கும் விதத்தில் வனத்தோட்டம் வளர்க்கின்றனர். இந்தத் தோட்டத்தில் மிகவும் அழகான செடிகள், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுகின்றன.

**புவியியல் வளைவு (சிலாதோரணம்) :**

புவியியல் அமைப்பில் இயற்கையாக அமைந்த இந்த சிலாதோரணம் ஆலயத்தின் வடமேற்கு திசையிலிருந்து 1 கி.மீ. தூரத்திலுள்ளது.

**நாதநீராஜன மண்டபம் :**

தர்ம பிரசார பரிஷத்தின் கீழ் இயக்கப்படுகிற இந்த மண்டபத்தில் சொற்பொழிவுகள், ஹரிகதை கள், சங்கீத பஜனைகள் இன்னும் பல கலைநிகழ்ச்சி கள் நடத்தப்படுகின்றன.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா தியான மண்டபம் :**

அபூர்வமான புராண பொருட்களோடு மட்டுமல்லாமல் சித்திர, சிலை கைவண்ண கலை வேலைப்பாடுகளோடு தியானத்திற்கு ஏற்றவாறு அமைந்த மண்டபம் இது. திருமலை எஸ்.வி. மியூஜியம் அருகே தியான நிலையத்தில் அமர்ந்து பக்தர்கள் பகவானை தியானித்து மனதில் ஏற்பட்ட மனச்சுமைகளை குறைத்துக் கொள்ளலாம்.

உடனேயே.. துரோணர் ஆயுதங்களை விட்டெறிந்து விட்டு, தரையில் அமர்கிறார். த்ருஷ்டத்யும்னன் உடனே வேகமாக அருகில் சென்று தனது வாளால் அவரது தலையை வெட்டுகிறான்.

தர்மபுத்திரர் என்ற சத்ய சந்தரான யுதிஷ்டிரர், உண்மை சொன்னாலும், ... உள் நோக்கம் தவறாக இருந்தது. மூன்றாவது வார்த்தைதனை மெதுவாகக் கூறியதால், எப்போதும் தரையை தொடாமல் ஓடிக்கொண்டு இருக்கும் அவரது தேர் சக்கரங்கள் தரையைத் தொட்டன.

(சில கிரந்தங்களில், மூன்றாவது வார்த்தையை கூறும்போது, ஸ்ரீகிருஷ்ணரின் சங்கொலி அதை கேட்காமல் செய்தது என்று உள்ளது. ஆனால் வியாசர் அருளிய மூல காவியத்தில் அவ்வாறு இல்லை).

### யுதிஷ்டிரரின் இறுதி ஸ்வர்கரோஹணம்:

தனது 72வது வயதில் ஹஸ்தினாபுரத்தின் மன்னனாக முடி சூடி 36 ஆண்டுகள் ஆட்சி செய்கிறார். 108வது வயதில் ஸ்வர்காரோஹணத்தின் போது அவரது உத்தமமான நெறி கொண்ட இயல்புக்கு சான்றாக ஒரு சம்பவம். தனது தம்பியர் மற்றும் திரௌபதியுடன் ஸ்வர்கம் செல்ல மேரு மலையை கடக்கிறார். அப்போது ஒரு நாய் அவர் கூடவே வருகிறது. திரௌபதி, பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் அனைவரும் ஒவ்வொருவராக கீழே விழுந்து மடிகின்றனர். தர்மபுத்திரர் மட்டும் நாயுடன் முன்னேறுகிறார்.

தர்மராஜன் அவர் முன் தோன்றி அவருக்கு ஸ்வர்க பதவி அளிப்பதாகவும், அந்த நாயை விட்டு விட்டு வரும்படியும் ஆணையிடுகிறார். யுதிஷ்டிரனோ, உயிரற்றவர்களை விட்டு வரலாமேத் தவிர, ஆத்மாவுடன் உயிர் கொண்டுள்ள நாயை விட்டு வர மாட்டேன். அந்த ஸ்வர்கம் எனக்கு தேவையும் இல்லை என்று மறுக்கிறார். யுதிஷ்டிரரின் உத்தமமான கருணை நிறைந்த பதிலை கேட்டு தர்மராஜன் அகமகிழ்ந்தான். யுதிஷ்டிரரை சோதிக்க நாயாக வந்த தேவேந்திரன் சுய உருக்கொண்டு யுதிஷ்டிரனை ஸ்வர்கத்திற்கு அழைத்துச் செல்கின்றான்.

சற்று விரிவாக பார்த்தால் கூட, பக்கங்கள் பல தொடரும் மிக மிக சுருக்கமாக, யுதிஷ்டிரர் என்பவர் யார்? அவரது பெருமைகள் என்ன என்பதை ஸப்தகிரி வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டு விடை பெறுகிறோம்.

## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*தத்ராந்தரே மது$_4$ரமங்க$_3$லபூ$_4$ தபுர்யோர்நித்யஸ்தி$_2$தீ*
*ச்ருதிதத$_3$ங்க$_3$விதெ$_3$ள குலீநெள ।*
*த்$_3$வாவம்பு$_3$ருண்நயந கேசவஸோமயாஜி*
*நாமாந்விதாவப$_4$ஜதாம் பரிணேதுகாமெள॥*

(2)

**இவ்வாறிருக்கையில், நற்குடிப்பிறந்தவர்களாய், வேத வேதாங்கங்கள் கற்றவர்களான – மதுரமங்கலத்தில் நித்ய வாஸம் செய்யும் கமல நயநபட்டரும், ஸ்ரீபெரும்பூதூரில் நித்ய வாஸம் செய்யும் கேசவஸோமயாஜியும் அவ்விரு ஸஹோதரிகளில் ஒவ்வொருத்தியை மணம் புரிய விரும்பி திருமலைநம்பியிடம் வந்தார்கள்.**



–“ஸுதர்சனம்” ஆசிரியர் இயற்றியது



நீதி கதைகள்

# கு(ரு)ட்டு நம்பிக்கை



அறிவு மிகுந்த பெரியவர் ஒருவர் தன் வீட்டில் தினமும் மாலை வேளையில் ஆறு மணி முதல் ஏழு மணி வரை பக்திப் பாடல்களை இசையுடன் மனமுருகப் பாடி வருவார். அக்கம் பக்கத்திலுள்ள சிறுவர் சிறுமியர்களும் அவருடன் பஜனையில் பங்கு கொண்டு இன்புறுவது வழக்கம். பஜனை முடிந்தவுடன் சுண்டல் பிரசாதம் அனைவருக்கும் வழங்கப்படும்.

உற்சாகம் மிகுந்த சிறுவன் ஒருவன், ஒருநாள் பஜனை முடிந்து சுண்டல் விநியோகம் நடைபெற்ற சமயம் பெரியவரிடம் வந்து, "நாம் பக்தியுடன் கடவுளை மனமுருகப்பாடி வருகிறோம் என்பது உண்மை. ஆனால் அவர் நமக்கு காட்சி தருவதில்லை. ஆகையால், சிலர் நம்மை நோக்கி குருட்டு நம்பிக்கை கொண்டவர்கள்" என்று கேலி செய்கிறார்கள். கண்ணுக்குப் புலப்படாத கடவுளை நாம் எப்படி நம்புவது? என்று துணிச்சலாகக் கேட்டான்.

மதி நுட்பம் மிகுந்த அப்பெரியவர், அவன் விடுத்த வினாவிற்கு விடை ஏதும் பகராமல், சிரித்துக் கொண்டு அச்சிறுவனின் தலையில் விளையாட்டாக ஒரு குட்டு குட்டி "போக்கிரிப் பயலே" என்று சொல்லி அனுப்பி விட்டார்.

மறுநாள் பஜனைக்கு வந்தபொழுது அச்சிறுவன் அப்பெரியவரிடம் "என்ன தாத்தா! நேற்று நான் கேட்ட கேள்விக்கு தாங்கள் விடை ஏதும் அளிக்கவில்லையே!" என்றான். உடனே அப்பெரியவர் "நான் தான் நேற்று உடனேயே பதில் கொடுத்து விட்டேனே" என்றார். பதில் ஏதும் கூறாமல் தாங்கள் என் தலையில் ஒரு குட்டுதானே குட்டினீர் என்று சிறுவன் சொல்ல, பெரியவர் தொடர்ந்தார். "குட்டு தான் பதில்" அந்த குட்டு உனக்கு சிறிது வலியைக் கொடுத்து இருக்கும் அல்லவா? ஆனால் அந்த வலியை நீயும் கண்ணால் காணவில்லை. நாங்களும் பார்க்க முடிய வில்லை. வலி இருந்ததாக எப்படி நம்புவது? கடவுள் நிலையும் வலி போன்றதே.


– திரு. டி.ரங்காசாரி, திருவரங்கம்.

# மங்கள சுலோகங்கள்



ப்ரம்மா முராரிஸ் த்ரிபுராந்தகஸ்ச
பா நுஹ் சசீ பூமிஸுதோ புதஸ்ச ।
குருஸ்ச சுக்ரஹ் சனிராஹு கேதவ ஹ
சூர்வந்து ஸர்வே மம ஸுப்ரபாதம் ॥

பிரம்மா, முராரி (விஷ்ணு), முப்புரம் எரித்தோன் (சிவன்), சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு (வியாழன்), சுக்ரன் (வெள்ளி), சனி, ராகு, கேது ஆகியோர் அனைவரும் என் காலைப்பொழுதை நல்லதாகச் செய்வார்களாக.


சித்திரக் கதை
வாழ்வு வளம் பெற!
கதை மூலம் & சித்திரம்: திரு. தும்பலி சிவாஜி
சித்தப்பன் மாடு மேய்ப்பவன். தினமும் ஊருக்கு அருகில் உள்ள மலைப்பகுதியில் மேய்ச்சலுக்காக மாடுகளை அழைத்துச் செல்வான்.
சித்தப்பனுக்கு தெய்வபக்தி அதிகம். தினமும் இறைவனைத் தொழுதும், தனது பணிகளை செய்தும் காலத்தை கழித்து வந்தான்.
ஸ்வாமி! நீ எங்கு எப்படி இருக்கின்றாய் என்பதை நான் அறியேன். நானோ, தங்களிடம் வர இயலாதவன். நீயோ கிடைப்பதற்கரியவன். என் தவறுகளைப் போக்கி அருள் புரியுங்கள் ஸ்வாமி.
ஒருநாள் சித்தப்பன் மாடுகளை மேய்த்துக் கொண்டு மரநிழலில் அமர்ந்து இருக்கும்போது ஒரு வைஷ்ணவ ஸ்வாமிகள் அவ்வழியாகச் செல்வதை கவனித்தான்
அப்பாடா! என் துன்பத்தை தீர்ப்பதற்காகவே ஸ்வாமிகள் என் முன் தோன்றியுள்ளார். சென்று அவரை வணங்குவோம்.
1
வணங்குகிறேன் ஸ்வாமி! கடவுளாக தென்பட்டீர். என் துன்பத்தை எவரிடம் சொல்வது... என் வாழ்வு கேள்விக்குறியாக உள்ளது. சிறப்பாக அமைத்துக் கொள்வதற்கான வழி இருந்தால் கூறுங்கள் உங்களுக்கு புண்ணியமாக இருக்கும்.
இதோ பார் அப்பா! நீ சிறந்த பாண்டித்தியம் உடையவனாய் காணப்படுகிறாய். இவ்வெண்ணம் வந்ததெனில் அது இறைவனின் கிருபையே. உனக்கு என்ன வேண்டும் கேள்... உனக்கு புரியும்படி நான் கூறுகின்றேன்.
என்னவோ ஸ்வாமி! எதை கேட்க வேண்டும் எனத் தெரிய வில்லை. நான் நற்கதி அடைய இறைவன் எனக்கு அருள வேண்டும்.
உன் கோரிக்கையை சொல்வாய் என நினைத் தேன். தன்யனாவாய்
சித்தப்பனுடன் உரையாடுவது ஸ்வாமிக்கு சுவாரஸ்யமாக இருந்தது. அப்பாவியான சித்தப்பனின் சந்தேகங்கள் அவரை ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்த்தியது.
2
சித்தப்பனின் லௌகீகத்திற்கு அப்பாற்பட்டு கேட்கப்பட்ட பல கேள்விகள் அவரை ஆச்சரியப்படுத்தின. சித்தப்ப னின் மனநிலைக்கு ஏற்ப அனைத்து பகவத்கதைகளையும் அந்த வைஷ்ணவ ஸ்வாமிகள் போதித்தார்.



வைஷ்ணவ ஸ்வாமிகள் கூறிய பகவத் கதைகள் சித்தப்பனை வேறொரு உலகத்திற்கே அழைத்துச் சென்றன. கண்களை மூடினாலும் திறந்தாலும், எப்பணியைச் செய்தாலும் அவை எப்பொழுதும் நினைவிற்கு வந்து கொண்டிருந்தன.
ஸ்ரீகிருஷ்ண லீலைகள் எத்தருணமும் நினைவிற்கு வந்து கொண்டிருந்தன. தினமும் உறக்கத்திலிருந்து எழுந்தது முதற்கொண்டு அன்றைய பணி முழுவதிலும் இறைவனின் நினைவே வந்தது.
இறைவனே! இது என்ன மாயை!
பரமாத்மா! அற்பமானவனான நான் உன் லீலைகளை என்னவென்று புகழ்வேன்.
அந்த ஸ்வாமிகள் கூறியது போல்... தினமும் ஒவ்வொரு நொடியும் அந்த இறைவனை நினைத்துக் கொண்டிருக்கின்றேன். சரி. ஆனால், இரவும் பகலும் அந்த இறைவன் மீண்டும் மீண்டும் காட்சி தந்து என் பணிகளை தடைபடுத்துகின்றாரே? இவ்வாறு ஏன் நடைபெறுகிறது. நான் ஏதாவது தவறு செய்து விட்டேனா. அறிந்தோ, அறியாமலோ ஏதாவது தவறு புரிந்திருந்தால், அந்த இறைவனுக்கு கோபம் ஏற்படின் பிறகு என் நிலை என்ன? இன்று எப்படியாவது ஸ்வாமிகளைப் பார்த்து இதை கேட்க வேண்டும்.
3
வணங்குகிறேன் ஸ்வாமி! என்னை தாங்களே காப்பாற்ற வேண்டும்.
என்ன நடந்தது அப்பா! ஏன் கவலையுடன் காணப் படுகின்றாய். என்ன விஷயம் கூறு...
எனக்கு முப்பொழுதும் அந்த இறைவனே காணப்படுகின்றார். எப்பொழுதும் இறைவன் உள்ளது போன்றே என் மனம் உணருகின்றது. நான் ஏதாவது தவறு புரிந்தேனோ தொடர்ந்து காணப்பட்டு என் பணிகளை தடைபடுத்துகின்றாரே. தாங்கள் கூறியது போன்று என் பணிகளை நான் செய்தாலும் அந்த இறைவனே செய்வதுபோன்ற பிரமை உண்டாகின்றது. அது சரியா? தவறா? என்று தெரியவில்லை.
அப்பனே! மிகவும் அதிர்ஷ்டசாலியானாய். உன் பெயர் நிலைக்கும்படி நீ பகவத் சித்தியடைந்தாய்.
ஸ்வாமி எனக்கு ஒன்றுமே புரிய வில்லை. எனக்கு அவ்வளவு அதிர்ஷ்டமா?
ஆம் அதிர்ஷ்டம் உனதே. ஒவ்வொரு மனிதனும் தன் பணிகளை தானே செய்து ஒவ்வொரு பணியையும் பகவத் அர்பனமாண மனதுடன் செய்தல் வேண்டும். அப்பொழுதே வாழ்வு சிறக்கும். தொடர்ந்து இறைவனின் நாமத்தை துதித்து, யாருக்கும் தீங்கு செய்யாமல், மற்றவருக்கும் உதவி புரிந்து வாழ்தல் வேண்டும். அதுவே மாதவ சேவையாகும்.
4
வைஷ்ண ஸ்வாமிகள் கூறிய ஞான போதனையுடன் சித்தப்பன் தன் வாழ்வை பரோபகார புத்தியுடன் நடத்தினார்.
அடுத்த இதழில் மற்றொரு கதையை படித்து மகிழலாம்...
முற்றும்.

# பல் சுவை பகுதி

1. தூணில் இருந்து வெளிப்பட்ட திருமால் அவதாரம் ?
   அ) கூர்மம் ஆ)நரசிம்மர் இ) பரசுராமர்
2. மேருமலையை தாங்கிய திருமால் அவதாரம்?
   அ) நரசிம்மம் ஆ) மச்சம் இ) கூர்மம்
3. கையில் கோடாரி ஏந்திய திருமாலின் அவதாரம்?
   அ) பரசுராமர் ஆ) கிருஷ்ணர் இ) இராமர்
4. திருவேங்கடவனை பல்லாயிரக்கணக்கான பாடல்களால் பாடியவர்?
   அ) துளசிதாசர் ஆ) கம்பர் இ) அன்னமய்யா
5. பிரகலாதன் யாருடைய மகன்?
   அ) இராவணன் ஆ) இரண்யன் இ) மதுகைடபர்

**விடைகள்**
1) ஆ, 2) இ, 3) அ, 4) இ, 5) ஆ

## பொருத்துக...

| | | |
|---|---|---|
| 1.திருமலை | - | அ.நவநரசிம்மர் |
| 2.திருச்சி | - | ஆ.மாரியம்மன் |
| 3.சமயபுரம் | - | இ.யோகநரசிம்மர் |
| 4.சோளிங்கர் | - | ஈ.பிள்ளையார் |
| 5.அகோபிலம் | - | உ.திருவேங்கடவன் |

**விடைகள்**
1.உ, 2.ஈ, 3.ஆ, 4.இ, 5.அ.



## தெரிந்து கொள்ளலாமே...

ஸ்ரீராம ராமேதி ரமே ராமே மனோரமே
சஹஸ்ர நாம தத்துல்யம் ஸ்ரீராமநாம
வராணனே!

திருமாலுக்குரிய (சஹஸ்ர)
ஆயிர நாமங்களில் சிறந்தது
இந்த ஸ்ரீராம நாமமே!

## வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும் ...

ஸ்ரீநரசிம்ம பக்திக்கு எடுத்து பிரகலாதனின் அருள் அவதாரம் திருமால் மெச்சி புரிந்தார்

பிரகலாதனின் பக்திக்கு மெச்சி திருமால் ஸ்ரீநரசிம்ம அவதாரம் எடுத்து அருள் புரிந்தார்

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



அருகிலுள்ள சித்திரத்தை இக்கட்டத்தில் வரையுங்கள்...

## விடுகதைப் பகுதி...

1. வாலால் நீர் குடிக்கும், வாயால் பூச்சொறியும் ?
2. கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவான்?
3. ஐந்து நதிகளுக்கு ஒரே பாலம்?

**விடைகள்**
1.திரி, 2.மெழுகுவர்த்தி, 3. உள்ளங்கை



*Edited and Published on behalf of T.T.Devasthanams by **Prof. K.Rajagopalan**, Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. P. Ramaraju**, M.A., Special Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati - 517 507.*

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்



21-04-2021 அன்று அனுமன் அவதாரத்தலம் திருமலையே என்று திருமலை திருப்பதி தேவஸ்தானம் அறிவித்தபோது



13-04-2021 அன்று திருப்பதியில் மஹதி கலையரங்கில் தி.தி.தே. நடத்திய பிலவ நாம வருட உகாதி கொண்டாட்ட நிகழ்ச்சி



18-04-2021 அன்று ஸ்ரீராமாநுஜசாரியரின் 1005வது அவதாரத்தை முன்னிட்டு திருமலையில் ஸ்ரீபெரியஜீயர் மடத்தில் நடைபெற்ற இராமாநுஜர் நூற்றந்தாதி திவ்ய பிரபந்த பாராயண மஹோத்ஸவ காட்சி



13-04-2021 அன்று திருவேங்கடமுடையான் ஆலயத்தில் உகாதி ஆஸ்தானத்திற்குப் பிறகு ஸ்ரீவைகானச ஆகம சாஸ்திர நூல் வெளியிட்டபோது



01-05-2021 அன்று திருமலையில் பணி செய்த தூய்மைப் பணியாளர்களுக்கு ஹெல்த்கிட் வழங்கிய தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள்


வினரோ பாக்யமு விஷ்ணுகத...!!